பக்கங்கள்: பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 19 வள்ளுவர் ஆண்டு 2035 ஐப்பசி 14 சனிக்கிழமை (30-10-2004) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:340

## வீதி விபத்துக்களால் அவலச்சாவுகள் அதிகரிப்பு

# மோ. சைக்கிளிலிருந்து வீசப்பட்ட பல்கலைக்கழக மாணவன் மரணம்!



யாழ்ப்பாணம்,ஒக்.30

வேகமாகச் செலுத்திய மோட்டார் சைக்கிள் வேகக் கட்டுப்பாட்டை இழந்த போது அதைச் செலுத்திச் சென்ற பல்கலைக்கழக மாணவன் தூக்கி வீசப்பட்டு உயிரிழந்தார். மற்றொருவர் காயமடைந்தார்.

யாழ். தொழில்நுட்பக் கல்லூரிக்கு முன்பாகச் செல்லும் வீதியில் - தேவாலயம் ஒன்றுக்கு அருகே - நேற்று முற்பகல் 11 மணியளவில் இந்த விபத்துச்சம்பவம் இடம்பெற்றது.

யாழ். பல்கலைக்கழக கலைப்பீடத்தைச் சேர்ந்த, இந்து மெய்யியல் சிறப்புக்கலை இரண்டாம் வருட மாணவனான சீவரெத்தினம் விவேகானந்தமூர்த்தி (வயது 22) என்ற மாணவனே உயிரிழந்தவராவார். இவர் மட்டக்களப்பு காரைதீவைச் சேர்ந்தவர்.

வேகமாகச் செலுத்திச்சென்ற மோட்டார் சைக்கிள் வீதியில் திடீரெனச் சறுக்குண்ட போது அதைச் செலுத்திச்சென்ற பிரஸ்தாப மாணவன் தூக்கி வீசப்பட்டார் என்றும் -

(16ஆம் பக்கம் பார்க்க)

## விஞ்ஞான கண்காட்சி இன்று நடைபெறாது

யாழ்ப்பாணம்,ஒக்.30

யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்தில் நடைபெற்றுவந்த விஞ்ஞானக் கண்காட்சி தவிர்க்க முடியாத காரணத்தினால் இன்று சனிக்கிழமை நடைபெறமாட்டாதென யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீடாதிபதி பேராசிரியர் ஆர். குமாரவடிவேல் அறிவித்துள்ளார்.

இக்கண்காட்சி நாளை மறுதினம் முதலாம் திகதி திங்கட்கிழமையும், 2ஆம்திகதி செவ்வாய்க்கிழமையும் நடைபெறும் என்று அவர் அறிவித்துள்ளார்.

(8)

## நாட்டின் யாப்பை மீறும் செயலை அரசு செய்தால்

# ஆளும் தரப்பைப் பின்பற்றி புலிகளும்

# தனி அரசமைப்பை உருவாக்கலாம்

## எதிர்க்கட்சித் தலைவர் ரணில் எச்சரிக்கை



கொழும்பு,ஒக்ரோபர்30

**நடைமுறையில் உள்ள அரசமைப்பை புறம் ஒதுக்கி - உதாசீனம் செய்து - அதற்கு விரோதமான, முரணான முறையில் புதிய அரசமைப்பு ஒன்றை ஆளும் கட்சி கொண்டுவர முயல்கின்றது.**

**கொழும்பில் அப்படிச் செய்ய முடியுமானால் வடக்கு - கிழக்கில் விடுதலைப் புலிகளும் தமக்கென ஓர் அரசமைப்பை உருவாக்கலாம். அதைத் தடுக்க இடமில்லாமல் போய்விடும்.**

**- இப்படி எச்சரித்திருக்கின்றார் எதிர்க்கட்சித் தலைவரும், ஐக்கிய தேசியக் கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க.**

சர்வதேச ஜனநாயக யூனியன் (ஐ.டி.யூ.) - ஆசிய பசுபிக் ஜனநாயக யூனியன் (ஏ.பி.டி.யூ.) அமைப்பினால் ஒழுங்குபடுத்தப்பட்ட கருத்தரங்கு ஒன்று நேற்றுக் கொழும்பு தாஜ் சமுத்திரா ஹோட்டலில் நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு பிரதான உரை நிகழ்த்துகையிலேயே அவர் இவ்வாறு எச்சரிக்கை விடுத்தார். வெளிநாட்டுப் பிரதிநிதிகள் பெரும் எண்ணிக்கையில் இந்தக் கருத்தரங்கில் பங்குபற்றினர்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசு, தற்போதைய அரசமைப்பை குறுக்கு வழியில்

(16ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கையர் ஈராக்கில் கடத்தப்பட்டார்

கொழும்பு,ஒக்.30

ஈராக்கில் ட்ரக் வண்டிச் சாரதியாக பணியாற்றிவந்த இலங்கையர் எனத் தெரிவிக்கப்படும் தினேஷ் தர்மேந்திரா என்பவர் 'அன்ஸாருல் சுன்னா' எனும் ஈராக்கிய இயக்கத்தால் கடத்தப்பட்டார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அவருடன் பணிபுரிந்த சக சாரதியான ராஜரட்ணம் எனும் பங்களாதேஷ் நாட்டவரும் ஒரே சமயத்தில் கடத்தப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

தினேஷ் தர்மேந்திரா இலங்கையர்தானா என்பதை உறுதிசெய்ய லெபனானில் உள்ள இலங்கைத் தூதுவர் எம்.எம்.எம்.பாறூக் முயன்று வருகிறார்.

(16ஆம் பக்கம் பார்க்க)

## அகாஷி - ஜனாதிபதி நேற்றுச் சந்திப்பு!

கொழும்பு,ஒக்.30

ஜப்பானிய விசேட தூதுவர் யசூஷி அகாஷி ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை அவரின் மாளிகையில் நேற்றுமாலை சந்தித்தார்.

சந்திப்பின்போது, சமாதான முயற்சியின் அண்மைய விருத்திநிலை குறித்து அகாஷிக்கு ஜனாதிபதி விவரித்தார் என்றும் -

இயன்ற விரைவில் இலங்கை அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான நேரடிப் பேச்சு ஆரம்பிப்பதன் முக்கியத்துவம்

(16ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளுக்கு எதிரான புதிய சம்மேளனம் கொழும்பில் நேற்று அங்குரார்ப்பணம்

## ஜே.வி.பி. தலைமை; கருணா கட்சி, ஈ.பி.டி.பியும் உள்ளடக்கம்

கொழும்பு,ஒக்.30

விடுதலைப் புலிகளுக்கு எதிரான சக்திகளை ஒன்று திரட்டி புதிய சம்மேளனம் ஒன்று நேற்றுக்கொழும்பில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

ஜே.வி.பியின் தலைமையில் அமைக்கப்பட்டுள்ள இந்த அமைப்பில் கருணாவின் அரசியற் கட்சியும் கூட்டுச் சேர்ந்துள்ளது.

நேற்றுப் பண்டாரநாயக்க ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற கூட்டத்தில ஜே.வி.பி.யின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ஸ, கருணாவின் அரசியற் கட்சியான தமிழீழ மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் செயலாளர் ரீ.ராஜரட்ணம் (மனோமாஸ்டர்), ஈ.பி.டி.பியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிவதாசன், ஈ.பி.ஆர்.எல்.எவ். முன்னாள் தலைவர் வரதரின் அணியைச் சேர்ந்தவரும்,

(16ஆம் பக்கம் பார்க்க)

# ஆளுநரின் யாழ். விஜயத்துக்கு பொது அமைப்புகள் ஆட்சேபம்

## போராட்டம் நடத்துவதற்கும் முஸ்தீபு

யாழ்ப்பாணம்,ஒக்.30

வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் அசோக ஜெயவர்த்தன யாழ்ப்பாணத்துக்கு மேற்கொள்ளவிருக்கும் விஜயம் தற்போதைய சூழ்நிலையில் பொருத்தமற்றது என்று ஆட்சேபம் தெரிவித்திருக்கிறது யாழ். மாவட்ட பொது அமைப்புகளின் ஒன்றியம்.

ஆளுநர் அசோக ஜெயவர்த்தன எதிர்வரும் நவம்பர் 3ஆம் திகதி யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்யவுள்ளார். அதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

அவரது விஜயம் தொடர்பாக யாழ். மாவட்ட பொது அமைப்புகளின் ஒன்றியம் கடிதம் ஒன்றை அவருக்கு அனுப்பிவைத்திருக்கின்றது.

அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

தாங்கள் அடுத்த வாரம் யாழ்ப்பாணம் விஜயம் செய்யவிருப்பதாக செய்திகள் வெளியாகியுள்ளன. வாழ்வா? சாவா? என தமிழ் மக்கள் தத்தளித்துக்கொண்டிருக்கும் சூழ்நிலையில் எந்தவித தீர்வுமற்ற நிலையில் தாங்கள் யாழ். வருவதை முற்றாக எதிர்க்கின்றோம். நீங்கள் வருவதை எந்தவொரு தமிழனும் விரும்பவில்லை.

இலங்கை அரசுக்கும், தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பிற்கும் இடையில் புரிந்துணர்வு உடன்பாடு கைச்சாத்திடப்பட்டு சுமார் ஆயிரம்

(2ஆம் பக்கம் பார்க்க)



விடுதலைப் புலிகளுக்கு எதிரான சக்திகள் நேற்றுக் கொழும்பில்கூடி சம்மேளனம் ஒன்றை அங்குரார்ப்பணம் செய்த கூட்டத்தில் எடுக்கப்பட்ட படம்.

படத்தில் நடுவில் இருப்பவர் ஜே.வி.பி. பிரசார செயலாளர் விமல் வீரவன்ஸ. அவருக்கு வலப்பக்கத்தில் இருப்பவர் ஜாதிகஹெல உறுமயவின் செயலாளர் உடுவே தம்மாலோக தேரர். இடப்பக்கத்தில் இருப்பவர்தான் கருணாவின் அரசியல்கட்சியான தமிழீழ மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் செயலாளர் எனக்கூறப்படும் ரீ.ராஜரட்ணம் (மனோமாஸ்டர்).

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# ஜே.வி.பி. தலைவர்கள் நேற்று அகாஷியைச் சந்தித்துப் பேச்சு

## நிதி உதவிகளை நாட்டுக்கு வழங்கக் கோரிக்கை

கொழும்பு,ஒக்.30

'இனப்பிரச்சினை தொடர்பான பேச்சுகளில் வெளிநாட்டவரின் தலையீடுகள் இருக்கக் கூடாது; நோர்வே அனுசரணையாளர்கள் பேச்சுக்களில் இருந்து விலகிக்கொள்ளவேண்டும்' என்றெல்லாம் கோஷம் எழுப்பிக் கொண்டிருந்த ஜே.வி.பியினர் நேற்று முதன் முறையாக ஜப்பானிய விசேட தூதுவர் யசூசி அகாஷியைச சந்தித்துப் பேசினர்.

ஜப்பானியத் தூதுவருக்கும், ஜே.வி.பியினருக்கும் இடையிலான இந்தப் பேச்சுக்கள் கொழும்பு அத்திட்டியவில் உள்ள ஜே.வி.பி. தலைமை அலுவலகத்தில் நடைபெற்றன.

ஜே.வி.பி. தலைவர் சோமவன்ஸ அமரசிங்க தலைமையிலான அதியுயர்பீட உறுப்பினர்கள் சிலர் மட்டுமே இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டனராம்.

ஜப்பானிய விசேட தூதுவர் யசூசி அகாஷியுடன் இலங்கையில் உள்ள ஜப்பானியத் தூதுவர் அகியோ சூடாவும் இச்சந்திப்பில் கலந்து கொண்டார்.

இந்தச் சந்திப்பின்போது சமாதானப் பேச்சுக்கள் தொடர்பாக ஜே.வி.பியின் நிலைப்பாடுகளை சோமவன்ஸ அமரசிங்க ஜப்பானிய விசேட தூதுவரிடம் தெளிவுபடுத்தினார்.

அதேவேளை, வடக்கு - கிழக்கில் மட்டுமல்ல, நாட்டின் தென்பகுதியிலும் விடுதலைப் புலிகள் அரசியல் படுகொலைகளில் ஈடுபடுகின்றார்கள் எனக் கண்டனம் தெரிவித்த ஜே.வி.பியினர், இவ்விடயம் தொடர்பாக ஜப்பானியத் தூதுவர் கூடிய கவனம் செலுத்தவேண்டும் எனவும் கேட்டுக்கொண்டனராம்.

சமாதானப் பேச்சுக்களைக் காரணம்காட்டி இலங்கையின் அபிவிருத்திக்கான உலக நாடுகளின் உதவியைத் தடைசெய்யக்கூடாது என்றும் அவர்கள் கேட்டுக்கொண்டனர் என ஜே.வி.பி. வட்டாரங்கள் தெரிவித்தன.

(ஐ-க)

# கல்வி நிறுவன ஆண்டு விழா

யாழ்ப்பாணம்,ஒக்.30

நல்லூர் என்.ஈ.ஐ. (N.E.I.) கல்வி நிறுவனத்தின் ஆண்டு விழாவும் பரிசளிப்பு வைபவமும் இன்று சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணி முதல் நல்லூர் திவ்யஜீவன சங்க மண்டபத்தில் நடைபெறவிருக்கின்றன.

செல்வன் ச.சாருஜன் தலைமையில் விழா நடைபெறும். பிரதம விருந்தினராக சட்டத்தரணி க.கேசவனும், சிறப்பு விருந்தினராகத் தமிழீழ மாணவர் அமைப்பின் யாழ். மாவட்டப் பொறுப்பாளர் ச.எழிலன்பன், முன்னாள் மாநகர சபை ஆணையாளர் சீ.வி.கே.சிவஞானம் ஆகியோரும் கலந்துகொள்வர்.

மாணர்களின் கலை நிகழ்ச்சிகள் விழாவில் இடம்பெறவுள்ளன. (ஐ)

# போக்குவரத்து ஆணைக்குழுவின் ஆலோசகர் சுடப்பட்டார்!

## நாரஹறன்பிட்டியவில் நேற்றுச் சம்பவம்

தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் ஆலோசகரான அசோக குணசேகர என்பவர் நேற்றுக்காலை கொழும்பு நாரஹறன்பிட்டியவில் மோட்டார் வாகனப் பதிவுத் திணைக்களத்திற்கு முன்னால இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் பலத்த காயமடைந்தார்.

நேற்றுக்காலை 9 மணியளவில் சில ஆயுததாரிகள் அவரைச் சுட்டுவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர். ஆபத்தான நிலையில் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட அவர், தீவிர சிகிச்சைக்குட்பட்டுள்ளார்.

பஸ்சேவைக்கான சகல அட்டவணைகளையும் தயாரிக்கும்பொறுப்பு குணசேகரவிடம ஒப்படைக்கப்பட்டிருந்தது.

அதையொட்டி ஏற்பட்ட பிரச்சினைகள் காரணமாகவே இவர் சுடப்பட்டிருக்கலாம் எனப் போக்குவரத்து அமைச்சின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இச்சம்பவம் குறித்துப் பொலீஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். ஆயுதாரிகளைக் கைதுசெய்ய பொலீஸ் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன. (ஐ-க)

# சமாதான ஆலோசனைக் கவுன்ஸிலில் முஸ்லிம் காங்கிரஸ் இனிப் பங்கேற்கும்

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அடுத்தமாதம் 2ஆம் திகதி நடைபெறவுள்ள சமாதானத்திற்கும், நல்லெண்ணத்துக்குமான தேசிய ஆலோசனைக் கவுன்ஸில் (என்.ஏ.சி.பி.ஆர்.) கூட்டத்தில் கலந்து கொள்வதெனத் தீர்மானித்துள்ளது.

முஸ்லிம் காங்கிரஸின் இத்தீர்மானத்திற்கு அமைவாகக் கட்சியின் அதியுயர்பீட உறுப்பினரும், அரசியல் விவகாரங்களுக்கான சபையின் அங்கத்தவருமான சட்டத்தரணி நிஸாம் காரியப்பர் மற்றும் அரசியல் விவகாரசபை உறுப்பினர் சட்டத்தரணி எம்.எச்.எம்.சல்மான் ஆகியோர் கலந்துகொள்வார்கள் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் செயலாளர் எம்.ரி.ஹஸன் அலி தெரிவித்தார்.

கட்சியின் இந்த முடிவு குறித்து அரசின் சமாதானச் செயலகத்திற்கும் நேற்று உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டது என்றும் அவர் மேலும் சொன்னார். (ஐ-க)

# 'செவ்விளக்கு' நாடகம் இறுதி நேர்த்தில் ரத்து

யாழ். பல்கலைக்கழகத்தில் நேற்று மாலை நடைபெறவிருந்த 'செவ்விளக்கு' அரங்க நிகழவு இறுதி நேரத்தில் ரத்துச்செய்யப்பட்டது.

பல்கலைக்கழக கலைப்பீட மாணவர் ஒருவர் வீதி விபத்தில் உயிரிழந்ததை அடுத்தே அவரது மறைவுக்கு அனுதாபம் தெரிவிக்கும் வகையில் நாடகம் ஒத்திவைக்கப்பட்டது.

சீன ஒபேரா வடிவமான 'செவ்விளக்கு' நாடகம் 29, 30, 31 ஆகிய தினங்களில் மேடையேற்ற முன்னர் ஏற்பாடாகி இருந்தது. ஆயினும் கால நிலை காரணமாக நேற்று ஒரு நாள் மட்டும் நாடகத்தை மேடையேற்ற முடிவுசெய்யப்பட்டிருந்தது.

இந்த நாடகம் மேடையேற்றப்படும் புதிய திகதி பின்னர் அறிவிக்கப்படும் என்று ஏற்பாட்டாளர்கள் அறிவித்திருக்கின்றனர். (ஐ)

# ஆளுநரின் யாழ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாள்களாகிவிட்டன. ஆயினும், இவ்வுடன்பாட்டில் சொல்லப்பட்ட அம்சங்களை நடைமுறைப்படுத்த இலங்கை அரசு தவறிவிட்டது. இதனால் வடக்கு - கிழக்குப் பகுதியில் மக்களின் இயல்பு வாழ்வு நிலை வழமைக்குத் திரும்பவில்லை. புலம்பெயர்ந்த மக்கள் தமது சொந்த இடங்களில் குடியமர முடியவில்லை. மக்களின் வாழ்விடங்களில் படையினர் நிலைகொண்டுள்ளனர்.

போரினால் உயிரிழந்து, உடைமையிழந்து, வாழ்வின் ஆதாரங்கள் அனைத்தையும் இழந்து பட்டினியுடன் வாழ்வை சுமந்து செல்லும் இந்த மக்களின் நிலை குறித்து அரசு கவனம் செலுத்தவில்லை. வடக்கு - கிழக்கு ஆளுநராக இருக்கும் தாங்களும் அரசுக்கு இடித்துச் சொல்லவில்லை. இந்த நாட்டில் அனைத்து உரிமைகளையும் பெறத்தகுதியுள்ளவர்களாக தமிழர்கள் இருந்து வருகிறார்கள். தமிழ் மக்களின் உணர்வுகளை நீங்கள் புரிந்துகொள்ள மறுக்கிறீர்கள்.

போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவியளிக்கவும், மீள்குடியமர்வு, புனர்வாழ்வு புனரமைப்பு, புனர்நிர்மாணப் பணிகளை மேற்கொள்ளவும், இயல்பு வாழ்வு நிலையைத் தோற்றுவிக்கவும் தமிழ் மக்களால் முன்மொழியப்பட்டு தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பினால் இலங்கை அரசிற்கு முன்வைக்கப்பட்ட இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை அலகும் இன்று கேள்விக்குறியாக மாறியுள்ளது. இது தொடர்பாக இலங்கை அரசு ஆக்கபூர்வமான நடவடிக்கை எதனையும் மேற்கொள்ளவில்லை. தமிழ் மக்கள் எதிர்பார்த்த இயல்பு வாழ்வுமில்லை. இடைக்கால அரசும் இல்லை. இலங்கை அரசு மீது தமிழ் மக்கள் நம்பிக்கையை முற்றாக இழந்துள்ளனர். இச்சூழ்நிலையில் அரசின் முக்கிய பிரதிநிதியான ஆளுநர்வரவை தமிழ் மக்கள் விரும்பவில்லை என்பதை தங்கள் கவனத்திற்குத் தருகின்றோம்.

வடக்கு - கிழக்குப் பகுதியில் பதற்றத்தைத தணித்து தமிழ் பேசும் மக்களின் இயல்பு வாழ்வு நிலையை உறுதிப்படுத்தி தமிழ் மக்களால் முன்வைக்கப்பட்ட இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபையை விடுதலைப் புலிகளிடம் வழங்கவும், அதுவே நீண்டகாலமாக புரையோடிப் போயிருக்கும் இலங்கையின் இனப்பிணக்கை தீர்த்து வைக்க உதவும். தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளுக்குத் தீவு காணாமல எந்தவோர் அரசுப் பிரதிநிதியும் இங்கு வருவதால் எதுவும் ஏற்படப்போவதில்லை.

பிரச்சினைகளுக்கு ஒரு நியாயபூர்வமான தீர்வைக் கொடுததால் நிச்சயம் தமிழ் மக்கள உங்களை வரவேற்பார்கள். அதுவரை பொறுத்திருங்கள். தமிழ் மக்களின் அங்கீகாரத்தோடு ஒரு சுமுகமான சூழ்நிலையில் தாங்கள் யாழ்ப்பாணம் வருவதே பொருத்தமானதாகவிருக்கும்.

தங்களின் யாழ்ப்பாண விஜயத்திற்கு பல்வேறு அமைப்புக்கள் எம்மிடம் ஆட்சேபம் தெரிவித்துள்ளன. தமிழ் மக்கள் மத்தியில் இது கோபத்தை ஏற்படுத்தியுள்ளது. ஆதலால் தற்போதைய சூழ்நிலையில் யாழ். வருவதைத் தாங்கள் நிறுத்திக் கொள்ளவும். எமது எதிர்ப்பை மீறி தாங்கள் யாழ். விஜயம் செய்தால் கடும் எதிர்ப்பைச் சந்திக்க நேரிடும் என்பதோடு, வெகுஜனப் போராட்டம் நடத்தப்படும் என்பதை அன்புடன் அறியத்தருகின்றோம்.

- இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# இந்திய மண்ணில் ஆஸி. வீரர்கள் டெஸ்ட் தொடரைக் கைப்பற்றினர்

## 35 ஆண்டுகளின் பின் சாதனை

நாக்பூர்,ஒக்.30

இந்திய - ஆஸ்திரேலிய அணிகளுக்கிடையே இந்தியாவில் நடைபெற்றுவரும் நான்கு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரின் மூன்றாவது போட்டியில் வெற்றியீட்டியதன் மூலம் 35 ஆண்டுகளின் பின்னர் இந்திய மண்ணில் டெஸ்ட் தொடர் ஒன்றை ஆஸ்திரேலிய அணி கைப்பற்றியுள்ளது.

ஏற்கனவே நடைபெற்று முடிந்த இரண்டு டெஸ்ட் போட்டிகளில் முதலாவது போட்டியை ஆஸ்திரேலிய அணி வென்றிருந்தது. சென்னையில் நடைபெற்ற இரண்டாவது போட்டி சமநிலையில் முடிவுற்றது. இதனையடுத்து மூன்றாவது போட்டியிலும் வெற்றியீட்டியதனால் ஆஸ்திரேலிய அணி 2 - 0 என்ற கணக்கில் தொடரைக் கைப்பற்றியுள்ளது.

ஆஸ்திரேலியா முதல் இன்னிங்ஸில் 398 ஓட்டங்கள் எடுத்தது. மார்ட்டின் 114 ஓட்டங்களும் கிளார்க் 91 ஓட்டங்களும் எடுத்தனர்.

முதல் இன்னிங்ஸைத் தொடங்கிய இந்திய அணி கிலெஸ்பியின் அபாரமான பந்து வீச்சால் 185 ஓட்டங்களுக்கு சுருண்டது.

213 ஓட்டங்கள் முன்னிலையுடன் 2ஆவது இன்னிங்ஸை ஆஸ்திரேலிய அணி ஆடியது. காடிச் அபாரமாக ஆடி 99 ஓட்டங்கள் எடுத்தார். 3 ஆவது நாள் ஆட்டநேர முடிவில் அந்த அணி 3 விக்கெட் இழப்பிற்கு 202 ஓட்டங்கள் எடுத்திருந்தது.

மார்ட்டின் 41 ஓட்டங்களுடனும் கிளார்க் 10 ஓட்டங்களுடனும் ஆட்டம் இழக்காமல் இருந்தனர். 4 ஆவது நாளான நேற்று இருவரும் தொடர்ந்து ஆடினர்.

இருவரும் இந்திய வீரர்களின் பந்து வீச்சை அடித்து ஆடினார்கள். அணியின் ஓட்ட எண்ணிக்கை 212ஆக இருந்தபோது மார்ட்டின் அரைச்சதம் எடுத்தார். அவர் 121 பந்துகளில் 5 பவுண்டரிகளுடன் அரைச்சதத்தைக் கடந்தார்.

அதிரடி ஆட்டத்தின் மூலம் ஆஸ்திரேலியா 92ஆவது ஓவரில் 300 ஓட்டங்களைப் பெற்றது.

மார்ட்டின் ஆட்டமிழந்ததும் அணித்தலைவர் கில்கிறிஸ்ட் 'டிக்ளேர்' செய்வதாக அறிவித்தார். அப்போது அணியின் ஓட்ட எண்ணிக்கை 5 விக்கெட்டுக்கள் இழப்பிற்கு 329 ஆக இருந்தது. முதல் இன்னிங்ஸில் ஆஸ்திரேலியா 213 ஓட்டங்கள் முன்னிலை பெற்றிருந்தது.

இதன்மூலம் இந்திய அணிக்கு வெற்றி இலக்காக 543 ஓட்டங்களை ஆஸ்திரேலியா நிர்ணயித்தது.

மிகக் கடினமான இலக்குடன் இந்திய அணி 2ஆவது இன்னிங்ஸைத் தொடங்கியது. ஷேவாக்கும், சோப்ராவும் தொடக்க வீரர்களாக களம் இறங்கினார்கள். உணவு இடைவேளை வரை இந்திய அணி விக்கெட் இழப்பின்றி ஓர் ஓட்டம் எடுத்திருந்தது. உணவு இடைவேளைககுப்பிறகு இந்திய அணி தொடர்ந்து ஆடியது.

4 ஆவது ஓவரில் கிலெஸ்பி வீசிய பந்தில் சோப்ரா ஆட்டமிழந்தார்.

2 ஓட்டங்கள் எடுத்த நிலையில் டிராவிட் ஆட்டமிழந்தார். அவரது விக்கெட்டையும் கிலெஸ்பி கைப்பற்றினார். இதையடுத்து டெண்டுல்கர் களம் இறங்கினார்.

அவர் அணியைச் சரிவில் இருந்து மீட்பார் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், ரசிகர்கள் அனைவரையும் அவர் ஏமாற்றம் அடையச் செய்தார். மக்ராத் வீசிய பந்தில் மார்ட்டினிடம் பிடி கொடுத்து டெண்டுல்கர் வெளியேறினார். அவர் 14 பந்துகளில் 2 ஓட்டங்கள் எடுத்தார்.

கடைசி விக்கெட்டான ஷஹீர்கான் களம் இறங்கினார். அப்போது இந்தியா 9 விக்கெட்டுக்கள் இழப்பிற்கு 148 ஓட்டங்கள் பெற்றிருந்தது.

அடுத்து அகர்கரும் ஷஹீர்கானும் அதிரடியாக விளையாடினார்கள். ஷஹீர்கான், வோர்ன் வீசிய ஓர் ஓவரில் 2 சிக்ஸர்கள் அடித்தார்.

இந்தியா 200 ஓட்டங்கள் எடுத்திருந்த போது ஷஹீர்கான் 27 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். அகர்கர் 44 ஓட்டங்கள் எடுத்து கடைசிவரை ஆட்டமிழக்காமல் இருந்தார்.

இதனால் ஆஸ்திரேலியா 4 போட்டிகள் கொண்ட தொடரில் 2 போட்டிகளை வென்று 35 வருடத்திற்குப் பிறகு இந்திய மண்ணில் தொடரைக் கைப்பற்றியுள்ளது. (10)

# சிலாபம் மீன் சந்தையில் நேற்றுப் பதற்ற நிலைமை!

## திடீரெனப் புகுந்த ஒரு குழுவினரால்!!

கொழும்பு,ஒக்.30

சிலாபம் மீன் சந்தைத் தொகுதியில் நேற்றுக்காலை ஏற்பட்ட பதற்றத்தையடுத்து அங்கு பலத்த பொலீஸ் பாதுகாப்புப் போடப்பட்டுள்ளது.

மீனவர்களை அச்சுறுத்தும் வகையில் குழு ஒன்று நேற்றுக்காலை சந்தைக்குள் பிரவேசித்ததையடுத்து அங்கு பதற்றம் ஏற்பட்டது எனக் கூறப்படுகின்றது.

வெளிமாவட்டங்களில் பிடிக்கப்படும் மீன் சிலாபத்துக்குக் கொண்டுவரப்பட்டு விற்கப்படுவதை ஆட்சேபித்து நேற்றுமுன்தினம் காலை சிலாபம் நகரசபைப் பகுதியில் அப்பகுதி மீனவர்கள் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தியிருந்தனர்.

வள்ளம் மற்றும் இயந்திரப்படகுகள் மூலம் மீன் பிடிப்பவர்களே இப்போராட்டத்தை நடத்தியிருந்தனர்.

இதையடுத்தே நேற்றுக்காலை ஒருகுழு இந்த மீனவர்களை அச்சுறுத்தும் வகையில் சந்தைக்குள் நுழைந்து, பதற்றத்தை ஏற்படுத்தியது எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ஐ-க)

## வடக்கு முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டு 14 வருடங்கள்:

# ஒலுவில் வளாகம் முன்பாக நேற்று சாலை மறியல்; சாத்வீகப் போராட்டம்

வடக்கிலிருந்து முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டு பதினான்கு வருடங்கள் நிறைவடைவதை நினைவுகூர்ந்து இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக சமூகம் நேற்றுக் காலை பல்கலைக்கழக ஒலுவில் வளாகம் முன்பாக வீதி மறியல் போராட்டம் ஒன்றை நடத்தியது; ஆர்ப்பாட்டமும் இடம்பெற்றது.

பல்கலைக்கழக சகல பீடங்களையும் சேர்ந்த மாணவர்களும், பல்கலைக்கழக சமூகம் சார்நத ஏனையவர்களும் ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் கலந்துகொண்டனர். ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் மறியல் போராட்டத்திலும், ஆர்ப்பாட்டப் பேரணியிலும் கலந்துகொண்டனர்.

சாலை மறியற் போராட்டம் ஒலுவில் வளாக முன்றிலில் இடம்பெற்றது. வளாக முன்றிலிலிருந்து பிரதான வீதியூடாக ஒலுவில் சந்தி வரை ஒரு மைல் தூரத்துக்கு ஆர்ப்பாட்ட ஊர்வலம் இடம்பெற்றது.

வீதி மறியற் போராட்டத்திலீடுபட்டிருந்தபோது, அவ்வழியே வந்த வாகனங்களில் மாணவர்கள் கறுப்புக் கொடிகளைக் கட்டிவிட்டனர். தமது கைகள், கழுத்துக்களிலும் கறுப்புப் பட்டிகளை அவர்கள் அணிந்திருந்தனர்.

(ஐ-க)

யாழ்ப்பாணம்



# யஸீர் அரபாத் மேலதிக சிகிச்சைக்காக பிரான்ஸ் மருத்துவமனைக்கு இடம்மாற்றம்

ரமல்லா,ஒக்.30

நோய்வாய்ப்பட்டிருக்கும் பலஸ்தீனத் தலைவர் யஸீர் அரபாத் நேற்றுக்காலை உள்ளூர் நேரப்படி காலை 7.10 மணியளவில் மேற்குக் கரையில் இருந்து ஜோர்தானிய ஹெலிக் கொப்டர் மூலம் மேலதிக சிகிச்சைக்காக பிரான்ஸ் சென்றார்.

பலஸ்தீனத்தின் விடுதலைக்காகப் போராடியவர் என்று வர்ணிக்கப்படும் 79 வயதான யஸீர் அரபாத் 'குருதி வெள்ளை நுண்மப் பெருக்கக் கோளாறு' எனும் நோயால் பாதிக்கப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

யஸீர் அரபாத் மத்தியகிழக்கின் இரும்பு மனிதனாகவும் கருதப்படுபவர். நேற்றுக்காலை இவர் இராணுவ உடையில் கறுப்புப் பட்டி அணிந்தவராக தமது மெய்ப்பாதுகாவலர்கள், அதிகாரிகள் ஆகியோரிடம் விடைபெற்று பிரான்ஸில் உள்ள வைத்தியசாலையில் சிகிச்சை பெற ஹெலிகொப்டர் மூலம் சென்றுள்ளார்.

யஸீர் அரபாத் ரமல்லா நகரில் உள்ள பலஸ்தீன விடுதலை இயக்கத் தலைமை அலுவலகத்தில் இஸ்ரேல் இராணுவத்தால் முடக்கப்பட்டிருந்தார். அவர் அங்கிருந்து வெளியேறினால் மீளவும் ரமல்லா வர அனுமதிக்கப்படமாட்டார் என்று இஸ்ரேல் தெரிவித்திருந்தது.

இதனைக் காரணம் காட்டி பலஸ்தீன வைத்தியசாலைக்குச் செல்ல அரபாத் மறுத்துவிட்டார்.

அரபாத்தை மாற்றுவதற்கு அதிகாரிகள் எடுத்த முடிவுகளையும் அவர் ஏற்கவில்லை.

ஆனால், அரபாத் சிகிச்சைக்காக வெளியே செல்லவிரும்பினால் அதற்கு இஸ்ரேல் தடையாக இருக்கமாட்டாது என்று அந்நாட்டு உயர் அதிகாரி அறிவித்தார்.

இதனையடுத்து, அரபாத் பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் உள்ள வைத்தியசாலையில் சிகிச்சைபெறவென சென்றுள்ளார். பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் அவர் ஜோர்தானில் இருந்து வந்த ஹெலிகொப்டர் மூலம் அங்கு சென்றுள்ளார்.

மேலும் ஒரு ஹெலிகொப்டர் அரபாத் செல்லும் ஹெலிகொப்டரோடு செல்கின்றது என்று அங்கிருந்து கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

இதேவேளை -

மேற்குக்கரை நகரான ஜெனின் நகருக்குள் இஸ்ரேலியப் படைகள் நுழைந்து மீண்டும் தாக்குதல் நடத்தத் தொடங்கியுள்ளன. அங்கு கடும் தாக்குதல்கள் இடம்பெறுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஜெனின் நகரில் உள்ள அகதிகள் முகாம் மீது இஸ்ரேலியப் படைகள் தீவிர தாக்குதல் நடத்தியுள்ளது. இதில் குறைந்தது 10 பேர் உயிரிழந்துள்ளனர்; பலர் காயமடைந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-3)

## தாய்வானுடன் பேச்சு நடத்த சீனா மறுப்புத் தெரிவிப்பு

தாய்வானுடன் பேச்சுக்களை நடத்துமாறு அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் கொலின் பவல் சீனாவிற்கு விடுத்த வேண்டுகோளை அந்நாடு ஏற்க மறுப்பு தெரிவித்துள்ளது. தாய்வான் ஒரு சுதந்திர நாடு என்பதை சீனா ஏற்க மறுத்து வருகிறது.

சீனாவின் ஓர் அங்கமே தாய்வான் என்றும் - தாய்வான் சுதந்திர நாடாகத் தம்மை பிரகடனம் செய்தால் அந்நாட்டின்மீது போர் தொடுக்கப்படும் என்றும் - சீனா எச்சரித்து வருகிறது.

இந்தவொரு சூழ்நிலையிலேயே அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் பவல் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார். இந்தக் கோரிக்கையை சீனா ஏற்க மறுத்துவிட்டது. தாய்வானோடு பேச்சுக்கள் நடத்த எந்தவொரு வழிமுறைகளும் இல்லையென சீனாவின் உயர் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (க-8)




மருத்துவமனைக்கு கொண்டு செல்வதற்காக அரபாத் ஹெலியில் ஏற்றப்படுகிறார்

## ஜோர்தானில் தாக்குதல் நடத்துவதற்கு தீவிரவாதிகள் திட்டம் என்கிறது அமெ.!

அம்மான்,ஒக்.30

ஜோர்தானில் எதிர்வரும் மாதங்களில் பயங்கரவாதத் தாக்குதல்கள் நடத்தத் திட்டமிடப்பட்டிருக்கிறது என்று அந்நாட்டுக்கான அமெரிக்கத் தூதரகம் தெரிவித்துள்ளது.

மேலும் தமது நாட்டவர்களை ஜோர்தானுக்குச் செல்லவேண்டாம் எனவும் அமெரிக்கா எச்சரிக்கை விடுத்துள்ளது.

அல்கெய்டா தீவிரவாதிகள் இயக்கம் மற்றும் அபுமுஸாப் அல்ஸர்கவி ஆகியோரது ஆதரவாளர்கள் பலர் ஜோர்தானில் இருக்கின்றனர்.

இவர்களால் கடந்த ஆறுமாதங்களாக அமெரிக்காவின் இலக்குகளைத் தாக்க மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் தடுக்கப்பட்டுள்ளன என்றும் அமெரிக்கத் தூதரகம் தெரிவித்துள்ளது.

ஜோர்தானின் தலைநகர் அம்மானில் இரசாயனக் குண்டுத்தாக்குதல் ஒன்றை மேற்கொள்ளத் தீவிரவாதிகளால எடுக்கப்பட்ட முயற்சிகளைத் தாம் தடுத்ததாக அந்நாட்டு அரசு அறிவித்துள்ளது. இதனையடுத்து நாட்டின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. (க-8)

# அமெரிக்க அதிபர் தேர்தலில் 6 முறைகளில் வாக்குப் பதிவு!

## குழப்பங்கள் ஏற்படலாம் என கட்சிகள் அச்சம்

வாஷிங்ரன்,ஒக்.30

அமெரிக்க அதிபர் தேர்தலில் 6 விதமான வாக்குப் பதிவுமுறைகள் நடைமுறைப்படுத்தப் படவிருப்பதால் குழப்பங்கள் ஏற்படலாம் என்று அச்சம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவில் உள்ள ஒவ்வொரு மாநிலமும் ஒவ்வொரு விதமான வாக்குப் பதிவு முறையை நடைமுறைப்படுத்தியுள்ளன. தேர்தலுக்கு இன்னும் 4 நாள்கள உள்ள நிலையில் குழப்பம் ஏற்படலாம் என்ற தகவல் வெளியிடப்பட்டிருப்பது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

நவம்பர் 23ஆம் திகதி இடம்பெறவுள்ள தேர்தலில் -

கண்ணாடிப் பதிவின் மூலம் 1,418 மாவட்டங்களிலும், மின்னணு வாக்குப் பதிவு முறையில் 669 மாவட்டங்களிலும் அமுல்படுத்தப்படவுள்ளன.

இதுதவிர இன்னும் நான்கு முறைகளிலும் வாக்குப்பதிவுகள் இடம்பெறவுள்ளன.

இவ்வாறு 6 முறைகளில் வாக்குப்பதிவு நடைபெறுவதால் குழப்பம் ஏற்படலாம் என்ற அச்சம் இரு பிரதான கட்சிகளிடையேயும் ஏற்பட்டுள்ளது. இதனால், வழக்கறிஞர்கள் புளோரிடா உட்பட 9 மாநிலங்களுக்கு அனுப்பப்பட இருக்கிறார்கள்.

2002ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட புதிய சட்டத்தின்படி வாக்காளர் பட்டியலில் பெயர் இல்லாதவர்கள் அல்லது அடையாள அட்டை இல்லாதவர்களுக்கு தற்காலிக வாக்குச்சீட்டுக்கள் வழங்கப்படும். இவ்வகையான வாக்குச்சீட்டுகள் வாக்காளர்களின் தகுதி உறுதியாகும் வரை தனியாக வைக்கப்படும். இது வாக்கு எண்ணிக்கையைத் தாமதப்படுத்தும் என்கின்றனர்.

பல்வேறு நிபுணர்கள் இந்தத் தற்காலிக வாக்குச்சீட்டுகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர் என்றும் -

வாக்காளர்களைப் பதிவு செய்யாததால் 30 லட்சம் வாக்காளர்களுக்கு வாக்குரிமை இல்லை என்று மக்கள் தொகைக் கணக்கெடுப்பு அலுவலகம் தெரிவித்துள்ளது.

புளோரிடா, ஒஹியோ, மிக்ஸிகன், மிஸவுரி, கொலராடோ ஆகிய 5 மாநிலங்களில் இந்தத் தற்காலிக வாக்குச்சீட்டு முறையை எதிர்த்து வழக்குகள் தொடரப்பட்டுள்ளன.

மேற்குறிப்பிட்ட 6 விதமான வாக்குப்பதிவு முறையால் குழப்பமும், தற்காலிக வாக்குச் சீட்டால் காலதாமதமும் ஏற்பட்டு அரசியல் சட்ட நெருக்கடியை ஏற்படுத்தலாம் என்று அரசியல் அவதானிகள் தெரிவித்துள்ளனர்.(க-3)

## வாக்குச் சீட்டுக்களைக் காணோம்!

புளோரிடா,ஒக்.30

அமெரிக்காவின் புளோரிடா மாநிலத்தில் ஆயிரக்கணக்கான தபால் வாக்குச்சீட்டுக்கள் காணாமல் போயுள்ளன. இச்சீட்டுக்கள் இன்னும் விநியோகிக்கப்படாத நிலையிலேயே காணாமற்போயுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கை தேர்தலின் மோசடி நிலையை எடுத்துக்காட்டுவதாக அமைந்துள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-8)

## இலத்திரனியல் கடவுச்சீட்டு சிங்கப்பூரில் அறிமுகம்

சிங்கப்பூர்நகர்,ஒக்.30

சிங்கப்பூர் அரசு அடுத்த ஆண்டுமுதல் இலத்திரனியல் கடவுச்சீட்டுக்களை அறிமுகப்படுத்தவிருக்கிறது.

இந்தக் கடவுச்சீட்டில் விரல் அடையாளங்கள் உள்ளிட்ட முக்கிய பல அம்சங்கள் இடம்பெறும்.

அமெரிக்காவின் புதிய எல்லைப் பாதுகாப்புச் சட்டத்தை அனுசரிக்கும் வகையில் இந்த இலத்திரனியல் கடவுச்சீட்டை அறிமுகப்படுத்துவதாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் தெரிவித்தார்.

சிங்கப்பூர் உட்பட 27 நாடுகள் அமெரிக்காவுடன் விசா உடன்படிக்கைகளைச் செய்திருக்கின்றன.

இந்த உடன்படிக்கையின் பிரகாரம் அடுத்த ஆண்டு ஒக்ரோபர் 26 ஆம் திகதிக்கு முதல் தனிநபர்களின் அடையாளத்தை உறுதிப்படுத்தக் கூடிய புதிய கடவுச்சீட்டுக்கள் விநியோகிக்கவேண்டும்.

செப்ரெம்பர் 11 ஆம் திகதி தாக்குதல்களின் பின்னர் இந்த நடைமுறை அமுல் செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது.

# காதலால் வந்த திருமணமா? இல்லை என்கிறார் தனுஷ்!

## அடுத்த மாதம் ரஜனியின் மகளை மணக்கிறார்

நடிகர் ரஜனிகாந்தின் மகள் ஐஸ்வர்யாவுக்கும் நடிகர் தனுஷுக்கும் எதிர்வரும் 18 ஆம் திகதி திருமணம் நடைபெறவுள்ளது.

தமிழ்த் திரையுலகில் 'துள்ளுவதோ இளமை' படத்தின மூலம் அறிமுகமானார் நடிகர் தனுஷ். இதனைத் தொடர்ந்து 'காதல்கொண்டேன்', 'திருடா திருடி' படங்கள் அவருக்கு வெற்றிப் படங்களாக அமைந்ததால் தமிழ்த் திரையுலகில் தனுஷ் முன்னணி இடத்தைப் பிடித்தார். 'புதுக்கோட்டையிலிருந்து சரவணன்', 'சுள்ளான்' படத்தைத் தொடர்ந்து அடுத்து 'ட்ரீம்ஸ்' படமும் வெளிவர உள்ளது. மேலும் நான்கு படங்கள் கைவசம் உள்ளன.

உலக அரங்கில்

பரபரப்பான சினிமா ஹீரோவாக பேசப்படும் தனுஷுக்கும், நடிகர் ரஜனிகாந்தின் மகள் ஐஸ்வர்யாவுக்கும் காதல் என்று கடந்த சில மாதங்களாகப் பேசப்பட்டு வந்தது. இந்த காதல் விவகாரம் குறித்து பத்திரிகையாளர்கள் தனுஷிடம் கேட்டதற்கு அவர் மறுப்புத் தெரிவித்தார். தனுஷின் அம்மா அளித்த பேட்டியில், ஐஸ்வர்யா எனது மகளுக்கு நண்பி. இதனால் ஐஸ்வர்யாவுக்கும், எனக்கும் பழக்கம் உண்டு. எனது மகனுக்கும் ஐஸ்வர்யாவுக்கும் காதல் ஏதும் இல்லை என்றார். இருந்தாலும் பத்திரிகைகள் ஏதாவது ஒரு வகையில் தனுஷ் - ஐஸ்வர்யா பற்றிச் செய்தி கள் வெளியிட்டு வந்தன.



தனுஷ் ஐஸ்வர்யா ரஜனி லதா

இந்தச் செய்திகளால் ரஜனியின் குடும்பத்தினர் வருத்தத்தில் உள்ளனர் என்றும் பேசப்பட்டது. இந்நிலையில் தனுஷுக்கும் - ஐஸ்வர்யாவுக்கும் திருமணம் என்று நேற்றுமுன்தினம் செய்தி வெளியானது. இதனால், சினிமா வட்டாரத்தில் பரபரப்பு ஏற்பட்டது. இதனைத் தொடர்ந்து தனுஷ் சென்னையில் திடீரென்று பத்திரிகையாளர்களைச் சந்தித்தார்.

ஐஸ்வர்யாவுக்கும், எனக்கும் திருமணம் செய்யமுடிவு செய்யப்பட்டுள்ளது. இது காதல் திருமணம் அல்ல எங்கள் இருவீட்டாரும இணைந்து எடுத்த முடிவு. திருமணச் செய்தியை சில தினங்களில் நல்ல நாள் பார்த்து பத்திரிகைகளுக்குத் தெரிவிக்கலாம் என்றிருந்தேன். அதற்குள் செய்தி வெளியாகிவிட்டது. நான் தனிப்பட்ட முறையில் யாருக்கும் செய்தி தரவில்லை. எனது தரப்பு ஆள்கள் மூலமாகவும் செய்தி வந்திருக்க வாய்ப்பில்லை. இனி இது பற்றி எதுவும் பேசவேண்டாம். எங்கள் திருமணம் காதல் திருமணம் அல்ல. இரு வீட்டாரும் இணைந்து எடுத்த முடிவு. இரு வீட்டாரும் பேசிய பிறகு நானும், ஐஸ்வர்யாவும் ஒரு முறை சந்தித்துப் பேசினோம். நல்லது நடந்திருக்கு அடுத்த மாதம் 18ஆம் திகதி திருமணம் நடக்கிறது. எங்கு திருமணத்தை நடத்துவது என்று இன்னும் முடிவு செய்யவில்லை. மண்டபமும் இன்னும் முடிவு செய்யவில்லை. ரஜனி குடும்பத்தினதும் எனது குடும்பத்தினதும் அனுமதியுடனும் ஆசீர்வாதத்துடனும்தான் இத்திருமணச் செய்தியை உங்களிடம் சொல்ல வந்துள்ளேன். எங்கள் இரு வீட்டாரும் மட்டுமே கலந்துகொள்ள எளிமையாக எங்கள் திருமணம் நடக்க வேண்டும் என்று நானும், ஐஸ்வர்யாவும் விரும்புகிறோம். இதனால், திருமண வரவேற்பு விழாவிற்கு மட்டுமே அனைவரையும் அழைக்க உள்ளோம் இவ்வாறு தனுஷ் தெரிவித்துள்ளார்.

(10)

## கண்ணீர் அஞ்சலி



யாழ்ப்பாணப் பல்கலைக்கழக
2ஆம் வருட
கலைப்பீட மாணவன்
மட்டக்களப்பு - காரைதீவு

**செல்வன் சீவரெத்தினம் விவேகானந்தமூர்த்தி**

(இந்து மெய்யியல் சிறப்புக்கலை மாணவன்)

அவர்கள் நேற்று (29.10.2004) வெள்ளிக்கிழமை அகால மரணமுற்றதையிட்டு அதிர்ச்சியும் வேதனையும் தாளாத துயரும் அடைகின்றோம்.

அன்னாரின் இழப்பு ஈடுசெய்ய முடியாதது. அவரை இழந்து தவிக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து ஆத்மசாந்திக்காக இறைவனை இறைஞ்சுகின்றோம்.

(38131) (33-16-15-32) - 2ஆம் வருட கலைப்பீட மாணவர்கள்.

## துயர் பகிர்கின்றோம்



எமது அன்பு நண்பரான
செல்வம் பான்ஸி, "வாணிரெக்ஸ்" உரிமையாளர்

**சுப்பிரமணியம் செல்வராசா**

(சரசாலை, சாவகச்சேரி)

அவர்களின் திடீர் மறைவு எமக்குப் பேரிழப்பாகும். அவரது மறைவால் துயரத்தில் ஆழ்ந்திருக்கும் குடும்பத்தினரின் துயரில் நாமும் பகிர்ந்து கொள்வதோடு ஆத்மா சாந்தி பெறப் பிரார்த்திக்கின்றோம்.

உரிமையாளரும், ஊழியர்களும்,
**கோபிகா ஆடையகம், கௌரி ரெக்ஸ்,**
(C/38557)(42-19-44-32) பெரிய கடை, யாழ்ப்பாணம்

## கண்ணீர் அஞ்சலி

எமது பணிமனையில் கடமையாற்றும்
திரு.ச.குமாரு அவர்களின் அன்புத் தந்தையார்

**ஐயாத்துரை சண்முகம்**

அவர்களின் பிரிவு குறித்துத் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

நலன்புரிச் சங்கம்.
உதவிப் பிரதேச செயலரும் அனைத்து உத்தியோகத்தர்களும். பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலகம். பளை.
(38097)(24-32-19-44)

## மரண அறிவித்தல்கள்

### நாகமுத்து திருநாவுக்கரசு (J.P.)

(ஓய்வுபெற்ற கணக்காளர், கல்வித்திணைக்களம் - யாழ்ப்பாணம்)



புன்னாலைக்கட்டுவன் தெற்கைச் சேர்ந்த நாகமுத்து திருநாவுக்கரசு அவர்கள் 28.10.2004 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற நாகமுத்து சின்னப்பிள்ளை அவர்களின் கனிஷ்ட புதல்வனும் காலஞ்சென்ற முதலித்தம்பி சின்னம்மா அவர்களின் மருமகனும் ஞானாம்பாளின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற சட்டத்தரணி தம்பையா, செல்லம்மா, இரத்தினம் ஆகியோரின சகோதரரும் இராசம்மா காலஞ்சென்ற இளையதம்பி, சிவபாதம் ஆகியோரின் மைத்துனரும் சந்திரா (கொழும்பு), ரவீந்திரன் (கணக்காளர், கொழும்பு), சாந்தினி (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஸ்ரீஸ்கந்தராஜா (தொலைத்தொடர்பு பரிசோதகர், கொழும்பு), பானுரேகா (கொழும்பு), ஐங்கரன் (ஜேர்மனி) ஆகியோரின் மாமனாரும் கவிதா, சாரங்கா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (31.10.2004) ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக விலங்கன் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்.

*புன்னாலைக்கட்டுவன் தெற்கு, புன்னாலைக்கட்டுவன்.* (38123)(43-32-16-15)

### தங்கசாமி தம்பிராசா

உரும்பிராய் கிழக்கை வதிவிடமாகவும் யாழ். அரசினர் வைத்தியசாலை இளைப்பாறிய பொய்லர் இயக்குநருமாகிய தங்கசாமி தம்பிராசா அவர்கள் 27.10.2004 புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற தங்கசாமி - கண்மணி தம்பதிகளின் அன்பு மகனும் புங்குடுதீவு 9 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற கந்தையா - சின்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற தையலம்மா (செல்லம்) அவர்களின் அருமைக் கணவரும் நித்தியானந்தராசா, சதானந்தராசா, குகானந்தராசா, மாலினிதேவி, ஜெயந்தினிதேவி, சித்திராதேவி ஆகியோரின் அன்புத் தந்தையாரும் ரஞ்சனமாலா, தேவராசா, வசந்தா, மகேந்திரராசா, அருளானந்தம் ஆகியோரின் அன்பு மாமனாரும் நிரேகா, நிரேசன், மித்திரன், ஜனனி, பங்கஜன், நிருசன், நிந்துசா, நிரோஜா, சரண் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (31-10-2004) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் உரும்பிராய் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோப்பாய் மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

*உரும்பிராய் கிழக்கு, T.P. 077 640 4033* (38121)(32-16-15)

## வீடியோப் படக் காட்சி

யாழ்ப்பாணம்,ஒக்.30

யாழ்.பல்கலைக்கழக திரைப்பட வட்டத்தின் ஏற்பாட்டில் 'பிரபாத் ராய்' இன் இயக்கத்தில் உருவான 'லத்தி' எனும் வங்க மொழித் திரைப்படம் ஆங்கிலத் துணைத் தலைப்புகளுடன் வீடியோக் காட்சியாக நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு புவியியற்றுறை மண்டபத்தில் காண்பிக்கப்படவுள்ளது.

அத்துடன் வட இந்திய சாஸ்திரிய இசை நிகழ்வு பற்றிய விபரணப் படமும் காண்பிக்கப்படும்.

படக் காட்சிகளின் இறுதியில் எழுத்தாளர்கள் அ.ஜேசுராசா, க.சட்டநாதன் ஆகியோரின் நெறிப்படுத்தலின் கீழ் காண்பித்த படம் பற்றிய கலந்துரையாடல் இடம்பெறும். (4-202)

## சைவப் புலவர் பரீட்சைக்கு விண்ணப்பம்

யாழ்ப்பாணம்,ஒக்.30

அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கத்தினால் நடத்தப்படும் இளஞ்சைவப்புலவர், சைவப்புலவர் ஆகிய பட்டப் பரீட்சைகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

அடுத்தவருடம் ஏப்ரல் மாதம் நடைபெறவுள்ள இந்தப் பரீட்சைக்கு விண்ணப்பிப்பவர்கள் சைவப்புலவர் சங்கம் 125, அரசடி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் தமக் குரிய விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக்கொளளலாம் என சைவப்புலவர் சங்கத்தின் பரீட்சைச் செயலாளர் சைவப்புலவர் வ.கந்தசாமி அறிவித்துள்ளார். (எ)

## தொழில் உபகரணங்கள் வழங்கப்பட்டன

வலி.தென்மேற்கு,ஒக்.30

"மூவிமென்ரொ" நிறுவனம் வலி.தென்மேற்கு பிரதேச செயலகப் பிரிவில் கோழி வளர்ப்பில் ஈடுபட்டுள்ளவர்களுக்கான உபகரணங்களையும் மேசன் தொழிலில ஈடுபட்டுள்ளவர்களுக்கான உபகரணங்களையும் கடந்த வாரம் வழங்கியுள்ளது.

இப்பிரதேச செயலகப்பிரிவிலுள்ள ஏழு கிராம அலுவலர் பிரிவிலுள்ளவர்களுக்கு அவ்வவ் பிரிவு கிராம அலுவலாகளின் சிபார்சின் பேரில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் வைத்து இந்த உபகரணங்கள் வழங்கப்பட்டன. (4-135)

## செயலமர்வு

தென்மராட்சி,ஒக்.30

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் ஆசிரியர்களுக்கான சிறுவர் உரிமைகள் தொடர்பான செயலமர்வு எதிர்வரும் 4 ஆம் திகதி வரணி ஆசிரிய மத்திய நிலையத்தில் நடைபெறும்.

மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் நடத்தப்படவுள்ள இந்தச் செயலமர்வில் சம்பந்தப்பட்ட ஆசிரியர்களைக் கலந்துகொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார். (4-117)

## பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம்,ஒக்.30

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி ஆரம்பப் பாடசாலையின் பெற்றோர்தின விழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9மணிக்கு பாடசாலையின் முத்துக்குமாரு அரங்கில் நடைபெறவுள்ளது.

இந்து ஆரம்பப் பாடசாலையின் அதிபர் வே.ஞானகாந்தன் தலைமையில் நடைபெறவுள்ள இந்தவிழாவில் இந்து கலாசாரத் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் சிவத்தமிழ்வித்தகர் சிவ.மகாலிங்கம், அவரது பாரியார் திருமதி சாந்தா மகாலிங்கம் ஆகியோர் பிரதமவிருந்தினர்களாகக் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர். (4-13)

## தொழிலாளர் தேவை

நீர் இறைக்கும் இயந்திரம் திருத்துபவர் உடன் தேவை.
தகுந்தவர் நேரில் சமுகம் தரவும்.
தகுந்த வேதனம் வழங்கப்படும்.
யூரோவில்,
866, பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம். (ச-35570)

## வீடு வாடகைக்குத் தேவை

இரண்டு பேரடங்கிய (கணவன்-மனைவி) குடும்பம் வசிப்பதற்கு சகல வசதிகளுடன் கூடிய வீடு (யாழ்.மாநகரசபை எல்லைக்குள்) உடன் வாடகைக்குத் தேவை.
தொடர்பு: T.P. 077 6500040
(38116)

## காணி விற்பனைக்கு

Temple Road இல் கைலாச பிள்ளையார் கோயிலுக்குத் தெற்குப் பக்கமாக - இடது பக்கத்திலுள்ள - முதலாவது ஒழுங்கையில் மூன்றாவது காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 011 2360758
30 ஆம், 31 ஆம் திகதிகளில் மட்டும்
தெய்வசீலன், கோண்டாவில் கிழக்கு
(றஞ்சன் தொலைத் தொடர்பகத்துக்கு அருகில்)
(38110)(32-19-44)

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

30 - 10 - 2004

யாழ்ப்பாணம், நாச்சிமார் கோயிலடி
திரு.திருமதி சசிகுமார் - சிவாஜினி
தம்பதிகளின் செல்வப் புதல்வன்




**செல்வன் தனுசன்**

அவர்கள் தனது முதலாவது பிறந்தநாளை இன்று (30.10.2004) சனிக்கிழமை தன்னுடைய இல்லத்தில் வெகுவிமரிசையாகக் கொண்டாடுகின்றார்.

தனுக்குட்டியை அன்பு அப்பா, அம்மா, பெரிய மாமா, சின்னமாமாமார், சித்தப்பாமார், சித்திமார், பெரியம்மாமார், அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மா பேரன்மார், மச்சாள், மச்சான்மார் மற்றும் உற்றார், உறவினர்கள், குடும்ப நண்பர்கள் அனைவரும் வண்ணை ஸ்ரீ காமாக்ஷி அம்பாள் அருள்பெற்று சீருஞ்சிறப்புமாகப் பல்கலையும் கற்றுப் பல்லாண்டு காலம் நலமுடன் வாழ்க என்று வாழ்த்துகின்றனர்.

அன்புடன்,
சசிகுமார் (தந்தை).

24/1, மதவடி லேன், சிவப்பிரகாசம் வீதி, வண்ணார்பண்ணை.
(38108)(24-32-19-44)

## Jayoda ஜயோதா

### உத்தியோகபூர்வ முடிவுகள்

டிக்கட் தொடர் இல. 7451624 முதல் 7463866 வரை
சீட்டிழுப்பு இல. 80 திகதி 28-10-2004

வெற்றி எண்கள் **0 1 3 1 4 3** சுப்பர் எண் **21**

சுப்பர் ஜக்பொட் பரிசு 1,00,00,000/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 6 எண்களுடன் சுப்பர் எண் | - | 1,00,00,000/- | - |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 6 எண்கள் | 1 | 10,00,000/- | 10,00,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 5 எண்கள் | 10 | 50,000/- | 5,00,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 4 எண்கள் | 110 | 5,000/- | 5,50,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 3 எண்கள் | 1,064 | 500/- | 5,32,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 2 எண்கள் | 10,665 | 50/- | 5,33,250/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 1 எண் | 1,05,669 | 10/- | 10,56,690/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 5 எண்கள் | 13 | 5,000/- | 65,000/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 4 எண்கள் | 107 | 1,000/- | 1,07,000/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 3 எண்கள் | 1,064 | 100/- | 1,06,400/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 2 எண்கள் | 10,571 | 20/- | 2,11,420/- |
| மொத்தம் | 1,29,282 | | 52,64,360 /- |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூபா. 52,64,360/-

இந்த திங்கட்கிழமைக்கான சுப்பர் ஜக்பொட்
ரூ. **1,02,96,500/-**

தொடர் இல. 6496041 க்கு மேற்பட்ட மஞ்சள் நிற டிக்கட்டுக்கள் 2004 நொவம்பர் 01 ஆம் திகதி திங்கட்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர்
அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

7456092-6-03
7460246-5-34
7461680-1-71
7463203-4-06
7455310-2-02
7461144-8-42
7460369-0-67
7453845-9-95

உதயன்

# ஏனைய உடன்பாடுகள் எங்கு போயின?

இனப்பிரச்சினைக்கு அமைதித்தீர்வு காணும் விவகாரத்தில் இப்போது சர்ச்சைக்கு உள்ளாகியிருக்கும் விவகாரம் -'ஒஸ்லோ பிரகடனம்'

அப்படி ஒரு விடயம் இருக்கின்றதா என்பதுதான் முதலில் கேள்வி.

2002 ஆம் ஆண்டு ஒஸ்லோவில் இடம்பெற்ற, அரசு-புலிகள் இடையிலான மூன்றாவது சுற்றுப்பேச்சுக்களின் போது ஆராயப்பட்ட விடயங்களே இப்போது 'ஒஸ்லோ பிரகடனம்' என்று புதுப் பூச்சுப் பூசப்பட்டு புதிய விவகாரமாக வியாக்கியானப்படுத்தப்படுகின்றன.

2002 ஆம் ஆண்டு நவம்பர் இறுதியிலும் டிசெம்பர் முற்பகுதியிலும் இடம்பெற்ற சம்பவங்களின் வெளிப்பாடுகளே இப்போது 'ஒஸ்லோ பிரகடனம்' என்ற பெயரில் முன்னிலைப்படுத்தப்படுகின்றன.

2002 நவம்பர் 25 ஆம் திகதி நோர்வேத் தலைநகர் ஒஸ்லோவில் இலங்கைக்கு உதவும் நாடுகளின் முன் ஆயத்தக் கூட்டம் நடைபெற்றது. அதில் இலங்கை அரசுத் தரப்புக் குழுவோடு விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளும் பங்குபற்றினர்.

அதையடுத்து நவம்பர் 27 ஆம் திகதி விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனின் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த மாவீரர்தின உரை இடம்பெற்றது.

அதில் தலைவர் பிரபாகரன், ஈழத்தமிழ் மக்கள் தமது தாயகத்தில் பூரண சுயாட்சி முறையின் கீழ்வாழ்வதையே தமது அபிலாசையாகக் கொண்டுள்ளனர் என்பதைத் திரும்பவும் வலியுறுத்தினார்.

சுயாட்சி என்பதை உள்ளக சுயநிர்ணயம், வெளிப்புற சுயநிர்ணயம் என்ற இரு அடிப்படையின் கீழ் விவரித்த தலைவர் பிரபாகரன், உள்ளக சுயநிர்ணயம் என்ற வகையில் நீதியான, பிரதேச சுயாட்சி முறையிலான தீர்வு ஒன்று முன்வைக்கப்பட்டால் அதைப் பரிசீலிக்க ஈழத் தமிழர்கள் தயார் என்பதையும் வெளிப்படுத்தினார்.

அந்த முன்மொழிவே அடுத்த ஐந்து நாள்களின் பின்னர் ஒஸ்லோவில், இலங்கை அரசு-புலிகள் இடையே நடைபெற்ற மூன்றாவது சுற்றுப்பேச்சில் முக்கிய இடத்தைப் பிடித்தது. தலைவர் பிரபாகரனின் அறிவிப்புக்கு அமைய தீர்வு ஒன்றை எட்டுவதற்கான வழிவகைகளை ஆராய்வதற்கு இருதரப்பினரும் அந்தச் சுற்றுப் பேச்சில் தீர்மானித்தனர்.

அந்தப் பேச்சின் முடிவில் வெளியிடப்பட்ட பேச்சுப் பெறுபேற்றுப் பதிவிலும் அது இடம்பெற்றது.

அதன்படி -

*"பேச்சில் பங்குபற்றிய இருதரப்பினரும் (அரசும் புலிகளும்) புலிகள் முன்வைத்த யோசனைப் பிரகாரம், ஐக்கிய இலங்கைக்குள், சமஷ்டி கட்டமைப்பின் அடிப்படையில் தமிழர்களின் பாரம்பரிய வாழ்விடத்தில், உள்ளக சுயாட்சிக் கோட்பாட்டின் கீழ் ஒரு தீர்வைக் காண்பதற்கு முயல்வது எனத் தீர்மானித்தனர்."*

- இப்படி அந்தப் பேச்சுப் பெறுபேற்றுப் பதிவில் பதிவுசெய்யப்பட்ட விடயத்தைதான் 'ஒஸ்லோ பிரகடனம்'என்று தூக்கிப்பிடித்து முழங்குகின்றது தென்னிலங்கை.

உண்மையில் அந்தப் பேச்சுக்களில் உள்ளக சுயநிர்ணய அடிப்படையில் தீர்வுகாண முயல்வதற்கு புலிகள் இணங்கினார்களேதவிர, அதற்காக பிரிந்து சென்று தனி அரசை நிறுவும் தங்களின் வெளிப்புற சுயநிர்ணய உரிமையை ஒரேயடியாகப் புலிகள் கைவிட்டுவிடவில்லை.

அந்த ஒஸ்லோ பேச்சு முடிவு அறிவிக்கப்பட்ட சமயத்திலிருந்தே புலிகளின் தலைமை அதைத் திரும்பத் திரும்ப - திட்டவட்டமாக - தெளிவாக - பல்வேறு வழிகளிலும் வலியுறுத்தியே வருகின்றது. இப்போது புதிதாகப் புலிகள் சொல்லும் விடயமல்ல இது.

உள்ளக சுயநிர்ணய உரிமை அடிப்படையில் சமஷ்டித் தீர்வு ஒன்றைக் காணும் முயற்சியில் ஈடுபடுவதற்கு இணங்கிய புலிகளின் முடிவானது அவர்களது கொள்கைக் கோட்பாட்டு முடிவில் ஒரு பெரிய மாற்றம் (Paradigm Shift) அல்ல என்று புலிகளின் மதியுரைஞர் பாலசிங்கமும் மீண்டும் மீண்டும் தெளிவுபடுத்தி வந்துள்ளார்.

அரசுக்கும் புலிகளுக்கும் இடையில் நடந்த ஆறு சுற்றுப் பேச்சுக்களில் வடக்கு - கிழக்கு இடைக்கால நிர்வாகம் தொடர்பான கட்டமைப்பு, 'சிரான்' உபகுழுவின் செயற்பாடு, உயர்பாதுகாப்பு வலயங்கள் என அறிவிக்கப்பட்ட பிரதேசத்தில் மக்கள் மீள்குடியமர்வு, தமிழ் மக்களின் அவசிய - அன்றாட - பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான அவசர நடவடிக்கைகள் என்று பல அம்சங்களில் இணக்கமும், உடன்பாடுகளும் எட்டப்பட்டன.

ஆனால், அவற்றில் 90 வீதமானவை செயலுருப்பெறவில்லை; நிறைவு செய்யப்படவில்லை. அவற்றைச் செயற்படுத்தும் எண்ணம் தென்பகுதி சிங்களத்துக்குக் கிஞ்சித்தும் கிடையாது.

அந்த இணக்கங்களையெல்லாம் செயற்படுத்தாமல் குப்பைக்குள் தூக்கி எறிந்துவிட்டு, தீர்வுக்கான வாய்ப்புகளைப் பரிசீலிப்பதற்கு புலிகள் தெரிவித்த இணக்கத்தை மட்டும், அந்தத் தீர்வுக்குப் புலிகள் இணங்கி, உடன்பட்டு விட்டனர் என்ற சாரப்பட விமர்சித்து, அந்த இணக்கம் புலிகளைக் கட்டுப்படுத்தும் ஒரு பிரகடனம் என்று பிரலாபிப்பது தென்னிலங்கைச் சிங்களத்தின் உள்நோக்கமான நயவஞ்சக எண்ணத்தையே வெளிப்படுத்துகின்றது.

# பனம்வெல்லத் தொழிற்சாலைகளை மீள இயக்க நடவடிக்கை அவசியம்

## அரச அதிபருக்கு சுரேஷ் எம்.பி. கடிதம்

யாழ்ப்பாணம்,ஒக்.30

யாழ்.மாவட்ட தெங்கு பனம்பொருள் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் கீழ் செயற்பட்டுவந்த வெல்லம், பனஞ்சீனி, கருப்பட்டி ஆகியவற்றை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகள் யுத்தத்தால் அழிந்துபோயுள்ளன. அவற்றை மீள இயக்க புனர்வாழ்வு அமைச்சோ தொண்டு நிறுவனங்களோ நடவடிக்கை எடுக்கவில்லை. எனவே அவற்றை மீள இயக்குவதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், ஈ.பி.ஆர்.எல்.எவ். செயலாளர் நாயகமுமான சுரேஷ் பிரேமச்சந்திரன் யாழ். அரச அதிபருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் மேற்கண்டவாறு சுட்டிக்காட்டியுள்ளார்.

அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

ஏறத்தாழ 12 ஆயிரம் அங்கத்தவர்களைக் கொண்ட தெங்கு பனம்பொருள் சமாசம் தனது பணியாளர்களுக்கு வேதனம் கொடுப்பது தொடக்கம் தன்னை புனரமைத்து முன்னேறிச் செல்வதற்கான எந்தவிதமான ஒத்துழைப்புகளும் இல்லாமல் திண்டாடுவது வேதனைக்குரியது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் 19 சங்கங்களை உள்ளடக்கியதாக இச்சமாசம் இருக்கின்றது. முன்னர் இச்சங்கங்களால் வெல்லம், பனஞ்சீனி, கருப்பட்டி முதலியவை உற்பத்திசெய்யப்பட்டு வந்தன. ஆனால யுத்த காலத்தில் இத்தொழிற்சாலைகள் அனைத்துமே அழிந்து போய்விட்டன.

சீனி போன்ற அத்தியாவசியப் பொருளகள் விலையேறிச் செல்லும் இக்கால கட்டத்தில் இத்தொழிற்சாலைகளின் புனருத்தாரண, புனர் நிர்மாண வேலைகள் மிகமிக அவசியமானவை. ஆனால், புனர்வாழ்வு அமைச்சோ அன்றி தொண்டர் நிறுவனங்களோ இத்தொழிற்சாலைகளின் புனர் நிர்மாணப் பணிகளை கவனத்தில் எடுக்காமை வருந்தத்தக்கது.

அது மாத்திரமல்லாமல் யாழ். குடாநாட்டில் மிகுதியாகும் பனம், தென்னம் கள்ளு, மதுசாரம் தயாரிப்பதற்காக திக்கம் வடிசாலைக்கு அனுப்பப்படுகின்றது. ஆனால், திக்கம் வடிசாலை இக்கள்ளிறகு பெறுமதியான கொடுப்பனவிற்குப் பதிலாக திக்கம் சாராயத்தை இச்சங்கங்களுக்கு கொடுத்து, அதனை விற்று கள்ளிறகான பணத்தை எடுத்துக்கொள்ளும்படி கூறுகின்றது.

ஆனால், சாராயம் விற்பதற்கு எந்தச் சங்கங்களுக்கும் அனுமதிப்பத்திரம் கிடையாது. எனவே, மதுபானம் விற்க அனுமதிப்பத்திரம் இல்லாத சங்கங்களுக்கு எந்த அடிப்படையில் திக்கம் வடிசாலை சாராயத்தை வழங்குகின்றது?

அனுமதிப்பத்திரம் இல்லாத காரணத்தால் இச்சங்கங்களின் ஊழியர்கள் பொலீஸாரால் கைதுசெய்யப்பட்டு நீதிமன்றம் என்றும் சிறைச்சாலை என்றும் சீரழிகின்றார்கள்.

சாராய உற்பத்திக்கு அனுமதி பெற்றது திக்கம் வடிசாலை. எனவே அதனைச சட்டரீதியாகச் சந்தைப்படுத்தவும், அதனை சங்கங்கள் சட்டரீதியாக விற்பனை செய்வதற்கான அனுமதிப்பத்திரத்தை பெற்றுக்கொடுப்பதும் இவ்வடிசாலையின் கடமையாகும்.

நூற்றுக்கணக்கான பணியாளர்கள், ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள், அவர்களின் குடும்பங்கள் ஒரு சமூகத்தின் முன்னேற்றம் போன்றவற்றில் அக்கறையுடன் செயற்படும் இக்கூட்டுறவுச் சங்கத்தை வளர வைக்க சம்பந்தப்பட்ட சகலரும் முன்வரவேண்டும் -

என்றுள்ளது. (3)

# பாதுகாப்பு வலயத்தில் படையினர் சுவீகரித்துள்ள ஆசிரியர்களின் வீடுகளுக்கு வாடகை கிடைக்கும்?

## விவரம் கோருகின்றது இலங்கை ஆசிரியர் சங்கம்

யாழ்ப்பாணம்,ஒக்.30

வடக்கு-கிழக்கில் பாதுகாப்பு வலயங்களில் படையினர் நிலைகொண்டுள்ள ஆசிரியர்கள், அதிபர்கள் மற்றும் கல்வித துறையிலுள்ள ஊழியர்களின் வீடுகளுக்கு வாடகை வழங்கவும், வீடுகளை விடுவிப்பதற்கும் நடவடிக்கை எடுப்பதாக கல்வி அமைச்சின் செயலாளர் உறுதி அளித்துள்ளார்.

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் யாழ். மாவட்ட கிளை வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தச் செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

எமது சங்கத்தின் செயலாளர் பேர்ட்டி இரணவிரகே தலைமையிலான குழு கல்வி அமைச்சுச் செயலாளர் கலாநிதி தாரா டி.மெல்லை கடந்த 6 ஆம் திகதி சந்தித்தது.

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் தமக்குச் சொந்தமான வீடுகளை இழந்தோ பாதிக்கப்பட்டோ வேறு இடங்களில் தற்சமயம் வசிப்போர் தமது சொந்த இடங்களில் மீளக்குடியமர்ந்து நஷ்டஈடு பெறும்வரை அவர்களது வீடுகளுக்கு உரிய வாடகை வழங்கப்பட வேண்டும் என்று கோரினோம். இதுபற்றி முதன் முறையாக இப்போதுதான் கேள்விப்படுகிறார் என்று தெரிவித்த அவர், இது சம்பந்தமான விவரங்களைத் தந்தால அமைச்சரவைக்கு தமது அமைச்சு மூலம அறிக்கை சமர்ப்பித்து ஏற்ற நடவடிக்கையை மேற்கொண்டு உரிய நிவாரணங்களை பெற்றுத்தர முடியும் எனவும் கூறினார்.

இவ்விவரங்களைத் திரட்டுவதற்கான படிவங்களை யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் கல்வித் துறைசார் ஊழியர்கள் கொக்குவிலில் உள்ள சங்க அலுவலகத்தில் மாவட்ட செயலாளரிடம் நாளை முதல் பெற்றுக் கொள்ளலாம். படிவங்களைப் பூர்த்தி செய்து அடுத்தமாதம் 21 ஆம் திகதிக்கு முன்னர் மீளக் கையளிக்கவேண்டும்.

ஏனைய மாவட்டங்களில் உள்ளவர்கள் எதிர்வரும் 8 ஆம் திகதிக்கு முதல் விண்ணப்ப படிவங்களை பெற்றுக்கொள்ள ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன - என்றுள்ளது. (3)

# விவசாயம், கால்நடை வளர்ப்புக்கு கியுடெக் சில்லாலையில் உதவி

வலிதென்மேற்கு,ஒக்.30

"கியூடெக்" நிறுவனம் சில்லாலை கிராம அபிவிருத்திச் சங்கத்திற்கு இரு நீர் இறைக்கும் இயந்திரங்கள், 25 மண் வெட்டிகள், ஒரு கிருமிநாசனி தெளிகருவி ஆகியவற்றை கடந்த வாரம் வழங்கியுள்ளது.

சில்லாலைப் பங்குத் தந்தை அருட்திரு. அ.ப.அன்ரனிப்பிள்ளை அடிகளார் இவற்றைச் சில்லாலை கிராம அபிவிருத்தி சங்க மண்டபத்தில் வைத்து சங்கத் தலைவர் அ.யோ.இமானுவேலிடம் கையளித்தார.

சில்லாலை பகுதியிலுள்ள சங்க உறுப்பினர்களான விவசாயிகள் இவற்றை குறைந்த கட்டணத்தில் வாடகைக்குப் பெற்றுப் பயனடைய முடியும் என்று சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை, "கியூடெக்" நிறுவனம் அண்மையில் இச்சங்கத்திற்கு சுழற்சி முறையிலான சுயதொழில் முயற்சிக்கடனை வழங்குவதற்கு ஒரு லட்சம் ரூபா நிதியை வழங்கியுள்ளது.

சங்க உறுப்பினர்களுக்கு விவசாயம், கோழி வளர்ப்பு, கால்நடை வளர்ப்பு, சிறு வியாபாரம் ஆகிய சுயதொழில் முயற்சிகளுக்கு இக்கடன் உதவி வழங்கப்படுகிறது. (4-135)

# கனகரத்தினம் வித்தியாலயத்தில் 'அறிவியற்கதிர்' நூல் வெளியீடு

யாழ்ப்பாணம்,ஒக்.30

கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய விஞ்ஞான மன்றத்தின் 'அறிவியற கதிர்' என்ற நூல் நேற்றுமுன்தினம் வெளியிடப்பட்டது.

கல்லூரியின் பிரதான மண்டபத்தில் விஞ்ஞான மன்றத் தலைவர் எஸ்.யதுரன் தலைமையில் இடம்பெற்ற இவ்வெளியட்டு விழாவில் யாழ். கல்வி வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் யோ.ரவீந்திரன் நூலின முதற்பிரதியை வெளியிட்டு வைக்க கல்லூரியின் ஓய்வுபெற்ற பிரதி அதிபர் திருமதி தேவகி துரைராஜா பெற்றுக்கொண்டார்.

இந்நிகழ்வில் வரவேற்புரையை விஞ்ஞான மன்ற இணைப்பாளர் திருமதி எஸ். சாந்தராஜாவும் ஆசியுரையை கல்லூரி அதிபர் வி.மாணிக்கமும் ஆய்வுரையை பாசையூர் புனித அன்ரனீஸ் றோ.க.வித்தியாலய விஞ்ஞான ஆசிரியர் பூ.தியாகலிங்கமும் நிகழ்த்தினர்.

யாழ். கல்வி வலய விஞ்ஞான பாட முன்னாள் ஆசிரிய ஆலோசகா அ.சோமஸ்கந்தன உட்படக் கல்லூரி ஆசிரியர்கள், மாணவாகள் எனப் பலர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர். (4-5-7-13)

## நாளை

ஐப்பசி 15
ஞாயிற்றுக்கிழமை
(31.10.2004)
திதி: திருதியை
பிற்பகல் 12.20 வரை
நட்சத்திரம் : ரோகிணி
மாலை 6.57 வரை
சுபநேரம்: 9.03 - 10.33
ராகுகாலம்: 4.33 - 6.03
(பழைய நேரப்படி)

# சங்கானைக் கல்விக் கோட்டத்தின் கலாசார விழாவும் பரிசளிப்பும்

## இன்று நடைபெறுகின்றன

யாழ்ப்பாணம்,ஒக்.30

சங்கானைக் கல்விக் கோட்டத்தின் சைவ கலாசார மேம்பாட்டு விழாவும் பரிசளிப்பு வைபவமும் இன்று சனிக்கிழமை காலை 8 மணிக்கு வட்டு. மத்திய கல்லூரி (ஆரம்பப் பிரிவுப் பாடசாலை) யில் நடைபெறவுள்ளது.

சங்கானைக் கல்விக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் நா.சண்முகசுந்தரம் தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவில் சங்கானை வலிகாமம் மேற்குப் பிரதேச செயலாளர் சி.ஏ.மோகனறாஸ் வலிகாமம் கல்வி வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் சு.சுந்தரசிவம் ஓய்வுபெற்ற கோட்டக் கல்விப் பணிப்பாளர் சி.செல்லையா, சங்கானை மக்கள் வங்கி முகாமையாளர் பொன்.அச்சுதம்பிள்ளை ஓய்வு பெற்றக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் அ.தற்பரானந்தன், தெல்லிப்பழை கோட்டக் கல்விப்பணிப்பாளர் ச.கைலாசநாதன், சுன்னாகம் கதிரமலை சிவன் தேவஸ்தான பிரதமகுரு கலாநிதி சிவஸ்ரீ நா.சர்வேஸ்வரக் குருக்கள், மீசாலை ஸ்ரீ காயத்திரி காமகோடி பீடாதிபதி சுவாமி ஸ்ரீ ராஜ்குமார் சுவாமிகள் மற்றும் யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி மா. வேதநாதன் ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்துகொள்ளவுள்ளனர்.

மாணவர் நிகழ்ச்சிகளாக வரவேற்பு நடனம், பண்ணிசை, புராணபடனம், கதாப பிரசங்கம் என்பனவும் இடம்பெறும். (4-202-161)

## உதயவாக்கு

ஆசை அறிவை இழக்கச் செய்கிறது.

# கமத்தொழில் சார்ந்த விற்பனை அபிவிருத்தி, கூட்டுறவு அபிவிருத்தி, இந்துசமய அலுவல்கள் அமைச்சு மற்றும் கல்வி, வாழ்க்கைத் தொழிற்பயிற்சிக்கு உதவும் அமைச்சு

## தொழிற்பயிற்சிகள்

வடக்கு, கிழக்கு மாகாணத்தை வாழ்விடமாகக் கொண்ட அல்லது அங்கிருந்து இடம்பெயர்ந்து வெளிமாவட்டங்களில் வாழும், பாடசாலைக் கல்வியை முடித்த/இடைநிறுத்திய மற்றும் பாதிப்புற்ற தரம் 8 இல் அல்லது அதற்கு மேல் சித்திபெற்ற இளைஞர், யுவதிகளுக்காக மேற்படி அமைச்சினால் பின்வரும் பயிற்சிநெறிகளுக்கு - அதனோடு குறிப்பிட்ட மாவட்டங்களில் உள்ள பயிற்சி நிலையத்தில் தமிழ்மொழி மூலம் பயிற்சிகள் நடைபெறவுள்ளன.

1. **அலுமினியம் கட்டுமானப் பயிற்சிநெறி** - கொழும்பு மாவட்டம்
   Aluminium Fabricators Course
2. **தச்சுவேலை (இயந்திர) பயிற்சிநெறி** - திருகோணமலை மாவட்டம்
   Carpentry (Mechanised) Course
3. **பார இயந்திர இயக்குநர் பயிற்சிநெறி** - அநுராதபுர மாவட்டத்தில் உள்ள கல்குளம் பிரதேசம்
   Machinery Operator Course

இப் பயிற்சிநெறிக்கு தெரிவு செய்யப்படுவோருக்கு தங்குமிட வசதியும், உதவிக் கொடுப்பனவும் வழங்கப்படும்.

**தகைமைகள்**

1. வடக்கு, கிழக்கு மாகாணங்களை வாழ்விடமாக/பிறந்த இடமாகக் கொண்டவர்களாக இருத்தல்.
2. தரம் 8 அல்லது அதற்கு மேல் சித்தி பெற்றிருத்தல்.
3. பாரஊர்திச் சாரதி - அனுமதிப்பத்திரம் பெற்றிருத்தல். (வகுப்பு ஏ)
   - (இயந்திர இயக்குநர் பயிற்சிக்கு விண்ணப்பிப்போருக்கு மட்டும்)
4. 17 வயதிற்குக் குறையாமலும் 35 வயதிற்கு மேற்படாதும் இருத்தல்.
5. நற்குணமும் நல்லொழுக்கமும் உடையவர்களாய் இருத்தல்.

மேற்படி பயிற்சிநெறிக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் தேசிய அடையாள அட்டையின் நிழல் பிரதியுடன் கீழே தரப்பட்ட மாதிரி விண்ணப்பப் படிவத்தை "A4" அளவுத்தாளில் தயாரித்து பூரணப்படுத்தி 30. 11. 2004 திகதிக்கு முன் -

**பணிப்பாளர் - தொழிற்பயிற்சி**
கமத்தொழில் சார்ந்த விற்பனை அபிவிருத்தி, கூட்டுறவு அபிவிருத்தி,
இந்துசமய அலுவல்கள் அமைச்சு மற்றும் கல்வி,
வாழ்க்கைத் தொழிற்பயிற்சிக்கு உதவும் அமைச்சு.
2ஆம் மாடி,
64, காலி வீதி,
கொழும்பு - 03.
என்ற முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.

**க. மகானந்தன்,**
**செயலாளர்.**

## பயிற்சிநெறிக்கான விண்ணப்பம்

1. விண்ணப்பிக்கும் பயிற்சிநெறி:-....................
2. முழுப்பெயர், ஆங்கிலத்தில் (பெரிய எழுத்தில்) :-
....................
3. முதல் எழுத்துடன் பெயர் (ஆங்கிலத்தில் பெரிய எழுத்தில்) :-
....................
4 விலாசம், ஆங்கிலத்தில்:-....................
5 முழுப்பெயர், தமிழில்:-....................
6 இலங்கைப் பிரஜையா?ஆம்/இல்லை:-....................
7 தேசிய அடையாள அட்டை இல. :-....................
8 ஆண்/பெண்:-....................
9. குடியியல் நிலை :-....................
10. பிறந்த திகதி :-....................
11. (1) பிறந்த மாவட்டம் :- ....................
(2) தேர்தல் மாவட்டம் :- ....................
(3) தேர்தல் தொகுதி பிரிவு:- ....................
12. கல்வித் தகைமைகள் (சித்தியெய்திய பாடம், ஆண்டுகளுடன்) :-

13. வாழ்க்கைத் தொழிற்பயிற்சித் தகைமைகள் (பெற்றிருப்பின்) :-

| நிறுவனம் | துறை | காலம் |
|---|---|---|
| | | |

14. மொழித் தேர்ச்சி :-

| | வாசித்தல் | எழுதுதல் | பேசுதல் |
|---|---|---|---|
| தமிழ் | | | |
| ஆங்கிலம் | | | |
| சிங்களம் | | | |

15. தொழில் அனுபவம் (இருப்பின்) :-

| காலம் (மாதங்களில்) | தொழில் புரிந்த இடம் | மாதாந்த வேதனம் ரூபா. |
|---|---|---|
| | | |
| | | |
| | | |

இத்துடன் தேசிய அடையாள அட்டையின் (இருபுறம்) நிழற்பிரதி சமர்ப்பிக்கின்றேன்.

எனது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டிய வரையில் இவ்விண்ணப்பத்தில் என்னால் தரப்பட்ட விவரங்கள் யாவும் உண்மையானதும், சரியானதுமென வெளிப்படுத்துகிறேன். பொய்யான தகவல்கள் தரப்பட்டுள்ளதென எச்சந்தர்ப்பத்திலும் கண்டுபிடிக்கப்பட்டால் எனது விண்ணப்பம் நிராகரிக்கப்படலாம் என நான் நன்கறிவேன்.

.................... ....................
திகதி விண்ணப்பதாரியின் கையொப்பம்.

(C/38552)(42-13-15)




# கடந்தகால அவலங்களை அடியோடு மறந்துவிட்டு அற்புதங்கள் நிகழும் எனக் காத்திருக்கிறோமா?

1995 ஆம் ஆண்டு ஒக்ரோபரில் ஸ்ரீலங்கா படைகள் குடாநாட்டைக் கைப்பற்றும் பெரும் படை நடவடிக்கையை ஆரம்பித்த போது, அதன் நோக்கத்தையே சிதறடிக்கச்செய்த மாபெரும் மக்கள் இடப்பெயர்வு நிகழ்ந்து இன்றுடன் ஒன்பது ஆண்டுகள் நிறைவடைகின்றன. அந்த இடப்பெயர்வின் ஞாபகங்கள் இன்று ஏன் எமக்கு மிக அவசியமாகின்றன என்பதை உணர்த்துகின்றது இக்கட்டுரை.

**நாம்** எப்பொழுது எம்மையும், எம் கடந்த வாழ்வையும் மீட்டிப்பார்த்து உணர்ந்து கொள்கின்றோமோ அப்போதுதான் மனிதனாகத் தொடர்ந்து வாழமுடியும். இல்லையேல், ஐந்தறிவு படைத்த ஜீவனை விட உணர்வற்றவர்களாகவே இருக்கமுடியும். இன்று எம்மில் பலர் அப்படித்தான் உள்ளனர். சுயசிந்தனை உணர்வுகளைக் களைந்து இன்னோர் உலகத்தினுள் போகும்நிலையில் அதிகமானோர் இருக்கக் காணலாம்.

சமூக சிந்தனையுடன் எதிர்காலச் சமூகத்தினைக் கட்டியெழுப்பவேண்டிய இளைஞர், யுவதிகள்கூட இன்று ஆடம்பர மோகங்களில் திளைத்துப்போய் உள்ளனர். இவற்றுக்கான காரணம் ஆராயப்படவேண்டிய ஒன்று.

உழைப்பும், உத்தியோகமும், தானும் தன் பாடும் என ஒரு பகுதியினர். அவர்களுக்குப் பக்கத்து வீட்டில் கூட என்ன நடக்கிறது என்று தெரியாது. மனிதரை மனிதர் மதிக்கத் தெரியாத நிலை சமூக ஓட்டம் திடீரெனச் சீரழிந்து போகுந்தன்மையைக் காணமுடிகின்றது. கொலையும், கொள்ளையும் மிகச் சாதாரண தொழிலாகி விட்டது.

1995 இற்கு முன் உள்ள காலப்பகுதிக்குள் இருந்த சமூக இருப்பு இன்று பலராலும் மறக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றது. அதை மீட்டுப் பார்க்கக்கூட விரும்பாதவர்களாக - முடியாதவர்களாக இருக்கின்றனர்.

'ஏ-9' பாதை திறந்த நாள் முதல் உணர்ச்சியில்லாத பிண்டங்களாகவே நடமாட்டம்

1. புதிய குழுத் தோன்றல்களும் அடாவடித தனங்களும்
2. கொள்ளையும், கொலையும்
3. தொலைக்காட்சியும், தொடர் நாடகங்களும்....

இவைதான் இன்று முக்கியமானவையாகின.

1995 இற்கு முன் நாம் ஒருமுறை எம்மை மீட்டுப் பார்க்கலாம். அது விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இயங்கிய தேசம் இப்போதுபோல் சிதறி வாழவில்லை. இன்று ஷெல சத்தங்கள்தான் உறங்குகின்றனவே தவிர மனதில் நிம்மதியான நிலை இல்லை. எப்போது என்ன நடக்குமோ எனத் தெரியாத நிலையில் காலம் இயங்கிக்கொண்டிருக்கின்றது.

ஆனால், அதை யாரும் உணர்வதாக இல்லை. அன்று சமூகப்பற்றும் தேசிய சிந்தனையும் ஊறிக்கொண்டிருந்த காலங்கள். கட்டுப்பாடு, பண்பாடு, கலாசாரம் என்பன தமக்குரிய அடையாளங்களுடன் சுதந்திரமான சுயத்தோடு நடமாடிய காலம். மினசாரவசதியும், வெளிப்போக்குவரத்தும் தான் அரிதானவை.

ஆனால், மனிதம் உயிர்த்திருந்தது.

இன்று இவை இரண்டும் உயிரற்ற சடலங்களாக மனிசரை வைத்திருக்கின்றன.

அன்று நகர் பெரும் அல்லோலமாய் இருந்தது.

யாழவள்
யாழ். பல்கலைக்கழகம்

தெருவெங்கும் ஒலிபெருக்கி அலறிக் கொண்டிருந்தது.

மூடை முடிச்சுகளுடன் அங்கும் இங்கும் என அவதிப்பட்டும்...

"ஐந்து மணிக்கிடையில் யாழ்ப்பாணத்தை விட்டு எழும்பட்டாம்".

"ஐந்து நாளுக்குள்ள யாழ்ப்பாணத்தை விட்டு எழும்பட்டாம். நாவற்குழிப்பாலம் உடைககப போறாங்களாம் .." அங்கலாய்த்த மககளின் முணுமுணுப்புகள் பதறியடித்தன. வானெங்கும் கலவரம் அதிர்ந்தது. கால்வைக்க இடமின்றி நசிபட்டும் கொட்டும் மழையிலும் மாரி வீச்சிலும் (ஷெல்) ஊர்ந்தது சனயாத்திரை. தண்ணீர்த் தாகம் பெருக்கெடுக்க குடையில் வழிந்த மழைநீரைக் குடித்ததும், மழையில் ஊறி மூச்சடங்கிய முதியவரைக் கொண்டு செல்ல இயலாது நாவற்குழிப் பாலத்தில் எறிந்துவிடடுப் போனதும், பெற்ற பெற்றோரைக் கண்ணீர்விட்டு அலைய முதியோர் இல்லத்தில் விட்டுத் தலைமறைவானதும், தெருக்கள் தோறும் குழுமி அடுப்பு ஊதியதும், வீடுவீடாய்ச் சென்று தங்க இடம்கேட்டு தண்ணீர் கேட்டு, உதவிகேட்டு அல்லல்பட்டதும், கோழிக்கூட்டில் குடும்பம் நடத்தியதும்....

மேலும், ஆனையிறவிலிருந்து வரும் வீச்சுக்களைத் தாங்கியும், தொடுகைகள் 12 மேல் இழுகக உச்சி வெயிலிலும் கடற்புலிப் படகின் ஒத்துழைப்புடன் - பதட்டத்துடன் - கிளாலியில் பயணித்ததும், அங்கும் சிதறுண்டதையும், தொடர்ந்து அனுபவித்த அவலங்களையும் நாம் இன்று மறந்துவிட்டோம். மனிதத்தையும் மனிதப் பண்பையும் மதிக்கத் தெரியாதவர்களாகிவிட்டோம்.

கடந்தகால கசப்புகளை எப்படி மறக்க முடியும்?

வெளிநாட்டுப் பணம் ஆடம்பரம் காட்டுகின்றது. அரசியல் தந்திரங்கள் ஆகுதி வளர்க்கின்றது. அநேகமான இன்றைய இளைஞர்கள் இங்கு சினிமாவின் கதாநாயகர்களாகி விட்டனர். வர்த்தக உலாக்கள் தேசத்தை ஆக்கிரமிக்கின்றன. காலனித்துவகால ஆட்சி எவ்வாறு மதம், சாதி மூலம் மக்களை இலகுவில் தம்வசமாக்கியதோ அதேபோன்று, சமாதானம் என்ற போர்வையில் தென்னிலங்கைக்கும் இந்திய உளவாளிகளான வியாபாரிகளுக்குமே எம்மவர்களின் உழைப்பு கவர்ச்சிகளினூடே அள்ளுண்டு போகக்காணலாம்.

ஆக்கிரமிப்பு இராணுவத்தால் தோலுரித்து மனிதங்களைப் புதைத்த அந்தப் புதைகுழிகளில் எம்மினத்தின் துயரங்களை மறைக்கவென்றே அட்டகாச விளம்பரங்கள் செய்யப்படுகின்றன. மனித மரணங்கள் கூட இன்று வியாபாரப்பொருள். இந்நினைவுகள் யாவற்றையும் கடத்தி அற்புதங்களிற்காக காத்திருக்கின்றவர்கள் போல் உள்ளனர்.

இந்த சில நிமிடக் காத்திருப்புகள் எம்மை வளப்படுத்தி வாழவைக்குமா? நாம் எபபோதுமே எமது கடந்த காலங்களை மீட்டுப்பார்க்குமபோது நியாயமான வாழ்வை உருவாக்கமுடியும்.

அந்தவகையில், 30.10.95 இல் இடம்பெயர்ந்து அலலோலப்பட்டு இடம்விட்டு இடம் நகர்ந்த நாம, இனறு 9 வருடங்களைத் தொட்டுள்ளோம். இநதக் காலப்பகுதியில் இழந்த, மறந்த அனுபவங்களை இந்நாளில் ஒரு தடவை நினைத்துக்கொள்வோம். ★

## மாபெரும் மக்கள் இடப்பெயர்வின் நினைவு நாள் இன்று......



இதுபோன்ற இடப்பெயர்வுகள் பல...

## திருமலையை உல்லாச புரியாக்க அமைச்சரவை முடிவுசெய்துள்ளது

கொழும்பு,ஒக்.30

திருகோணமலையை உல்லாச புரியாகப் பிரகடனப்படுத்தி அதைச் சுற்றுலாப் பயணிகளின் கேந்திர இடமாக்க அரசு உத்தேசித்துள்ளது. இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு அமைச்சர்களைக் கொண்ட ஆலோசனைக் குழுவொன்றும் நியமிக்கப்பட்டுள்ளது.

தகவல் திணைக்களத்தில் அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்ட அமைச்சரவைப் பேச்சாளர் மங்கள சமரவீர மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதுபற்றி அவர் மேலும் கூறியதாவது:

இலங்கையில் உல்லாசப் பிரயாணிகளை மிகவும் கவர்ந்த இடமாகத் திகழும் திருகோணமலையை சுற்றுலா மையமாகப் பிரகடனப்படுத்த ஆலோசிக்கப்பட்டுள்ளது. அந்த நகரை அபிவிருத்தி செய்வது குறித்து ஆராய அமைச்சர்களைக் கொண்ட ஆலோசனைக் குழுவொன்றும் நியமிக்கப்பட்டுள்ளது.

இந்தக் குழுவில் அமைச்சர்களான லக்ஷ்மன் கதிர்காமர், சரத் அமுனுகம, திஸ்ஸ விதாரண, பேரியல் அஷ்ரப், அதாவுல்லா, மங்கள சமரவீர, தினேஸ்குணவர்த்தன போன்றோர் அங்கம் வகிக்கின்றனர்.

தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கவும் அமைச்சரவை முடிவு செய்துள்ளது. ஆசிரியர் சேவை யாப்புக்கு அமைய தகுதிபெற்ற தொண்டர் ஆசிரியர்களுக்கே இந்த நியமனங்கள் வழங்கப்படும். உரிய தகுதிகளைப் பெறாத தொண்டர் ஆசிரியர்களுக்கு மாற்றுத் திட்டங்கள் பற்றி அரசு முடிவெடுக்கும் என அவர் தெரிவித்தார்.

(எ-க)



இருபாலை தெற்குக் கிராம அபிவிருத்திச் சஙகத்தினால் நியாப் திட்டத்தின் கீழ் கட்டப்பிராயில் புதிதாக அமைக்கப்பட்ட பொதுநோக்கு மண்டபத்தை கோப்பாய்ப் பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலர் திருமத சாந்தசீலன் அஞ்சலதேவி நாடாவெட்டித் திறந்துவைப்பதைப் படத்தில் காணலாம். வலி.கழக்குக் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் ஜீ.ரீ.ஞானசேகரவேல், இருபாலை தெற்குக் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் எஸ்.லட்சுமிகாந்தன், இருபாலை தெற்கு சமுர்த்தி உத்தியோகத்தர் ஏ.ஜெயசிங்கம் ஆகியோரும் படத்தில் உள்ளனர்.

*(படம்: வலி.கிழக்குச் செய்தியாளர்)*

## தொழில் உபகரணங்கள் வழங்கப்பட்டன

வலி,தென்மேற்கு.ஒக்.30

"மூவிமென்ரொ" நிறுவனம் வலி.தென்மேற்குப் பிரதேச செயலகப்பிரிவில் கோழி வளர்ப்பில் ஈடுபட்டுள்ளவர்களுக்கான உபகரணங்களையும் மேசன் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கான உபகரணங்களையும் கடந்த வாரம் வழங்கியுள்ளது.

இப்பிரதேச செயலகப்பிரிவிலுள்ள ஏழு கிராமஅலுவலர் பிரிவிலுள்ளவர்களுக்கு அவ்வப் பிரிவு கிராம அலுவலகங்களின் சிபார்சின் பேரில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் வைத்து இந்த உபகரணங்கள் வழங்கப்பட்டன.

(4-135)

## வடக்கிலிருந்து விரட்டப்பட்ட முஸ்லிம்களுக்கு புலிகள் சமாதான சமிக்ஞை காட்டவேண்டும்

வடமாகாணத்திலிருந்து முஸ்லிம் மக்கள் பலாத்காரமாக வெளியேற்றப்பட்டமை தமிழ் சமூகத்தின் விடுதலைப் போராட்ட வரலாற்றில் கறைபடிந்த அத்தியாயமாகவே கருதப்படும். எனவே, முஸ்லிம்களைச் சொந்த இடத்தில் மீளக்குடியமர்த்துவதற்குப் புலிகள் சாதகமான சமிக்ஞைகளைக் காட்டவேண்டும். அத்துடன், அவர்களது பாதுகாப்புக்கான முழு உத்தரவாதத்தினையும் வழங்கவேண்டும்.

- ஜனநாயக ஐக்கிய முன்னணியின் (நுஆ) பொருளாளர் கலாநிதி யூசுப் கே.மரைக்கார் இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

வடமாகாணத்திலிருந்து முஸ்லிம்கள் விரட்டியடிக்கப்பட்டு 14 வருடங்கள் பூர்த்தியடைகின்றன. இதனை முன்னிட்டு 'நுஆ' வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே யூசுப் கே.மரைக்கார் இதனைத் தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

வடமாகாண முஸ்லிம்கள் தமது சொந்தத் தாயகத்திலிருந்து விரட்டியடிக்கப்பட்டமையை ஆராய்ந்து அதன் பாதிப்புகளை அறிவதற்கு ஜனாதிபதி ஆணைக்குழுவொன்றை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

வடமாகாணத்திலிருந்து வெளியேற்றப்பட்டு புத்தளம், அனுராதபுரம், குருநாகல் மற்றும் கொழும்பு உள்ளிட்ட நாட்டின் நாலாபுறத்திலும் நலன்புரி நிலையங்கள், மீள்குடியேற்றக் கிராமங்கள் மற்றும் உறவினர்கள், நண்பர்கள் வீடுகள் போன்றவற்றிலும் அவல வாழ்க்கை வாழ்ந்துவரும் ஒரு லட்சத்திற்கு மேற்பட்ட முஸ்லிம்களுக்கு அகதிகள் என்ற அந்தஸ்து வழங்கப்படவேண்டும்.

இம்முஸ்லிம்களின் இடப்பெயர்வினால் இவர்களுக்கு ஏற்பட்ட பொருளாதார இழப்பு சுமார் 19 ஆயிரம் கோடி ரூபாவுக்கு மேற்பட்டது. எனவே, இதற்கான நஷ்டஈடு வழங்கப்படவேண்டும்.

இலங்கையில் சமாதானம் ஏற்படவேண்டும் என்ற கோரிக்கையின் பேரில் நிதியுதவி வழங்கும் சர்வதேச நாடுகள் இதற்காகப் பங்களிப்புச் செய்யவேண்டும்.

மன்னார், முல்லைத்தீவு, வவுனியா, யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த படித்த சுமார் இருபதாயிரம் முஸ்லிம் இளைஞர்கள், யுவதிகள் இடம்பெயர்ந்த நிலையில் வேலைவாய்ப்பின்றி வாழ்ந்து வருகின்றனர். இவர்களுக்குத் தொழில் வாய்ப்புகளை ஏற்படுத்திக்கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

பல நூற்றாண்டுகாலம் ஒன்றுபட்ட கலாசார விழுமியங்களுடன் வாழ்ந்துவந்த வடபுலத் தமிழ்பேசும் மக்கள் மத்தியில் முஸ்லிம் சமூகம் 24மணிநேர அவகாசத்தில் விரட்டியடிக்கப்பட்டமை ஓர் இனச்சுத்திகரிப்பே.

வடபுல முஸ்லிம் அகதிகள் அரசியல் அபிலாசைகள், மீள்குடியேற்றம், அபிவிருத்தி மற்றும் அவர்களின் தாயகச் சொத்துக்கள் ஆகியவை குறித்துத் தெளிவான கொள்கை எதுவும் எந்தவொரு முஸ்லிம் அரசியல் கட்சிகளிடமும் இல்லை. இக்குறைபாட்டை நிவர்த்தி செய்யும் முகமாக 'நுஆ' தனது செயற்பாடுகளை மிக அவதானத்துடன் முன்னெடுத்து வருகின்றது.

இவ்விடயத்தில் ஒத்த கருத்துடன் செயற்பட முன்வருமாறு சகல முஸ்லிம் கட்சிகளுக்கும் சமூக நல அமைப்புகளுக்கும் 'நுஆ' அழைப்புவிடுக்கிறது.

- என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

THE HALO TRUST

# VACANCY
## Post Of Office Manager

*The Applicant should have the following Qualifications:*

- An Excellent command in English, Tamil & Sinhala
- Age should be between 24 to 40.
- Fair knowledge in Accounts & Previous Experience preferable.
- Applicant should have Management skills, Knowledge of stores & computer programmes as Ms Office & Corel Draw.
- Previous experience required preferably with International NGOs

The selected person should be prepared to visit the HALO Trust's other Locations Trincomalee & Colombo.
Salary Negotiable.
Please send your bio data with contact Telephone Numbers before 5th of November.

To:
The Program Manager
**The HALO Trust**
655, Navalar Road, Nallur, Jaffna.
(38032(34-14-17-29)

## கண்ணீர் அஞ்சலி

27.10.2004 இல் அகாலமரணமடைந்த எமது வலயத்தின் கல்விப் பணிப்பாளர்

**பொ.வேணுகோபால வாணிதாசன்**

அவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலியைத் தெரிவிப்பதோடு, அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்,
(38078) யா/ஊரி.அ.மி.த.க. வித்தியாலயம், காரைநகர்.

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 11 - 11 - 1928



உதிர்வு 23 - 10 - 2004

**அமரர் கனகசபை பினாகபாணி**

[முன்னாள் அதிபர்,
வண்.ஸ்ரீ வைத்திலிங்க வித்தியாலயம்]
திதி: [ஐப்பசி மாதம் அபரபக்க துதியை]

எங்களையெல்லாம் விட்டுப்பிரிந்து
ஈராண்டென்ன ஈராயிரம் ஆண்டுகள்
சென்றாலும் அகலாது மனதை விட்டு
உங்கள் நினைவுகள்!

52/2, இந்துக் கல்லூரி ஒழுங்கை,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.
(38062)(39-14-17-29)

உங்கள் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கும்:
குடும்பத்தினர்

# அயர்லாந்து அதிகாரிகளுடனான சந்திப்பு பயனுள்ளதாயிருந்தது என்கிறார் தமிழ்ச்செல்வன்

டப்ளின்,ஒக்.30

அயர்லாந்தின் வெளிவிவகார அமைச்சின் உயரதிகாரிகளுடன் நடைபெற்ற சந்திப்பு ஆக்க பூர்வமானதாகவும் பயனுள்ளதாகவும் அமைந் திருந்தது என்று சு.ப தமிழ்ச்செல்வன் டப்ளி னில் தெரிவித்தார்.

அயர்லாந்து சென்றிருக்கும் சு.ப.தமிழ்ச் செல்வன் தலைமையிலான குழுவினருக்கும் அயர்லாந்தின் வெளிவிவகார அமைச்சின் அதி காரிகளுக்கிடையில் வெளிவிவகார அமைச் சில் கடந்த 27 ஆம் திகதி சந்திப்பு இடம்பெற் றது. தமிழ்ச்செல்வனுடன் விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகப் பணிப்பாளர் புலித்தேவன், பிரதிப் பணிப்பாளர் செல்வி கார்த்திகேயன் ஆகியோரும் சந்திப்பில் கலந்துகொண்டனர்.

அயர்லாந்தின் பிரதி வெளிவிவகார அமைச்சர் கொனோர் லெனி ஹன், அமைச்சின் அரசியல்துறை இயக்குநரும் உதவிச் செயலாளரு மான டேவிட் கூனி, அமைச்சின் அபிவிருத்தி ஒத்துழைப்பு பிரிவின் நிர்வாக அதிகாரி அனி ஓ கீவ் ஆகியோர் அயர்லாந்து தரப்பில் இச் சந்திப்பில் கலந்துகொண்டனர்.

இலங்கையின் இன நெருக்கடியைத் தீர்ப்பதற்கான முயற்சி, போரி னால் பாதிக்கப்பட்ட வடக்கு - கிழக்கின் மீள்கட்டமைப்புப் பணிகள், தமிழ் மக்களின் மனிதாபிமானத் தேவைகள் என்பன குறித்து இச் சந்திப்பில் அயர்லாந்து அதிகாரிகளுக்குத் தாம் விரமாக எடுத்துவிளக்கியதாக தமிழ்ச் செல்வன் கூறினார்.

அயர்லாந்தின் நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் பிற்பகல் நாடாளுமன்றக் குழு ஒன் றைச் சந்தித்து தமிழசெல்வன் குழுவினர் பேச்சு நடத்த இருந்தனர். மாலை, சமாதானம் மற்றும் நல்லெண்ணத்துக்கான கிளன்கிறி மையத்தின் பிரதிநிதிகளையும் சந்தித்துப் பேச்சு நடத்த இருந்தனர்.

தமிழ்ச்செல்வன் குழுவினர் இன்று நாடு திரும்ப இருக்கின்றனர்.

(எ-க)

## யாழ்.மாவட்ட தனியார் பஸ் உரிமையாளர் சங்கங்களின் தலைமைச் செயலகத்தின்

## அறிவித்தல்

ஒவ்வொரு பாதைகளிலும் அன்றாடம் சேவையில் ஈடுபடுவதற்குத் தேவைக்கு மேலதிகமான சிற்றூர்திகள் சங்கங்களில் பதிவுசெய்யப் பட்டுள்ளன.

இதனால், சிற்றூர்திகள் பங்கீட்டு அடிப்படையில் மாதத்தில் இரு பது நாள்கள், சில சங்கங்களில் 15 நாள்கள் சேவையில் ஈடுபடுவது காணக்கூடியதாகவுள்ளது.

இந்நிலையைத் தவிர்க்கும் முகமாக அங்கத்துவம்கோரி சங் கங்கள் மூலம் பரிசீலிக்கப்பெற்று, எமக்குக் கடந்த 23.10.2004 வரை அனுப்பிவைக்கப்பெற்ற விண்ணப்பங்கள் தவிர்ந்த ஏனைய பழைய, புதிய பதிவுகள் யாவும் நிறுத்தப்பட்டுள்ளதென்பதனை அறியத்தருகி றேன்.

விண்ணப்பங்கள் எதுவும் மறு அறிவித்தல் வரை கிளைச் சங்கங் களிலோ அல்லது எமது காரியாலயத்திலோ ஏற்றுக்கொள்ளப்படமாட்டா தென்பதனைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பொ.கெங்காதரன்,
தலைவர்.
(38032)(29-14-17)

## ஆத்மசாந்திப் பிரார்த்தனை

எமது பாடசாலை ஆசிரியர் திரு.தி.சமதர்மபாலன்
அவர்களின் அன்புத் தந்தையார்

**க.திருநாவுக்கரசு**

அவர்கள் இறைபதம் அடைந்த 31 ஆம் நாள்,
இன்று (30.10.2004) நடைபெறுகின்றது. அன்னாரின்
ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் கழகம்,
யா/கொற்றாவத்தை அ.மி.த.க. பாடசாலை,
வல்வெட்டித்துறை.
(37913)(39-14-17-29)

## கண்ணீர் அஞ்சலி

எமது வங்கியின் சக உத்தியோகத்தர்
திரு.ந.ஸ்ரீவிஜயா அவர்களின் பாசமிகு தாயார்

**திருமதி இராசம்மா நடராசா**

அவர்கள் காலமாகியதால் துயருற்றிருக்கும் அனைவருடன் நாமும் எமது துயரினைப் பகிர்ந்துகொள்கின்றோம்.

முகாமையாளரும் ஊழியர்களும்
(38093) இலங்கை வங்கி, காங்கேசன்துறை.

## சபாநாயகரை மாற்றுவதில் அரசு உறுதி என்கிறார் மங்கள

கொழும்பு,ஒக்.30

தற்போதைய சபாநாயகரை நீக்கி புதிய வர் ஒருவரை சபாநாயகராக்குவதில் அரசு தீவி ரமாக உள்ளது.

அமைச்சரவைப் பேச்சாளர் மங்கள சமர வீர இத்தகவலை கொழும்பில் ஊடகவியலா ளர் மாநாட்டில் தெரிவித்தார்.

சபாநாயகரை மாற்றுவது தொடர்பாக அரசு சம்பந்தப்பட்டோரோடு பேசி வருகின்றது. இவ் விடயத்தில் நாடாளுமன்றத்தில் உரிய பெரும் பான்மை கிட்டியதும் சபாநாயகரை மாற்றி, புதிய சபாநாயகரைத் தெரிவுசெய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும். சபாநாயகரை மாற்றுவதில் அரசு உறுதியாக உள்ளது - என் றார் அவர்.

எதிர்க்கட்சித் தரப்பைச் சேர்ந்த டபிள்யூ. ஜே.எம்.லொக்குபண்டார சபாநாயகராகப் பதவி வகிப்பது தெரிந்ததே. (எ-க)

## கத்திக்குத்துக்கு இலக்கானவர் யாழ்.வைத்தியசாலையில் மரணம்!

யாழ்ப்பாணம்,ஒக்.30

கத்திக்குத்துக்கு இலக்காகி படுகாயம டைந்தார் எனக் கூறப்படும் ஒருவர் கடந்த புதன்கிழமை அதிகாலை யாழ். வைத்தியசா லையில் உயிரிழந்தார்.

கொடிகாமம் கச்சாயைச் சேர்ந்த எஸ்.பொன் ராசா(வயது 62) என்ற குடும்பஸ்தரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

கடந்த செவ்வாய்க்கிழமை இரவு வீட்டிலி ருந்தபோது இளைஞர் குழு ஒன்று அவரைக் கத்தியால் குத்திவிட்டு தப்பிச்சென்றது என்று கூறப்பட்டது.

படுகாயமடைந்த நிலையில் யாழ். வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட இவர் சிகிச்சை பயனளிக்காத நிலையில் அங்கு உயிரிழந்தார். (எ-7)

## விசேட கருத்தரங்கு

2005 ஆம் ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை எழுதவுள்ள மாணவர்களின் பெற்றோருக்கான

## இலவசக் கருத்தரங்கு

31.10.2004 (ஞாயிறு) மாலை 4 மணி
திரு.கணேசலிங்கம்
(சேவைக்கால ஆலோசகர், NSA பிரதம பரீட்சகர்)

நல்லூர் சயன்ஸ் அக்கடமி, நல்லூர்

குறிப்பு:
★ திரு.கணேசலிங்கம் அவர்களின் 2004 ஆம் ஆண்டு பரீட்சை எழுதி சித்திபெற்ற மாணவர்கள் தங்களுக்கான பரிசில்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.
★ 2004 தரம் - 4 முதல் O/L வரை ஆண்டிறுதிப் பரீட்சை வினாப்பத்திரம் தேவைப்படுவோர் தொடர்பு கொள்க. (O/L Model Paper) (38081)

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையின்

## கண்ணீர் அஞ்சலி

27.10.2004 இல் அகாலமரணமடைந்த எமது பாடசாலையின் முன்னாள் ஆசிரியரும் தீவக வலயக் கல்விப் பணிப்பாளருமாகிய

**பொன்னையா வேணுகோபால வாணிதாசனின்**

அகாலமரணச் செய்தி கேட்டு ஆற்றொணாத் துயரடைகின்றோம். அன்னாரின் பிரிவால் துய ருறும் குடும்பத்தினரின் துயரில் பங்குகொள்வ துடன், அவரது ஆத்மா சாந்தியடையவும் பிரார்த் திக்கின்றோம்.

பருத்தித்துறை
மெ.பெ.உ.பாடசாலைச் சமூகம்.
(சி-38546)

**காங்கேசன் சிமெந்து**

இலங்கை சிமெந்துக் கூட்டுத்தாபனத்தால்
இந்தியாவில் இருந்து
தரமான சிமெந்து 02-11-2004இல்
இறக்குமதி செய்யப்பட்டு
விநியோகிக்கப்படவுள்ளது




மொத்த விலை ரூபா 520/=

தேவைப்படுவோர்
தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:
**இலங்கை சிமெந்துக் கூட்டுத்தாபனம்**
வேம்பன் ஒழுங்கை, உரும்பிராய்.
Tel:222 2239.

# படப்பிடிப்பில் பிந்திய தொழில்நுட்பம் யாழ்ப்பாணத்தில் கொனிக்கா அறிமுகம்

காலத்தின் வேகத்திற்கேற்ப மக்களின் தேவைகளும் நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்கின்றது. நேரத்தின் தேவைக்கேற்ப சிறப்பானதும், நவீனமானதுமான உத்திகளைக் கையாளும் நிறுவனங்களையும், ஆள்களையும் தேடியே இன்றைய மக்கள் அலைகின்றார்கள்.

அந்த வகையில் கால ஓட்டத்திற்கு ஏற்ப படப்பிடிப்புத்துறையில் நவீன தொழில்நுட்ப முறைகளைக் கையாண்டு ஒரே கூரையின் கீழ் பல சேவைகளை வழங்கிவரும் ஒரு நிறுவனம் யாழ்ப்பாணம் வெங்கடேசப் பெருமாள் கோயிலுக்கு அருகில் இயங்கிவரும் 'கொனிகலர் லாப் அன்ட் ஸ்ரீ டிஜிற்றல் கலர் லாப்' நிறுவனம்.



நாடளாவிய ரீதியில் இலங்கையிலேயே அதிக வாடிக்கையாளர்களை கொனிக்கா மூலம் பெற்றுக் கொண்டமைக்காக ஆசிய நாடுகளின் 'கொனிக்கா' முகாமையாளரிடமிருந்து 'கொனிக்கா' நிறுவன உரிமையாளர் எஸ். சிறிதரன் விருது பெறும் போது...

பிரமாண்டமான முறையில் நவீன வசதிகளுடன் இயங்கிவரும் இந்நிறுவனம் மக்களுக்கு, நேரகாலம் பாராது சேவை ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு செயற்படுகின்றது. இந்நிறுவனத்தைப் பற்றியும், அதன் செயற்பாடுகள் பற்றியும் அதன் முகாமையாளர் பி.பத்மலிங்கத்தின் கருத்துக்களை இங்கு தொகுத்துத் தருகின்றோம்.

மிகவும் சிரமமான ஒரு யுத்தகால சூழ்நிலையிலேயே நாம் இந்நிறுவனத்தை ஆரம்பித்தோம். அக்காலத்தில் நவீனமாக இருந்த 'கொனிக்கா' இயந்திரத்தையே நாம் பயன்படுத்தி மக்களுக்குச் சேவையாற்றினோம்.

கொனிக்காவை மட்டுமே நாம் பயன்படுத்தி வந்ததால் மக்கள் அனைவருக்குமே அந்தச் சேவையை மட்டுமே எம்மால் வழங்க முடிந்தது. ஆயினும், கொனிக்கா நிறுவனத்தால், இலங்கையில் அதிக வாடிக்கையாளர்களைக் கொண்டு இயங்கியமைக்காக விசேட விருது ஒன்று எமது நிறுவனத்துக்குக் கிடைத்தது.


நவீன உலகில் காலத்தின் மாற்றத்திற்கேற்ப மக்களின் எதிர்பார்ப்புகளும் தேவைகளும் மாற்றம் பெற்றுவந்தது. எனவே, நாங்கள் எமது தொழில்நுட்பத்திலும் மாற்றத்தை ஏற்படுத்தவேண்டிய தேவைக்கு உள்ளானோம்.

அதன்மூலம் நாங்கள் பியூஜி பிலிம் இன் Frontier என்ற நவீன ரக இயந்திரத்தை சேவைக்கு உட்படுத்தினோம். இதன் மூலம் மேலும் பல நன்மைகளைப் பெறமுடிந்ததாயினும் மக்களின் எதிர்பார்ப்பை எம்மால் முழுமையாக நிறைவேற்ற முடியாமல் போனது. இதன்மூலம் 10X15 அளவுடைய படங்களையே எடுக்கமுடிந்தது.

பிந்திய தொழில்நுட்பங்களுடன் கூடிய நவீன இயந்திரமான Kodak Noritsu என்னும் புதிய இயந்திரத்தைப் பல மில்லியன் விலை கொடுத்து வாங்கியுள்ளோம். இதை உபயோகிப்பதற்கு சில அடிப்படை கட்டட வேலைகள் நடந்து கொண்டிருக்கின்றன. வெகுவிரைவில் அதனை நாம் பயன்பாட்டிற்குக் கொண்டுவருவோம்.

**'த்ரீ இன் வண்'**

இலங்கையிலேயே மூன்று வகையான சேவையினை அதாவது **Konnica, Fuji, Kodak** ஆகிய மூன்று சேவைகளையும் வழங்கும் ஒரே ஸ்தாபனம் என்னும் பெருமையை நாம் பெறுகின்றோம். இந்த மூன்று வகையான இயந்திரங்கள் எம்மிடம் உண்டு.



மக்கள் எந்த வகையான சேவையை எதிர்பார்க்கின்றார்கள் அனைத்தையும் ஒரே இடத்தில் குறைந்த நேரத்தில் கூடிய தரத்துடன், இங்குபெற்றுக்கொள்ளலாம்.

**விசேட சேவைகள்**

**Noritsu** என அழைக்கப்படும் **Kodak** நிறுவனத்தின் தயாரிப்பான இந்தப் புதிய இயந்திரம் ஒரு மினிலாப் போலவே விளங்குகின்றது.

மனதில் நிலைத்து நிற்கும் அந்தக் கணப்பொழுதுகளை நினைவுபடுத்தி மகிழ்வதற்கு ஏற்றவகையில் சிறந்த தரத்துடன் படங்களை வழங்க இது உதவும். இதன் மூலம் 12"X36" அளவுடைய படங்களைக் கூட நாம் பெற்றுக் கொள்ளலாம்.

மிக உயர் தொழில்நுட்பத்துடன் உருவாக்கப்பட்ட இந்த இயந்திரத்தை நாம் மிக இலகுவாகக் கையாளலாம். அத்துடன், உயர் தர ஸ்கேனர், மிக விரைவாக செயற்படக் கூடிய பிறிண்டர் போன்ற வசதிகளுடன், கீறல்கள் விழுந்த சிதைந்த படங்களையும் சீர்படுத்தித் தரக்கூடிய வசதிகள் இவ்வியந்திரத்தில் உண்டு.

இந்த இயந்திரத்துடன் உயர்தரமான கொம்பியூட்டரும் இணைக்கப்பட்டுள்ளது.

இப்படியான பல தரங்களையும் சிறப்புக்களையும் கொண்ட இந்த இயந்திரத்தின் மூலம் நாம் சிறப்பான சேவைகளை மக்களுக்கு வழங்க முடியும்.

**வேறு சேவைகள்**

நாம் விற்பனை நிலையம் ஒன்றை ஆரம்பிக்காத போதும் எமது வாடிக்கையாளர்களுக்குத் தேவை ஏற்படும் பட்சத்தில் அவர்களுக்கு வேண்டிய கமெரா, வீடியோ கமெரா மற்றும்

**தீபா–தயாமதி**

அதற்கு வேண்டிய சாதனங்களைச் சிறந்ததாகவும் தரமானதாகவும் பெற்றுக்கொடுப்போம்.

அத்துடன், வீடியோப் பதிவுகள் மேற்கொள்வது, மிக்சிங் செய்தல் போன்ற சேவைகளையும் நாம் வழங்குகின்றோம்.

**விசேட சேவை**

நாம் இந்த நிறுவனத்தின் மூலம் பெறும் அனைத்து லாபங்களையும் நாம் நடத்திவரும் அநாதைச் சிறுவர் இல்லமான தாயகத்திற்கு செலவிடுகின்றோம். பெற்றோரை இழந்த மிக வறுமைப்பட்ட சிறுவர்களின் எதிர்காலம் சிறந்த முறையில் அமைய எம் பணியை நாம் மேற்கொள்கின்றோம்.

**நிறைவாக**

எம் புதிய **Kodak** இயந்திரத்தின் நன்மைகளை மக்கள் அனுபவிக்கும் காலம் வெகு தூரத்தில் இல்லை. இந்த இயந்திரம் மூலம் மக்கள் சிறந்த புகைப்படங்களைப் பெறமுடியும் - என்றார்.

# உடனடி வேலைவாய்ப்பைத் தரும் லண்டன் நிறுவனத்தின் கற்கைநெறி

நவீன தொழிற்சந்தை மாற்றங்களுக்கு ஏற்ப நம் நாட்டில் தொழில்துறைகளும் தொழில வாய்ப்புக்கான போட்டியும் மாறிக்கொண்டே வருகிறது. எந்தவொரு தொழிலுக்கும் ஆங்கிலமும் கணனி அறிவும் இன்றியமையாதவையாக காணப்படுகின்றன.

**London Institute Of Further Education** 3 மாத முழு நேர அடிப்படையிலான மிகச்சிறந்த கற்கை நெறியை வழங்கிவருகின்றது. **Foundation Degree Programme For Higher Education/Career** எனும் இப்பாட நெறியில் ஆங்கிலம், ஆளுமை விருத்தி, கணனி ஆகிய துறைகளில் அடிப்படை முதல் விரிவான கற்பித்தல் வரை இடம்பெறுகின்றன.

பாடநெறி முடிவில் கிடைக்கின்ற விரிவான அறிவும் சர்வதேச அங்கீகாரம் கொண்ட சான்றிதழ்களும் நவீன தொழில்சந்தையில் உடனடி தொழில் வாய்ப்பொன்றைப் பெற்றுக்கொள்ள அல்லது வெளிநாட்டு பல்கலைக்கழகங்களில் உயர்கல்வியைத் தொடர்வதற்கான **Student Visa** இனைப் பெற்றுக்கொள்ள பெரிதும உறுதுணையாக அமைகின்றன.

**O/L, A/L** ஆகிய தராதரங்களோடு மாணவர்கள் பெறுமதிமிக்க அங்கீகாரம் கொண்ட கற்கை நெறியொன்றைப் பயின்றிருத்தல் அவசியம். அத்தோடு மாணவர்கள் விசாவுக்கான நேர்முகப் பரீட்சையினைத் தெளிவாக எதிர்கொள்ளக்கூடியளவுக்கு ஆங்கிலத்தில் தேர்ச்சியும் பெற்றிருத்தல் வேண்டும். இதுபோன்ற காரணிகளே மாணவர்கள் குறிப்பிட்ட நாடொன்றுக்கு உண்மையாகவே உயர் கல்வியை நாடிச் செல்கின்றனர் என்பதனை உறுதிப்படுத்தக்கூடியதாய் அமையும். **Foundation Degree Programme For Higher Education** இதனை மிக இலகுவாகச் சாத்தியமாக்குகின்றது. இங்கு கணனி ஆங்கிலத்தோடு ஆளுமை விருத்தி என விரிவான பயிற்சி மாணவர்களுக்கு வழங்கப்படுவதால் வெளிநாடுகளில் உயர கல்விக்கான விசாக்களை இலகுவாக அவர்கள் பெறுவது சாத்தியமாகிறது. வெளிநாடுகளில் பொருத்தமான பல்கலைக்கழகம் அல்லது கல்லூரி ஒன்றைத் தெரிவுசெய்து மாணவர்களுக்கான சகல விசா ஒழுங்குமுறைகளையும் **London Institute** ஆரம்பம் முதல் இறுதி வரை செய்து தருவதால் மாணவர்கள் விசாவுக்கான நேர்முகப் பரீட்சையினை எந்தவித சிக்கலுமின்றி இலகுவாகப் பூரண வழிகாட்டலுடன் எதிர்கொண்டு வெற்றியும் பெறமுடிகின்றது. மேலும் **Foundation Degree Programme** ஊடாகத் தொழில் வாய்ப்பொன்றினை நாடுகின்ற மாணவர்களுக்கு உள்நாட்டில் அல்லது வெளிநாட்டில் உயர் கல்வியைத் தொடர்கின்றபோது தொழில் வாய்ப்பொன்றினைப் பெற்றுக் கொள்ளப் பூரண வழிகாட்டுதல்களைப் பெறுக்கொள்ள **London Institute** வழங்குகின்றது.

மேலும் **London Institute Of Further Education** வழங்கும் பெறுமதி வாய்ந்த பாடநெறிகளுடன் தகவல் தொழில்நுட்பத் துறையில் **Diploma in Software Engineering, Advanced Certificate in Website Development, Diploma in Computing Certificate in Graphic Designing** ஆகிய கற்கை நெறிகளும் ஆங்கில அறிவினைப் பயன்படுத்திக்கொள்ள முழு நேர, பகுதிநேர பாடநெறிகளாக வழங்கப்படும். **Diploma in Business English First Certificate in English, Advance Diploma in English** ஆகிய கற்கை நெறிகளும் உள்ளடங்குகின்றன. இத்துடன், சிறுவர்களுக்கான **Kids** விசேடமாக வடிவமைக்கப்பட்ட **Kids Computer Programme** எனும் பாடநெறியும் இந்நிறுவனத்தில் கற்பிக்கப்படுகின்றது.

மேலதிக விவரங்களையும் ஆலோசனைகளையும் நிறுவனத்திற்கு நேரடியாக விஜயம் செய்வதன் மூலமோ. 0115518666, 0777-715788 என்ற தொலைபேசி இலக்கங்கள் மூலமோ தொடர்புகொண்டுபெறலாம்.

★




# புதுடில்லியில் வர்த்தகக் கண்காட்சி யாழ். வர்த்தகர்களும் பங்கேற்பு

புதுடில்லியில் அடுத்தமாதம் 14ஆம் திகதி முதல் 27ஆம் திகதிவரை வர்த்தகக் கண்காட்சி ஒன்று இடம்பெறவுள்ளது. இந்தக் கண்காட்சியில் யாழ். வர்த்தகர்களும் பங்குபற்ற வாய்ப்புக்கிட்டியுள்ளது.

இக்கண்காட்சியில் பங்குபற்ற விரும்பும் வர்த்தகர்களை எதிர்வரும் 3ஆம் திகதிக்கு முன் தொடர்புகொள்ளுமாறு யாழ்ப்பாணம் வணிகர் கழகம் கேட்டுள்ளது.

இதுதொடர்பாக வணிகர் கழகம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இக்கண்காட்சியில் 19ஆம் திகதி தொடக்கம 5 நாள்களுமாகவும் 20 ஆம் திகதி தொடக்கம் 08 நாள்களுமாகவும் இரு குழுக்களாக இலங்கையின் பிரதிநிதிகள் பங்குபற்ற உள்ளனர். இதில் பின்வரும் துறைசார்ந்த ஆர்வலர்கள் பங்குபற்றிக் கூடுதலான நன்மையடையலாம்.

அவையாவன:- இயந்திரங்கள், இயந்திர உற்பத்தி, மின் இயந்திர உபகரணங்கள் உதிரிப்பாகங்கள், தொழில் கைத்தொழில், பொறியியல் கைத்தொழில் பொருள்கள், தோல் மற்றும் தோல் சார்ந்த பொருள்கள், விவசாயம், விவசாய உபகரணங்கள், விவசாய உணவு பதப்படுத்தல், வாகன உதிரிப்பாகங்கள், உயிரியல் தொழில்நுட்பம், தகவல் தொழில்நுட்பம், இலத்திரனியல் தொலைத்தொடர்பு கருவிகள், சிறு கைத்தொழில் இயந்திரங்கள், உபகரணங்கள், மருந்துவகைகள், இரசாயன மருந்துகள், குறைந்த செலவு கட்டடப் பொருள்கள் ஆகியனவாகும்.

இக்கண்காட்சியில் பங்குபற்ற விரும்புவோரை எதிர்வரும் 3ஆம் திகதிக்கு முன்னதாக யாழ். வணிகர் கழகத்துடன் தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றது - என்றுள்ளது.

## மரண அறிவித்தல்

### குருநாதி சின்னத்துரை

கிளாலை, கொல்லங்கலட்டியைப் பிறப்பிடமாகவும் கல்வளை, சண்டிலிப்பாயைத் தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட குருநாதி சின்னத்துரை அவர்கள் வியாழக்கிழமை (28.10.2004) இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற குருநாதி - சின்னப்பிள்ளை தம்பதிகளின் கனிஷ்ட புத்திரனும் முத்தர் - தெய்வானை தம்பதிகளின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற கதிரமலையின் அன்புக் கணவரும் அம்பிகாதேவி, நாகேஸ்வரி, விமலாதேவி, காலஞ்சென்ற வியாகேசன் காலஞ்சென்ற காங்கேசன், ரவதேவி, குகதாசன், பிரமிளாதேவி ஆகியோரின் அருமைத் தந்தையும் சின்னத்துரை, பாலசுப்பிரமணியம், ரதி, நித்தியானந்தம், தயாநந்தி ஆகியோரின் மாமனாரும் தேவகி, துவாரகை, ஜீவகி, கிருஷ்ணகுமார், சியாமிளா, தர்ஜினி, கிருஷ்ணகாந்தன், அன்பினி, காயத்திரி, விஷ்ணுகாந்தன், கோபிகாந்தன், மருஷன், சுலக்ஷன், தனுசியா ஆகியோரின் அன்புப் பேரனாரும் தர்ஷிகா, பிரதீப், திலக்ஷன், திலக்ஷிகா ஆகியோரின் அருமைத் தாத்தாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 30.10.2004 சனிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக விளாவெளி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தற்காலிக முகவரி:
கல்வளை, சண்டிலிப்பாய். (38099)(34-19-44-24)

தகவல்:
அம்பிகாதேவி (மகள்)
மற்றும் குடும்பத்தினர்.

## கண்ணீர்ப் பூக்கள்

### வாணி ரெக்ஸ் உரிமையாளர்
### சுப்பிரமணியம் செல்வராசா



அவர்களின் மறைவுச் செய்திகேட்டு ஆற்றொணாத்துயரடைகின்றோம். அன்னாரின் மறைவால் பரிதவித்து நிற்கும் அவரது துணைவியார், பிள்ளைகள் மற்றும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் ஆறுதல்களையும் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

செல்லமுத்தூஸ் புடைவை மாளிகை,
நெல்லியடி. (38097) (24-19-44)

சு.சண்முகசுந்தரம்
குடும்பத்தினர்.


கனவுகளை நனவாக்கும்
இளம் பருவத்தினராகிய எங்களின் சேமிப்புக் கணக்கு




18 +plus Youth Savings Account
இளம் பருவத்தினருக்கு அன்புடன்

Twin Advertising

BOC
ලංකා බැංකුව இலங்கை வங்கி
உங்கள் நம்பிக்கைக்குரிய வங்கி


## வலி. தெற்கில் வீதிகளுக்கு விரைவில் பெயர்ப்பலகைகள்

வலி.தென்மேற்கு,ஒக்.30

சுன்னாகம் பிரதேச சபை எல்லைக்குட்படட வீதிகளுக்கான பெயர்ப்பலகைகள் ஒவ்வொரு வீதியின ஆரம்பத்திலும் முடிவிலும் இடையிடையேயும் அமைக்கப்படவுள்ளதாகப் பிரதேச சபை செயலாளர் திருமதி ச.சொக்கலிங்கம் தெரிவித்துள்ளார்.

கடந்தகாலச் சம்பவங்களால் பல வீதிகளில் இடப்பட்டிருந்த வீதிப் பெயர்ப்பலகைகள் அழிந்துபோய் அல்லது காணாமற்போய் விட்டன.

சில இடங்களில் புதிய வீதிப் பெயர்கள் அமைக்கப்பட்டு காணப்படுகின்றன. சுன்னாகம் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட வீதிகள் மிகச சிக்கலான வீதி அமைப்பு முறைகளைக் கொணடிருப்பதால், வீதிகளுக்குப் பெயர்ப்பலகைகள் இருப்பது அவசியம் என்று சுட்டிக்காட்டப்பட்டதைத் தொடர்ந்து பிரதேச சபைச் செயலாளரினால மேற்படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்தாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கிராமங்களிலுள்ள பொது நிறுவனங்கள், கிராம சேவையாளர்கள், பொதுமக்கள் ஆகியோரின் ஒத்துழைப்பைப் பெற்று இதனை நடைமுறைப்படுத்த இருப்பதாக அவர் தெரிவித்துள்ளார். (4-152)

## வலிகாமம் வலயத்தில் சிறந்த நூலகங்கள் கௌரவிப்பு

வட்டுக்கோட்டை,ஒக்.30

நூலக வாரத்தை முன்னிட்டு வலிகாமம் கல்வி வலயத்தில் தெரிவுசெய்யப்பட்ட சிறந்த பாடசாலை நூலகங்கள், அதிக நூல்களைக் கொள்வனவு செய்த பாடசாலை என்பனவற்றுக்குச் சிறந்த நூலகம், சிறந்த நூலக ஆர்வமுள்ள அதிபர் என்றவகையில் பரிசு வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.

வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி கோகிலா மகேந்திரராசா தலைமையில் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் கடந்த 27ஆம் திகதி நடைபெற்ற கௌரவிப்பு நிகழ்வில் பிரதம விருந்தினராக வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் சு.சுந்தரசிவம் கலந்து சிறப்பித்தார்.

சிறந்த நூலகங்களாக சுழிபுரம் விக்ரோரியாக் கல்லூரி முதலாம் இடத்தையும், மல்லாகம் மகா வித்தியாலயம் இரண்டாம் இடத்தையும், இணுவில் இந்துக் கல்லூரி மூன்றாம் இடத்தையும் பெற்றன.

நூலக ஆர்வமுள்ள அதிபராகக் கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாலய அதிபரும், நூல் கொள்வனவுசெய்த பாடசாலையாக அளவெட்டி அருணோதயாக் கல்லூரியும், சிறந்த நூலகராக சுழிபுரம் ஐக்கிய சங்க வித்தியாசாலை ஆசிரியர் சி.கௌரிதரனும் கௌரவிக்கப்பட்டனர்.

இந்நிகழ்வில் வெற்றி பெற்ற பாடசாலைகளுக்கான பரிசில்களையும் சான்றிதழ்களையும் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் சு.சுந்தரசிவம் வழங்கிக் கௌரவித்தார்., (4-161)

## நெற்செய்கை விவசாயிகளுக்கு சனசமூக நிலையம் கடன்

தென்மராட்சி,ஒக்.30

மட்டுவில் பகுதியில் காலபோக நெற்செய்கையில் ஈடுபட்டுள்ளவர்களில் இருபது பேருக்கு விவசாயக் கடனாக தலா 10 ஆயிரம் ரூபா வீதம் வழங்கப்பட்டுள்ளது.

இக்கடன்களை மட்டுவில் வடக்கு ஸ்ரீவேற்பிள்ளை சனசமூக நிலையத்தினர் வழங்கியுள்ளனர்.

இப்பகுதியில் மேட்டுநிலப் பயிர்ச்செய்கையில் ஈடுபடவுள்ள விவசாயிகள் தெரிவுசெய்யப்பட்டு கடன்கள் வழங்கப்படவுள்ளதாக நிலையத் தலைவர் தெரிவித்தார். (4-117)

## கோழிக்கழிவுகள் வீசப்படுவதால் வீதியில் துர்நாற்றம்

வட்டுக்கோட்டை,ஒக்.30

சித்தன்கேணி, அந்தரான் வீதியில் இரவு வேளைகளில் மூடையாகக்கட்டி வீசப்படும் கோழிக்கழிவுகளால் கடந்த சில தினங்களாகப் பெரும துர்நாற்றம் வீசுகின்றது.

இறைச்சித் தேவைக்காகப் பயன்படுத்தப்பட்ட கோழியின் இறகுகள், குடல் போன்ற கழிவுகள் மூடையாகக் கட்டப்பட்டு இரவு வேளையில் அந்தரான் வீதியில் வீசப்பட்டு வருகின்றன.

இதனால் இப்பகுதியில் துர்நாற்றம் வீசி வருகின்றது.

சங்கானைப் பிரதேச செயலகம் உட்பட நகரத்திற்குள் நுழையும் முக்கிய பாதையாக இப்பாதையைப் பெருமளவு மக்கள் பயன்படுத்தி வருவதனால், பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (4-161)

## கரவெட்டித் தபாலகம் இடம்மாற்றம்

யாழ்ப்பாணம்,ஒக்.30

கரவெட்டித் தபாலகம் இடம்மாற்றம் செய்யப்பட்டுள்ளது. கடந்த 50 வருடத்திற்கு மேலாகச் சொந்தக் காணியின்றி, தனியார் கட்டடத்தில் இயங்கிவந்த இத்தபாலகம் கரவெட்டி சாமியன் அரசடிப் பகுதியில் மீண்டும் தனியார் கட்டடமொன்றிலேயே இயங்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (4-13-70)

# பாலங்கள் புனரமைக்கப்படுவதால் மழைக்காலத்தில் மக்கள் சிரமம்!

பரந்தன்,ஒக்.30

மழைக் காலங்களிலே பாலங்களைப் புனரமைக்கும் பணிகளை மேற்கொள்வதனால் போக்குவரத்துக்குப் பெரும் இடையூறுகள் ஏற்படுவதாக மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

பரந்தன், முல்லைத்தீவு பிரதான வீதியில் 6 ஆம் 7 ஆம் மைல் கல்களிலுள்ள பிரதான பாலங்கள் இரண்டும் அண்மை நாள்களாகப் புனரமைப்புச் செய்யப்பட்டு வருகின்றன.

இதில் கனகராயன் ஆற்று இரும்புப்பாலத்தை புனரமைப்பதற்காக அதற்கு அருகில் ஆற்றுக்குக்குறுக்காக நீர்போக்குக் குழாய்கள் வைக்கப்பட்டு தற்காலிகமான ஒரு வீதி அமைக்கப்பட்டிருந்தது.

தற்போது பெய்து வரும் கடும் மழையால் நீர் குழாயினூடாகப் பாயமுடியாது குழாய் வெளியே தள்ளப்பட்டுள்ளது.

தற்போது இவ்வீதியால் வாகனங்கள் போக்குவரத்துச் செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் வட்டக்கச்சி ஊடாகவே வாகனங்கள் போக்குவரத்தை மேற்கொள்கின்றன.

எனினும், தொடர்ந்து மழைபெய்தால் வட்டக்கச்சி. புளியம்பொக்கணைப் பெரியகுளத்திலிருந்து வான்பாயும் ஆற்றுத் தண்ணீரால் வீதிப் போக்குவரத்து முற்றாகத் தடைப்பட்டு விடுமோ என மக்கள் அஞ்சுகின்றனர்.

இதேவேளை -

கிளிநொச்சி - இராமநாதபுரம் பாலத்திலும் இதே நிலையே காணப்படுகின்றது. தற்போது பெய்து வரும் அடை மழையால் இப்பாலத்தின் திருத்த வேலைகள் இடைநிறுத்தப்பட்டிருக்கின்றன.

பாலத்துக்கு மேலாக வெள்ளம் மேவிப் பாய்கின்றது. இதற்கு அருகில் அமைக்கப்பட்ட தற்காலிக பாதையில் நீர் ஓடக்கூடிய குழாய்கள் வைக்கப்படாததால் அந்தப்பாதையும் நீரில் மூழ்கியிருக்கின்றது.

எனவே, பாரிய பாலங்களைப் புனரமைக்கும் பணியில் ஈடுபடுபவர்கள் மழைகாலத்திற்கு முன்னதாக அவற்றின் வேலைகளை முடித்திருக்கலாம் என்று மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (4-352-203)

## துணுக்காய் வலய மாணவருக்கு வழிகாட்டல் கருத்தரங்கு

துணுக்காய்,ஒக்.30

துணுக்காய் வலயத்திற்குட்பட்ட ஜி.சீ.ஈ. சாதாரண மாணவர்களுக்கான பரீட்சை வழிகாட்டல் கருத்தமர்வுகள் கடந்த 21 ஆம் திகதி தொடக்கம் நடத்தப்பட்டு வருகின்றன. எதிர்வரும் 9 ஆம் திகதி வரை இக்கருத்தமர்வுகள் நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.(4-391)

## மாணவ தலைவர்களுக்கு சின்னம் சூட்டுவிழா

மல்லாவி,ஒக்.30

மல்லாவி மத்திய கல்லூரியின் 2004 ஆம் ஆண்டிற்கான மாணவத் தலைவர்களுக்கான சின்னம் சூட்டுவிழா கடந்த 22 ஆம் திகதி அன்று கல்லூரியின் ஒழுக்காற்றுக்குழுச் செயலாளர் செல்வி பாஸ்கரி சண்முகநாதன் தலைமையில் நடைபெற்றது.

சிரேஷ்ட மாணவத் தலைவராக செல்வன் செ.துஸ்யந்தன், சிரேஷ்ட மாணவ தலைவியாக செல்வி இ.இராசசாளினியும் பொறுப்பேற்றுக்கொண்டனர்

புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட 15 மாணவத் தலைவர்களுக்கும் சின்னம் சூட்டப்பட்டது. மேற்படி நிகழ்வில் துணுக்காய் கோட்டக் கல்விப்பணிப்பாளர் ஆ.சுந்தரமூர்த்தி சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டார். (4-322)




## சாரதி அனுமதிப்பத்திரம் வழங்க கிளிநொச்சியில் நடமாடும் சேவை

கிளிநொச்சி,ஒக்.30

கிளிநொச்சிப் பிரதேசத்தில் சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கலுக்கான நடமாடும் சேவை எதிர்வரும் 13 ஆம், 14 ஆம் திகதிகளில் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நடைபெறவுள்ளது.

இச்சேவையின்போது அனுமதிப்பத்திரம் பெறுவதற்கான எழுத்துப்பரீட்சை இடம்பெறும். இதில் சித்தியடைவோருக்கான செயன்முறைப பரீட்சை வேறொரு தினத்தில் நடத்தப்படும்.

கடந்த வருடம் ஒக்ரோபர் மாதம் இச்செயலகத்தில் நடத்தப்பட்ட எழுத்துப் பரீட்சையில் சித்தியடையத் தவறியோரும் இப்பரீட்சைக்குத தோற்றலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் அவர்களின் முன்னைய விண்ணப்பங்கள் காலாவதியாகியுள்ளமையினால் அவர்கள் ஏனைய ஆவணங்களுடன் புதிய விண்ணப்பங்களை சமர்ப்பிக்குமாறும், அத்தோடு அனைத்து விண்ணப்பதாரிகளும் நவம்பர் 05 ஆம் திகதிக்கு முன்பாக மாவட்டச் செயலகத்தில் சுட்டிலக்கத்தினைப் பெற்றுப் பரீட்சைக்குச் சமுகமளிப்பதனை உறுதிப்படுத்தல் வேண்டுமெனவும் தவறும் பட்சத்தில் பரீட்சைக்குத் தோற்ற இடமளிக்கப்படமாட்டாது எனவும் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தி.இராசநாயகம் தெரிவித்துள்ளார். (4-305 - 203)

## வாய்க்கால்களாக மாறியுள்ள கிளிநொச்சிப் பிரதேச வீதிகள்!

பரந்தன்,ஒக்.30

கிளிநொச்சிப் பிரதேசத்திலுள்ள பல கிராமங்களில் உள்ள வீதிகள் புனரமைக்கப்படாதுள்ளமையினால் மழை காலத்தில் அவை வாய்க்கால்களாக மாறியுள்ளன.

உருத்திரபுரம் கிராமத்திலுள்ள 8 ஆம் வாய்க்கால், 10 ஆம் வாய்க்கால் பகுதிகளிலுள்ள வீதிகள் யாவற்றிலும் தண்ணீர் நிரம்பிப் பாய்கிறது.

இதனால் மாணவர்கள், அரசதிணைக்களத்தவர் போன்றோர் போக்குவரத்தினை மேற்கொள்ள பெரும் சிரமமடைகின்றனர்.

அத்துடன் உருத்திரபுரம் கரடிப்போக்கு வீதியால் சிவநகர் கிராமம் வரை செல்லும் பிரதான வீதிகூட திருத்தப்படாது குண்டும் குழியுமாகவே காணப்படுகின்றது.

இது தொடர்பாக எந்தவொரு நிறுவனங்களோ, திணைக்களங்களோ கவனத்திற்கொள்ளாது இருக்கின்றமை மிகவும் கவலைக்குரிய விடயம் எனவும, உரியவர்கள் இதனை கவனத்தில் எடுத்து உரிய நடவடிக்கைகளைச் செய்யுமாறும் மக்கள் கோரிக்கை விடுத்து வருகின்றனர். (4-352-203)

## முல்லைத்தீவு மாவட்டத்தில் மாடுகளை வெட்டுவோர் மீது கடுமையான நடவடிக்கை!

முல்லைத்தீவு மாவட்டத்தில் இறைச்சிக்காக மாடுகளை வெட்டுவோர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று முல்லை மாவட்ட சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள மாடுகளுக்கு கால்வாய் நோய் இருப்பதன் காரணமாகவே மாடு வெட்டுவதற்குத் தடை விதிக்கப்பட்டிருப்பதாகச் சுகாதாரப் பிரிவினர் தெரிவிக்கின்றனர்.

ஏற்கனவே கிளிநொச்சி மாவட்டத்திலும் இந்தத் தடை இருந்தபோதும் கிளிநொச்சி மாவட்டத்திற்கான தடை தற்போது நீக்கப்பட்டு இருப்பதாகவும் முல்லைத்தீவில் இந்த தடை தொடர்ந்தும் இருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (4-164)

## ஆசிரியர்களுக்கான வதிவிடப் பயிற்சி

கிளிநொச்சி,ஒக்.30

முன்சேவைப் பயிற்சியினைப் பெறாத ஆசிரியர்களுக்கான ஒன்பது நாள் வதிவிடப் பயிற்சி வகுப்புகள் இன்று தொடக்கம் கிளிநொச்சியில் நடைபெறவுள்ளன. (4-117)

## தென்மராட்சி வலயத்தின் தாச்சிப் போட்டிகள்

தென்மராட்சி,ஒக்.30

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளுக்கிடையில் நடத்தப்பட்ட ஆண், பெண் இருபாலருக்குமான தாச்சிப் போட்டிகளில் முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களுக்கான போட்டிகள் அடுத்த மாதம் 2 ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு கைதடி விக்னேஸ்வரா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளன.

மூன்றாம் இடத்திற்கான போட்டியில் பங்குபற்றும் அணிகள் பற்றிய விவரம் வருமாறு:

- ஆண்கள்

வரணி வடக்கு சைவப்பிரகாச வித்தியாலயம் எதிர் விடத்தற்பளை கமலாசனி வித்தியாலயம்.

- பெண்கள்

சாவகச்சேரி மகளிர் எதிர் கைதடி விக்னேஸ்வரா வித்தியாலயம்.

முதலாம் இடத்திற்கான போட்டியில் பங்குபற்றும் அணிகளின் விவ்ரம் வருமாறு:

- ஆண்கள்:

கைதடி விக்னேஸ்வரா வித்தியாலயம் எதிர் கைதடி முத்துக்குமாரசாமி ம.வி.

- பெண்கள்:

கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி. எதிர் மிருசுவில் றோ.க.த.க.பாடசாலை.

தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா தலைமையில் நடைபெறும் இப்போட்டிக்கு முதன்மை விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய முன்னாள் நிதி உதவியாளர் சி.கந்தராசா கலந்துகொள்ளவுள்ளார். (10-117)

## மத்தியஸ்தர் சேவையில் ஐம்பது வருடங்களைப் பூர்த்தி செய்த கப்டன் குணசிங்கம் கௌரவிக்கப்பட்டார்

யாழ்ப்பாணம்,ஒக்.30

யாழ்.உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத் தலைவர் கப்டன் டி.ஏ.எம்.குணசிங்கம் உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சேவையில் 50 வருடங்களைப் பூர்த்தி செய்ததையிட்டுக் கடந்த புதனகிழமை ஈச்சமோட்டையில் அமைநதுள்ள சங்கப் பணிமனையில் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டார்.

யாழ்.உதைபந்தாட்ட லீக்கின் தலைவர் எஸ்.கிளிபேட் அன்ரனிப்பிள்ளையின் தலைமையில் இக்கௌரவிப்பு நிகழ்வு இடம்பெற்றது.

இந்நிகழ்வின் முதன்மை விருந்தினராக யாழ்.மறை மாவட்ட இளையோர் ஆணைக்குழு இயக்குநர் அருட்தந்தை சாள்ஸ் கொலின்ஸ் அடிகள் கலந்துகொண்டார்.

மத்தியஸ்தர் சேவையில் 50 வருடங்களைப பூர்த்தி செய்த கப்டன் டி.ஏ.எம். குணசிங்கத்திற்கு யாழ்.உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத்தின் உபதலைவரான கே.நாகேந்திரம் 'நடுநிலைமைச் செம்மல்' என்னும் பட்டம் வழங்கி பொன்னாடை போர்த்துக் கௌரவித்தார்.

யாழ்.மத்தியஸ்தர் சங்கத்தினரினால் வழங்கப்பட்ட நினைவுக் கேடயம் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்ட அருட் தந்தை சாள்ஸ் கொலின்ஸ் அடிகளால் கப்டன் டி.எம்.குணசிங்கத்திற்கு வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வில் விளையாட்டுத்துறையைச் சேர்ந்த பல பிரமுகர்களும் மத்தியஸ்தர் சங்க உறுப்பினர்களும் கலந்து சிறப்பித்தனர். (10-86-190)

## இணுவில் கலாஜோதி விளையாட்டுக் கழக அணி சம்பியனானது

யாழ்ப்பாணம்,ஒக்.30

'போறூட்' நிறுவனத்தினால் அதன் திட்டக் கிராமங்களில் உள்ள இளைஞர் கழகங்களுக்கிடையில் நடத்தப்பட்ட கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இணுவில் கலாஜோதி விளையாட்டுக்கழக அணி சம்பியனானது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ்.இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இறுதியாட்டத்தில் ஊர்காவற்றுறை விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து விளையாடிய இணுவில் கலாஜோதி விளையாட்டுக்கழக அணி சம்பியனானது. (10-190)



யாழ்.உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத் தலைவர் கப்டன் டி.ஏ.எம்.குணசிங்கம் 50 வருட சேவையைப் பூர்த்தி செய்ததையொட்டி நடைபெற்ற கௌரவிப்பு நிகழ்வில் கப்டன் குணசிங்கம் (மத்தியில்) உட்பட விருந்தினர்கள் அமர்ந்திருப்பதை முதற் படத்திலும், நிகழ்வில் கலந்துகொண்டோரில் ஒரு பகுதியினரை அடுத்துள்ள படத்திலும் காணலாம். (படங்கள்:தீபன்)




## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஒக்.30

இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனமும் பாடசாலைகள் உதைபந்தாட்டச் சங்கமும் இணைந்து நடத்தவுள்ள 13 வயதுப் பிரிவினருக்கான உதைபந்தாட்டப் போட்டிகளை யாழ்ப்பாணத்தில் நடத்துவது தொடர்பான கலந்துரையாடல் எதிர்வரும் 2 ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு யாழ்.மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது. (10-190)

## நடுவர்களைத் தெரிவுசெய்ய இலவசப் பயிற்சி வகுப்புக்கள்

யாழ்ப்பாணம் கிரிக்கெட் மத்தியஸ்தர் சங்கத்தின் மத்தியஸ்தர்களைத் தெரிவு செய்வதற்கான இலவசப் பயிற்சி வகுப்புகள் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணிக்கு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் ஆரம்பமாகவுள்ளன.

இவ்வகுப்புகளில் கிரிக்கெட் விதிகள் சம்பந்தமாக பயிற்றுவிக்கப்படவுள்ளன. பயிற்சி வகுப்புகளில் கலந்துகொள்ள விரும்புபவர்கள் நாளை காலை 10.30 மணிக்கு யாழ்.இந்துக் கல்லூரிக்குச் சமூகம் தந்து வகுப்புகளில் கலந்துகொள்ளும்படி யாழ்ப்பாண மத்தியஸ்தர் சங்கச் செயலாளர் கேட்டுள்ளார்.

வகுப்புக்கள் தொடர்ந்து ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் காலை 10.30 மணிக்கு இடம்பெறும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.(10-86)

## விளையாட்டு விழா

யாழ்ப்பாணம்,ஒக்.30

மானிப்பாய் பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தால் நடத்தப்படும் சண்டிலிப்பாய் வடக்கு சிவசக்தி முன்பள்ளி மாணவர்களின் விளையாட்டுவிழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் நடைபெறவுள்ளது.

இவ்விளையாட்டுப் போட்டிகள் யாவும் மானிப்பாய் பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் த.சிவலிங்கம் தலைமையில் நடைபெறும். (10-13)

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## வீடு விற்பனைக்கு

இல.70, புங்கங்குளம், புகையிரத நிலைய வீதி, யாழ்ப்பாணத்தில் உள்ள 2½ பரப்புக் காணியில் அமைந்த வீடு, கிணற்றுடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: வ.கமலாதேவி, இல.156, கண்டி வீதி, யாழ்ப்பாணம். (37975)

யாழ்ப்பாணம், பிரதான வீதியில் இரண்டாம் குறுக்குத் தெருச் சந்திக்கு அருகில் ஒரு பரப்பு 2 குளி சுற்றுமதிலுடனும் நன்னீர்த் தண்ணீர் மற்றும் ரொயிலற் அட்டாஜ் பாத்ரூம் வசதிகளுடன் கூடிய வீடு உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: 0776-111419, 0776-681914. (38049)

## வீடு, காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், கந்தர்மடம், இந்து மகளிர் கல்லூரி ஒழுங்கையில், பல்கலைக்கழகம், பேபி ஸ்ரூடியோ - இந்து மகளிர் கல்லூரி சுற்றாடலில் மேல்மாடி வீட்டுடன் இரண்டு பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: K.குமாரகுலசிங்கம், ஏழாலை வடக்கு, T.P.: 077-6125140. (38030)

## கோழிக்குஞ்சு விற்பனைக்கு

**Prima Broiler** குஞ்சுகள் (2 நாள்), பேட்டுக்குஞ்சுகள் (2 நாள் - ஒருமாதம் வரை) உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: க.தனபாலசிங்கம் (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (38006)

## இறைச்சிக் கோழிகள் விற்பனைக்கு

புறொயிலர் இறைச்சிக்கோழிகள் மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனைக்குண்டு. வியாபாரிகளுக்குக் கழிவு வழங்கப்படும். தொடர்பு: றாஜீவ் கால்நடைத் தீவன விற்பனை நிலையம், சண்டிலிப்பாய்ச் சந்தி, றாஜீவ், ஆனைக்கோட்டைச் சந்தி. T.P.No:222 3529, 222 2867. (38104)

## மோ.சைக்கிள் வாடகைக்கு

மணித்தியாலம் மற்றும் நாளாந்த வாடகைக்கு இருபாலாருக்கும் மோட்டார் சைக்கிள் வழங்கப்படும். தொடர்பு: 360/5, பிரதான வீதி (பஸ்தியன் சந்திக்கு அருகில்), யாழ்ப்பாணம். T.P.:0776 544544. (37943)

## கோழிக்குஞ்சு விநியோகம்

மிகவும் தரமான இரண்டு முறை தடுப்பு மருந்து வழங்கப்பட்ட **Prima Original Broiler** குஞ்சுகள், பேட்டுக்குஞ்சுகள் 8.11.2004 திங்கட்கிழமை விநியோகிக்கப்படும். பருத்தித்துறை - நெல்லியடிக்கிளையிலும், சூட்டி பாம - வட்டுக்கோட்டை, R.S.K.பாம் - உடுவில், சுன்னாகம், ஜங்கரன் - திருநெல்வேலி, முருகன் - சாவகச்சேரி, நல்லூர் பாம் சென்ரர்-19, முருகேசர் ஒழுங்கை, யாழ்ப்பாணம். (38067)

பகிரா புறொயிலர் குஞ்சுகள் இன்றுமாலை விநியோகிக்கப்படும். பதிவுகளை மேற்கொள்ளவும். றாஜீவ், ஆனைக்கோட்டைச் சந்தி, ஸ்ரீராம், பருத்தித்துறை பஸ்நிலையம் முன்பாக, P.ரவி, தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி, றஞ்சித், 517, ஸ்ரான்லி றோட், T.P.No:222 3529. (38105)

## தவறிவிட்டது

சென்.பத்திரிசியார் கல்லூரியில் இருந்து கோவில் வீதி வழியாக நல்லூருக்கும் நெல்லியடிக்கும் இடையில் பவுண் கைச்சங்கிலி ஒன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் த.பத்மநாதன், 111/13, இராஜசிங்கம் வீதி, திருநகர் என்ற முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். T.PNo 021-2223450. (38100)

## வீடு வாடகைக்கு

நல்லூர், நீராவியடி, கொக்குவில் பகுதிகளில் சிறிய குடும்பம் ஒன்றுக்கு வாடகைக்கு வீடு தேவை. தொடர்பு:222 5660. (சி-38559)

## வயோதிபரை மோதியவர் பொலீஸாரால் கைது

அச்சுவேலி,ஒக்.30

கடந்த மாதம் அச்சுவேலி, ராஜ வீதி தோப்புப் பகுதியில் வயோதிபரை மோட்டார் சைக்கிளால் மோதிவிட்டுத் தப்பிச் சென்று தலைமறைவாகியிருந்த நபரை நேற்று அச்சுவேலிப் பொலீஸார் கைது செய்துள்ளனர்.

கடந்த மாதம் அச்சுவேலி, ராஜ வீதி தோப்புப் பகுதியில் நடந்துசென்ற 78 வயதுடைய வயோதிபரை மோட்டார் சைககிளில் வந்த ஒருவர் மோதிவிட்டுத் தப்பிச்சென்றிருந்தார்.

படுகாயமடைந்த வயோதிபர் யாழ் ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டு மூன்று நாள்களின் பின்னர் உயிரிழந்தார்.

தலைமறைவாகியிருந்த நபரை அச்சுவேலிப் போககுவரத்துப் பொலீஸார் நேற்றுக் கைதுசெய்தனர்.

கட்டுடை, மானிப்பாயைச்சேர்ந்த வேலுப்பிள்ளை அருந்தவராசா என்பவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர் என்று தெரிவிக்கப்பட்டது. (4-7)

## இந்த மாதத்தில் இதுவரை 142.7 மி.மீ. மழை

கோண்டாவில்,ஒக்.30

கடந்த திங்கட்கிழமைமுதல் நேற்று வெள்ளிக்கிழமை காலை வரையிலான காலப்பகுதியில் 142.7 மில்லிமீற்றர் மழை பெய்துள்ளதாகத் திருநெல்வேலியிலுள்ள வானிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, இம்மாதம் இதுவரையில் 261.5 மில்லிமீற்றர் மழை பெய்துள்ளதாகவும் இவ்வருடம் இதுவரையில் 904.2 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளதாகவும் வானிலை அவதான நிலையம் மேலும் தெரிவித்துள்ளது.

தற்பொழுது தொடர்ந்து பெய்து வரும் மழை இன்னும் சில தினங்களுக்குத் தொடரும் எனவும் தெரி விக்கப்பட்டுள்ளது. (10-49-13)


## வேல் மிக்சர்

மங்களகரமான வைபவங்களுக்குத் தேவையான றிச் கேக், **Box** கேக், நெய்ப்பூந்தி, பூந்திலட்டு, மிக்ஷர், பருத்துறைவடை, மஸ்கட், மைசூர்ப்பாகு மற்றும் சிற்றுண்டி வகைகளையும் ஓடர்செய்து பெற்றுக்கொள்ளலாம். இவை சுத்தமான குக்ஸ் ஒயில் மூலம் சுகாதாரமுறையில் தயாரிக்கப்பட்டவை.

**வேல் மிக்சர்**
960, கே.கே.எஸ். வீதி, நாச்சிமார் கோயிலடி,
யாழ்ப்பாணம்.
(38077) **T.P.:077 670 1461.**


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும்
### வீட்டுக்கிருத்திய அழைப்பும்

அன்னை மடியில் 03 - 09 - 1947



ஆண்டவன் அடியில் 01 - 10 - 2004

அமரர் **தாமோதரம்பிள்ளை மகாதேவன்**

எம் குடும்ப ஒளி விளக்கே!
"குட்டி" என்னும் குணவானே!
மக்கள் மனங்கவர் மகாதேவா!
மாதம் ஒன்று ஆனாலும்
மாறாது உம் துயரம்
மலர் தூவி இறைஞ்சுகின்றோம்
உம் ஆத்மா சாந்தி அடையட்டும்.

நாளை (31.10.2004) ஞாயிற்றுக்கிழமை அதிகாலை எமது இல்லத்தில் நடைபெறவுள்ள அந்தியேட்டிக் கிரியைகளில் கலந்துகொண்டு அன்னாரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திப்பதோடு, அன்றையதினம் நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் பணிவுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

ஆண்டிச் செட்டியா வளவு, வல்வெட்டி. (38101)(34-18-17)
**மனைவி, சகோதரி, சகோதரர்கள், மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

## தேவை

பட்டயக் கணக்காளர் நிறுவனம் ஒன்றிற்கு கணக்காய்வுப் பயிலுநர்கள் தேவை.
தங்களுடன் தொடர்புகொள்ளக்கூடிய தொலைபேசி இலக்கத்துடன் உடன்விண்ணப்பிக்கவும்.
140, பலாலி வீதி,
திருநெல்வேலி.
(சி-38556)

## காட்சியறை தேவை
### வாடகைக்கு/குத்தகைக்கு

*இலங்கையின் வீட்டுப்பாவனைமின் உபகரணங்கள் விற்பனையில் முன்னணி வகித்துக்கொண்டிருக்கும் நிறுவனம் தனது வியாபார வலையமைப்பை யாழ். மண்ணில் மேலும் விரிவாக்கும்முகமாக நெல்லியடி, சுன்னாகம் போன்ற பிரதேசங்களில் தனது காட்சியறைகளை அமைப்பதற்குத் திட்டமிட்டுள்ளது. மேற்படி காட்சியறைக்கான இடத்திற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.*

*சதுர அடி 1250 ஆகவும், காட்சியறையின் முகப்புத் தோற்றம் குறைந்தது 20 அடியாகவும் இருத்தல் அவசியம். முக்கியமாக நகரின் வியாபாரச்சூழலில் அமைந்திருப்பதும் அவசியம். விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி:*

விளம்பர இல.2417,
(சி-38551) C/o, உதயன், யாழ்ப்பாணம்.

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம், 1973இல் பிறந்த, லண்டனில் பிரஜாவுரிமை பெற்ற, பூரட்டாதி முதலாம பாதம், 8¼பாவம் உள்ள, செவ்வாய்க்குற்ற மற்ற மகனுக்குப் பெற்றோர் அழகான நிறமான படித்த 5'2" மேல் 5'4"இற்குள் உயரம் உள்ள மணமகளைத் தேடுகின்றார்கள். பெற்றோர் யாழ்ப்பாணத்தில் ஒரு வாரகாலம் தங்கி இருப்பார்கள். உடன் தொடர்புகொள்ளவும். முகவரி:
**ஈச்சமோட்டை, 20, கடற்கரை வீதி, யாழ்ப்பாணம்.**
(38069) T.P.No.: 0777-078803.

# மரண அறிவித்தல்கள்

## திருமதி செல்லையா உருத்திராதேவி

புங்குடுதீவு, 6ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் 36/17, பிரம்படி லேன், கொக்குவிலை வதிவிடமாகவும் கொண்ட திருமதி செல்லையா உருத்திராதேவி (மகேஸ்வரி) அவர்கள் நேற்று (29.10.2004) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் அம்பலவாணர் செல்லையா அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற மயில்வாகனம் - சிவக்கொழுந்து அவர்களின் மகளும் அம்பலவாணர் - மருதநாயகம் அவர்களின் மருமகளும் உதயகுமார் (பிரான்ஸ்), உதயபவானி (பிரான்ஸ்), காலஞ்சென்ற உதயராணி மற்றும் உதயரஜனி (ஜேர்மனி), உதயரமா (ஜேர்மனி), சசிகலா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் சாமினி, சிவராசலிங்கம், கருணானந்தன்,பாக்கியநாதன்,ஜெயலிங்கம் ஆகியோரின் அன்பு மாமியாரும் தவமணிதேவி (கனடா) அவர்களின் அன்புச் சகோதரியும் ஆறுமுகம் (கனடா), காலஞ்சென்ற நமசிவாயம் திருமேனிப்பிள்ளை மற்றும் ஆறுமுகம் செல்லம்மா ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய தகவல் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

36/17, பிரம்படி லேன்,
கொக்குவில். (38102)(42-34-18-17)
தகவல்: **அ.செல்லையா,** (கணவர்).

## திருமதி கந்தையா சின்னத்தங்கம்

மட்டுவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் 64/2, வைமன் வீதி, நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கந்தையா சின்னத்தங்கம் 28.10.2004 வியாழக்கிழமை இரவு காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா - செல்லாச்சி தம்பதிகளின் அன்புப் புதல்வியும் காலஞ்சென்ற கந்தையாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற விசாலாட்சி மற்றும் சிவக்கொழுந்து, இராசரத்தினம், தில்லைராசா, கயிலேஸ்வரி, சந்தானலட்சுமி, காலஞ்சென்ற தியாகராஜா மற்றும் தேவநேசன் (ஆசிரியர், யா/மட்டுவில் கமலாசனி வித்தியாலயம்), சிவநேசன் (ஜேர்மனி), பவளமலர், சத்தியவதனி ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்ற வேலாயுதபிள்ளை மற்றும் ஐயாத்துரை, தெய்வானைப்பிள்ளை, பராசக்தி, சோமசுந்தரம், மார்க்கண்டு, சசிகலா (ஆசிரியை,யா/சென்.ஜேம்ஸ் மகளிர் பாடசாலை), சாந்தினி (ஜேர்மனி), ஜெகநேசன், சற்குணசீலன் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.10.2004) சனிக்கிழமை காலை 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்றுப், பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

64/2, வைமன் வீதி,
நல்லூர்.
T.P.:070 6569790. (38098)(34-17-18)
தகவல்: **க.தேவநேசன்** (மகன்).

## சிதம்பரநாதன் வைத்தியநாதன்
**(யாழ்ரன் மார்க்கட் முகாமையாளர்)**



நீர்வேலி வடக்கைப் பிறப்பிடமாகவும் கோப்பாய் இருபாலையை வதிவிடமாகவும் கனடாவில் வசித்தவருமாகிய சிதம்பரநாதன் வைத்தியநாதன் அவர்கள் 27.10.2004 புதன்கிழமை ரொறோன்ரோவில் இறைவனடிசேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சிதம்பரநாதன் - தவபாக்கியம் தம்பதிகளின் அன்புப் புதல்வனும் காலஞ்சென்ற சிவானந்தம் - புவனேஸ்வரி (கனடா) தம்பதிகளின் அன்பு மருமகனும், ஆனந்தேஸ்வரி (ராணி - முன்னாள் சங்கீத ஆசிரியை, வட இந்து மகளிர் கல்லூரி - கோப்பாய் கிறிஸ்தவக் கலலூரி) அவர்களின் ஆருயிர்க் கணவரும் துரைசிங்கம் (கனடா), இராஜேஸ்வரி (இலங்கை) காலஞ்சென்ற சுந்தரநடேசன், காலஞ் சென்ற முருகேசபிள்ளை, பரமேஸ்வரி (இலங்கை), கதிர்காமநாதன் (**New Jersey, USA**) ஆகியோரின் அன்புச் சகோதரரும், தயானந் தன், நித்தியானந்தன், நிர்மலானந்தன், கருணானந்தன் (கண்ணன் - யாழ்ரன் மார்க்கட் உரிமையாளர்), காலஞ்சென்ற காராளசிங்கம், செல்வநாயகம், சிவனேஸ்வரி, ஞானேஸ்வரி, குகனேஸ்வரி, புவனேஸ்வரி, பராசக்தி, ரஞ்சி, சரோஜினிதேவி ஆகியோரின் அன்பு மைத்துனரும் யோகேஸ்வரி, ஜெயா, சபாநாதன், கலா, விஜி, செல்வேந்திரகுமார், ரவீந்திரராஜா ஆகியோரின் அன்புச் சகலனும் சஜித்தா, சஜீவன், மதன், மதனிகா, சேயோன் ஆகியோரின் பாசமிகு பெரிய தந்தையும் வரதராஜன். பிறேமராஜன், விமலராஜன், றஞ்சினி, மதிவதனி, ரிரோன், தினேஷ், சுரேஷ் ஆகியோரின் பாசமிகு சிறிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 4164, **Sheppard Ave East** இல் அமைந்துள்ள **Ogden Funeral Home** இல் பார்வைக்காக நேற்றுமுதல் (29.10.2004) வெள்ளிக்கிழமை மாலை 5மணி தொடக்கம் 9மணி வரையும், இன்று (30.10.2004) சனிக்கிழமை காலை 8.30 மணிமுதல் 11.00 மணிவரையும் வைக்கப்படும். கிரியைகள் நடைபெற்றுப், பின் அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக 256 **Kingston Rd. (at Woodbine)** இல் அமைந்துள்ள **St.Johns Cemetary** மயானத்துக்கு எடுத்துச்செல்லப்பட்டு தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

தகவல்களுக்கு:

| | | |
|---|---|---|
| கண்ணன | 647-891-4484 | மைத்துனர், |
| சபா | 905-940-4044 | சகலன், |
| ராணி | 905-944-9205 | மனைவி, |
| கதிர்காமநாதன் | 732-752-2779 | சகோதரன், |
| துரைசிங்கம் | 416-431-2267 | சகோதரன். |

சோ.பவானந்தன்,
சிவகிரி,
கோப்பாய் தெற்கு, கோப்பாய். (38092)(42-34-18-17)


யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீடம் 30 ஆம் ஆண்டு நிறைவு
(சி-38238)

மாபெரும் விஞ்ஞானக் கண்காட்சி

செவ்வாய் (26.10.2004) முதல் சனி (30.10.2004) வரை

ஊடக அனுசரணை உதயன்
அனுசரணை SAAMSTECH

யாழ்ப்பாணம்
...டுக்குனி கிளை



## பாடசாலையில் கட்டடங்கள் திறந்துவைப்பு

வெளிநாடுகளில் உள்ள மிருசுவில், உசன் இராமநாதன் மகாவித்தியாலய பழைய மாண வர்களின் நிதியுதவியுடன் வித்தியாலய வளவில் அமைக்கப்பட்ட கட்டடங்கள் நேற்றுமுன்தினம் திறந்துவைக்கப்பட்டன. மண்டபம், மதில், சிறுவர் விளையாட்டு முற்றம், கணனி செயற்பாட்டு அறை, சரஸ்வதி சிலை, சேர் பொன்.இராமநாதன் சிலை ஆகியவையே திறந்துவைக்கப்பட்டன. வித்தி யாலய அதிபர் ந.நவரத்தினராஜா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் சி.சிவசரவணபவன் (சிற்பி), ஆசிரியர் ஆறு.திருமுகன், தென்மராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா, கிளிநொச்சி வலயக் கல்விப்பணிப்பாளர் ப.அரியரத்தினம் உட்படப் பலர் கலந்துகொண்டனர். (ஐ-117)

உ
முருகன் துணை

விவாஹ சுபமுகூர்த்த அழைப்பு

நிகழும் மங்களகரமான தாரண வருஷம் ஐப்பசி மாதம் 15 ஆம் நாள் (31.10.2004) ஞாயிற்றுக்கிழமை காலை 11.58 முதல் 1.00 மணிக்குள் வரும் மகர லக்கினமும் ரோகிணி நட்சத்திரமும் அபர பட்ச திருதியை சித்தயோகமும் கூடிய சுபமுகூர்த்தத்தில்

சங்கத்தானை
பிரம்மஸ்ரீ குமாரசுவாமி ஐயரின்
பௌத்திரியும்
சிவஸ்ரீ ஸ்ரீகாந்தக்குருக்கள்
மனோன்மணி அம்மா தம்பதிகளின்
ஜேஷ்ட புத்திரியுமாகிய
சௌபாக்கியவதி
ஹேமலதாவை(ஹேமா)



வண்ணார்பண்ணை
பிரம்மஸ்ரீ கனகசபாபதி ஐயரின்
பௌத்திரனும்
சிவஸ்ரீ மகாகணபதீஸ்வரக்குருக்கள்
தங்கமீனாட்சியம்மை தம்பதிகளின்
ஜேஷ்ட புத்திரன்
சிரஞ்சீவி
பிரபாகரசர்மாவிற்கு(பிரபா)
(செருத்தனைப்பதி மகா மாரியம்மன் தேவஸ்தானம், புளியங்கூடல்)

கன்னிகாதாரண பாணிக்கிரண திருமாங்கல்யதாரணம் செய்ய முருகனின் திருவருள் துணைகொண்டு பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்ட மேற்படி சுபமுகூர்த்தம் மணமகள் இல்லத்தில் நடைபெற இருப்பதால் தங்கள் பந்துமித்ர சகிதம் வந்து மணமக்களை ஆசீர்வதிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை விரும்பும்

சிவஸ்ரீ குமார ஸ்ரீகாந்தக்குருக்கள்
மனோன்மணி அம்மா தம்பதிகள்
மீனாட்சி அம்மன் கோயிலடி
சங்கத்தானை, சாவகச்சேரி.
தொலைபேசி: 077 3068853

சிவஸ்ரீ மகாகணபதீஸ்வரக் குருக்கள்
தங்கமீனாட்சியம்மா தம்பதிகள்
18, துரைராஜா வீதி
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்
தொலைபேசி: 021-222 5851.

சமாவர்த்தனம்: காலை 7.00 மணிக்கு மணமகனின் இல்லத்தில் நடைபெறும்
(இருவீட்டார் அழைப்பு)
மாலை 4.00 மணிக்கு மணமகன் இல்லத்தில் வரவேற்பு உபசாரம் நடைபெறும்.

(38135)(22-11-45)

# நிலுவைப்பணம் செலுத்தப்படாமையே நீர் விநியோகம் துண்டிக்கக் காரணம்

## நீர் வழங்கல் சபை அலுவலகம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக்.30

கந்தரோடைப் பிரதேசத்தின் சில பகுதிக ளுக்கான குடிதண்ணீர் விநியோகம் துண்டிக் கப்பட்டமைக்கு நிலுவைப்பணம் செலுத்தப் படாமையே காரணம் என்று தேசிய நீர்வழங் கல் வடிகாலமைப்புச் சபையின் யாழ்.மாவட்ட அலுவலகம் தெரிவித்துள்ளது.

கடந்த ஓரிரு தினங்களுக்கு முன்னர் அப் பிரதேசத்தின் 27 குடிதண்ணீர் விநியோகப் பகுதிகளில் 11 பகுதிகளுக்கான விநியோகம் மட்டுமே துண்டிக்கப்பட்டது. ஏனைய பகுதிகளுக கான விநியோகம் தொடர்ந்து இடம்பெற்ற போதும் சில விசமிகள் பிரதான நீர் விநியோ கக் குழாயைக் கடந்த புதன்கிழமை இரவு வெட்டிச் சேதப்படுத்தியுள்ளனர்.

இதனாலேயே அப்பிரதேசத்துக்கான குடி தண்ணீர் விநியோகம் முற்றாகத் தடைப் பட்டது. இதனையடுத்து நீர் விநியோகத்தைச் சீராக்கும் பணிகள் இடம்பெற்று வருவதாக அந்த அலுவலக வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

இப்பிரச்சினை தொடர்பாக நேற்றுப் பகல் உடுவில் பிரதேச செயலகத்தில் விசேட கலந் துரையாடல் ஒன்றும் நடைபெற்றது. ஆயினும் நிலுவைப்பணம் செலுத்துவது தொடர்பான பிரச்சினைக்கு முடிவேதும் எட்டப்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டது. (10)

# நாளை தேசிய வாய்ச் சுகாதார தினமாக அனுஷ்டிக்க சுகாதார அமைச்சு அறிவிப்பு

ஒக்ரோபர் மாதம் 31 ஆம் திகதியான நாளைய தினத்தை தேசிய வாய் சுகாதார தினமாக அனுஷ்டிக்குமாறு சுகாதார அமைச்சு அறிவித் துள்ளது.

பாடசாலை மாணவர்கள் மத்தியில் பல் வியாதியைக் குறைப்போம் என்பதே இதன் தொனிப்பொருள் ஆகும். நாளை தொடக்கம் நவம்பர் மாதம் முழுவதும் பாடசாலை மாண வர்கள் மத்தியில் பல்வியாதியை எவ்வாறு குறைக்கலாம் என்பது பற்றி நாடகங்கள், கட்டு ரைகள் மற்றும் கண்காட்சி மூலம் விழிப்பு ணர்வை ஏற்படுத்தலாம் எனவும் அமைச்சு அறி வித்துள்ளது.

இனிப்புப் பண்டங்களை அதிகம் உண்ணு தல், இரவு படுக்கைக்குச் செல்லும் முன்னர் பல்துலக்காமல் விடுவது போன்ற காரணங்க ளால் பல்வியாதிகள் ஏற்படுகின்றன. சிறுவர் கள், மாணவர்கள் தமது பற்களை வியாதி களிலிருந்து காப்பாற்ற வேண்டுமாயின் சுத்தம் பேணவேண்டும்.

எனவே இந்தத் தேசிய வாய் சுகாதார தினத்தை அனுஷ்டிப்பதன் மூலம் சிறுவர்கள், பாடசாலைகள் மாணவர்கள், முன்பள்ளிச் சிறார்கள் பகல் பராமரிப்பு நிலையங்களின் பிள்ளைகள் ஆகியோர் பயன்பெறமுடியுமென்று யாழ். பிராந் திய பதில் பல்வைத்திய அதிகாரி டாக்டர் வை. டேவிட் இரத்தினநாதன் தெரிவித்துள்ளார்.(10)

50%

யாழ்ப்பாணத்தில் SAAMSTECH இன் ஆங்கில, சிங்கள நேரடி வகுப்புகளுக்கு 50% சலுகைக் கட்டணத்துடன் பதிவுசெய்ய இறுதி சந்தர்ப்பம்

1. SAAMSTECH இன் புதிய முறையிலான வகுப்புகள் இன்று இலங்கையில் முழுமையான ஆங்கில அறிவை விருத்திசெய்யும் நோக்கில் அமைக்கப்பட்டுள்ளது.
2. SAAMSTECH இன் பாடநெறி இலக்கண ரீதியான வசன அமைப்பையும் அர்த்த ரீதியான சொற்பிரயோகத்தினையும் இல்லாமல் செய்து சரளமாகக் கதைப்பதற்கான பயிற்சியினைத் தருகிறது.
3. 12 புத்தகங்கள் கொண்ட முதல் பத்து வகுப்புகளில் சரளமாகக் கதைப்பதற்கான அடிப் படையான சொற்களும் வசனங்களும் விருத்திசெய்யப்படுகிறது. அதைக்கொண்டு அடுத்த 14 நாள்களிலும் முழுமையாகக் கதைக்கப் பயிற்சி அளிக்கப்படுகிறது.
4. விரும்பிய நாள்களில் விரும்பிய நேரங்களில் 10 இற்கு மேற்பட்ட இடங்களில் வகுப்புகள்.

நீங்களோ உங்கள் குழந்தைகளோ வழக்கமான ஆங்கில வகுப்புகளுக்கு சென்றுகொண்டு இருப்பீர்களாயின் உடனே நிறுத்துங்கள்.

ஒரு மொழியைக் கதைப்பதற்கு முன் அந்த மொழியைக் கற்பது கடினம் என்பதனைவிட கதைப் பதற்கு முன் எவ்வளவுக்கெவ்வளவு இலக்கணம் கற்றுக்கொள்கிறோமோ அவ்வளவுக்கவ்வளவு கதைக்கமுடியாத நிலை தோன்றுகிறது. ஒரு மொழி முதலில் கதைக்கவேண்டும். இலக்கண ரீதியான சிந்தனை கதைக்கமுடியாத நிலையைத் தோற்றுகிறது.

100% உத்தரவாதம்

SAAMSTECH இன் 24 வகுப்புகளில் நீங்கள் ஆங்கிலத்தையோ சிங்களத் தையோ முழுமையாகக் கதைக்கமுடியும். முழுமையாகக் கதைக்க முடியாத அனைவருக்கும் முழுப்பணமும் திருப்பித்தர உத்தரவாதம்.

கல்வித்தகுதி தேவையில்லை. எமது பாடநெறியில் 6ஆம் வகுப்பிற்கு மேற்பட்ட மாணவர்கள், இளைஞர்கள், வீட்டுப்பெண்கள், ஆசிரியர்கள், அலுவலர்கள், வங்கியாளர்கள், பல்கலைக்கழக உயர்கல்வி மாணவர்கள் மற்றும் எவரும் கலந்துகொள்ளமுடியும்.

இறுதிச் சலுகை

இன்றும் நாளையும் ஆங்கில, சிங்கள வகுப்புகளுக்குப் பதிவுசெய்யும் அனைவருக்கும் பாடக்கட்டணத்தில் 50% சலுகைக்கட்டணத்துடன் ஆங்கிலம் ரூபா 3000/-, சிங்களம் ரூபா 2000/- மட்டுமே.

இது யாழ். மாவட்டத்துக்கான இறுதிச் சந்தர்ப்பம்

அனுமதிக்கும் மேலதிக விவரங்களுக்கும்:
யாழ். தலைமையகம்: 841, Hospital Road, Jaffna.
அல்லது யாழ்ப்பாணக் கல்லூரி பட்டதாரிகள் பிரிவு.

(C/38568) (24)

SAAMSTECH
841, Hospital Road, Jaffna. 0773068968, 021 - 4591571
22 - 1/4, Galle Road, Dehiwala. 011 - 5540200

# மேசைப்பந்தாட்டப் போட்டியில் கலந்துகொள்ள 25 பேர் கொண்ட குழு திருமலை சென்றது

வலி.வடக்கு,ஒக்.30

திருகோணமலையில் இடம்பெறவுள்ள மேசைப்பந்தாட்டத் தெரிவுப் போட்டிகளில் கலந்து கொள்வதற்காக யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த 25 பேர் அடங்கிய குழுவொன்று திருகோணமலைக்குச் சென்றுள்ளது. யாழ்.மாவட்ட மேசைப்பந்தாட்ட சங்கம் நடத்திய சுற்றுப்போட்டியில் வெற்றியீட்டியவர்களே இக்குழுவில் இடம்பெறவுள்ளனர்.

இதில் 15 வீரர்களும் 10 வீராங்கனைகளும் அடங்கியுள்ளனர். பாடசாலை மாணவர்களும் பல்கலைக்கழகம், ஆசிரிய பயிற்சிக் கலா சாலை ஆகியவற்றின் மாணவர்களும் கழகங்களின் வீரர்களும் இக் குழுவில் அடங்கியுள்ளனர்.

குறிப்பாக 13 வயதுக்குள்ளான போட்டியில் கலந்துகொள்வதற்காக யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் தரம் இரண்டில் கல்வி கற்கும் ஏழு வயது நிரம்பிய செல்வன் மோகன் ஆகாஷும் பெண்கள் பிரிவில் ஜோண பொஸ்கோ பாடசாலையின் ஆண்டு மூன்றில் கல்விகற்கும் எட்டு வயது நிரம்பிய செல்வி மகேந்திரன் காருண்யாவும் யாழ்.மாவட்ட சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டு செல்கின்றமை குறிப்பிடத்தக்கது.

யாழ்.மாவட்டத்தில் இருந்து சென்றுள்ள வீர வீராங்கனைகளின் விவரம் வருமாறு:-

சென்.ஜோன்ஸ் கல்லூரியைச் சேர்ந்த எஸ்.ஆர்.கரிகரன், பி.கே.ஜெத் தரோ, கே.சாமிலன், என்.சனோந்திரா, பீ.மயூரதன், என்.யுகேந்திரா, யாழ். மத்திய கல்லூரியைச் சேர்ந்த எம்.ஆகாஷன், வி.கீதாமிர்சன், ஆர்.நிதர்சன், ஜோன.பொஸ்கோ பாடசாலையைச் சேர்ந்த செல்வி எம்.கே. காருண்யா, வேம்படி மகளிர் கல்லூரியைச் சேர்ந்த ஏ.அனுசியா, என்.சாரங்கி, எஸ்.கஜானி, யாழ்ப்பாணம் புனித கன்னியர்மடம் பாடசாலையைச் சேர்ந்த கே.யசோதா, ஏ.நிருசியா.

திருநெல்வேலி வை.எம்.எச்.ஏயின் ஆர்.சுகந்தன், யாழ்ப்பாணம் வை.எம்.சி.ஏயின் கே.வி.இம்மானுவேல், பலாலி ஆசிரிய பயிற்சிக் கல்லூரி யின் எஸ்.சிறிமைதிலி யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் ஆர்.காயத் திரி, எஸ்.பாணுரேக்கா, ஆசிரியர்களான வ.செ.மகேந்திரன், ஜே.மோகன், எம்.சிவகௌரி ஆகியோரும் சென்றுள்ளனர்.

வடக்கு - கிழக்கு மாகாண மட்டப் போட்டிகளில் வெற்றியீட்டுபவர்கள் இந்தியாவில் இடம்பெறும் போட்டிகளில் கலந்துகொள்ளவுள்ளமை குறிப் பிடத்தக்கது.

(10-86)

## மரண அறிவித்தல்

### திருமதி வல்லிபுரம் சின்னத்தங்கம்

சாவகச்சேரி, சங்கத்தானை, பெரியமாவடியைச் சேர்ந்த திருமதி வல்லிபுரம் சின்னத்தங்கம் 28.10.2004 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற வல்லிபுரத்தின் பாசமிகு மனைவியும் காலஞ்சென்ற சிவபாக்கியம், சிவசம்பு ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற இராசம்மா, பாலசுந்தரம், சௌந் தலையம்மா, காலஞ்சென்ற தியாகராசா, நவரத்தினம், குகனேஸ்வரி, தேவராசா (கௌதமன் ரேடர்ஸ், சாவகச்சேரி) ஆகியோரின் பாசமிகு தாயாரும் சிதம்பரப்பிள்ளை, தவமணி, சிவபாதம், விமலேஸ்வரி, பத்மசோதி, சிதம்பரநாதன், மகேஸ்வரி ஆகியோரின் மாமியாரும் வாசுகி, சுகிதா, சுதன், விஜிதா, வினோதா, விஜிதரன், கௌதமி, கோகுலன், திவ்வியா, குருபரன், ஜெகன், கபிலன் ஆகியோரின் அன் புப் பேர்த்தியும் சௌமியா, சதுர்ஜினி, ராகவி, சுஸ்மிதன், சுஸ்மிதா, சினேகா ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.10.2004) காலை 10.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பெரியமாவடி, சாவகச்சேரி.* (38576) (11-45) தகவல்: குடும்பத்தினர்.

## இலவச திருமணப்பதிவு

சுதுமலைப் பிரதேசத்தில் திருமணப் பதிவுகளை மேற்கொள்ளாதவர்களுக்கான இலவசத் திருமணப் பதிவு நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு சுதுமலை பிரதேச பதிவாளர் இல்லத்தில் நடைபெறவுள்ளது. யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவர்களின் வெளிக்கள மருத்துவச் செயற்பாட்டுத் திட்டத்தின் கீழ் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக மேலதிக மாவட்ட பதிவாளர் பி.ஈஸ்வரதாசன் கலந்துகொள்ளவுள்ளார். திருமணப் பதிவுகளை கே.கணேசதாசன் மேற்கொள்ளவுள்ளார். (4-202)

## புனரமைப்புக் கூட்டம்

சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலையின் அபிவிருத்திச் சபை புனரமைக்கப்படவுள்ளது.

இப்புனரமைப்புக் கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு வைத்திய அதிகாரி செ. அம்பிகைபாகன் தலைமையில் நடைபெறவுள்ளது. (4-31)


# யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி
## பொன் விபுலானந்தன் ஞாபகார்த்த நிகழ்வுகள் 2004

### காலை நிகழ்வுகள்

அகில இலங்கை ரீதியிலான
"மத்தியின் சொற்போர்க்களம்" 2004

★ காலம் : இன்று (30.10.2004) சனிக்கிழமை காலை 8.30 மணி
★ இடம் : யா/யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி
★ மங்கள விளக்கேற்றல் : பிரதம விருந்தினர்
★ வரவேற்புரை : செல்வன் க.நிமலகாந்தன் (உதவி சிரேஷ்ட மாணவ முதல்வன்)
★ தலைமையுரை : செல்வன் ச.சுரேந்திரன் (சிரேஷ்ட மாணவ முதல்வன்)
★ அதிபர் உரை : திரு.க.இராசதுரை அவர்கள் கல்லூரி முதல்வர்
★ சொற்போர் : இறுதிப்போட்டி நிகழ்வு
★ இசைவேளை : செல்வன் ம.தயாபரன்
★ கவிதை : தெ.ஹர்ஷன்
★ விபுலானந்தன் நினைவுரை : திரு.செ.பத்மநாதன் (பிரதி முதல்வர்)
★ சிறப்பு விருந்தினர் : திரு. அருண் மாஸ்ரர் (உதவிப் பொறுப்பாளர், தமிழீழக் கல்வி வலயம்)
★ பரிசில் வழங்கல்
★ பிரதமவிருந்தினர் உரை : திரு.அ.அல்பிரட் (முன்னாள் கல்விப் பணிப்பாளர், தமிழ்த்துறை கல்வி உயர் கல்வி அமைச்சு)
★ நன்றியுரை : செல்வன் செ.சர்வானந்தன்
★ கல்லூரிக் கீதம் : மாணவர்கள்

மாணவர் முதல்வர் சபை, அறிவிப்பாளர் கழகம், யாழ் மத்திய கல்லூரி.

★ அனுசரணையாளர் : 1. கல்லூரி லியோ கழகம், சேவைக்கழகம்
2. மிலேனியம் றெஸ்ரோறன்ஸ்
3. ஆல்சிலோன் [illegible]சாலை.

★ விளம்பர அனுசரணை:-

சிறி மீனாட்சி தங்கமாளிகை
SREE MEENAATCHI GOLD HOUSE
நவயுகம் மகிழும் புதுமலர் பூங்கா...
புதுமணத் தென்றலில் பூத்து நிற்கும் நவநாகரீக நகை உலகம்...
இல.187, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P. 222 6109
No. 187, Kasthurlar Road, Jaffna.

### மாலை நிகழ்வுகள்

மின்னொளியில் மாபெரும்
கூடைப்பந்தாட்ட இறுதிப்போட்டி 2004

★ இடம் : கல்லூரி கூடைப்பந்தாட்டத் திடல்
★ காலம் : இன்று (30.10.2004) சனிக்கிழமை
★ நேரம் : 6.00 பி.ப.
★ தலைவர் : எஸ்.சுரேந்திரன் (சிரேஷ்ட மாணவ முதல்வன்)
★ பிரதம விருந்தினர் : திரு.கஜேந்திரன் (பா.உ.யாழ் மாவட்டம்)
★ சிறப்பு விருந்தினர்கள் : திரு.எழிலன்பன் (யாழ் மாவட்ட மாணவர் அமைப்புப் பொறுப்பாளர்)
திரு.மாதுளன் (விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர்)
திரு.எஸ்.எம்.பெர்னாண்டோ (தகுதி பெற்ற கண் பரிசோதனையாளர்)
திரு.ஜீ.பற்குணராசா (செயலாளர் - பாடசாலை அபிவிருத்திச் சங்கம்)

நிகழ்ச்சி நிரல்

1. விவரப்பலகை திறந்து வைத்தல் - பிரதம விருந்தினர்
2. இறுதிப்போட்டி:- உடுவில் மகளிர் கல்லூரி எதிர் கொக்குவில் இந்துக்கல்லூரி (பெண்கள்)
யாழ்.மத்திய கல்லூரி எதிர் யாழ். இந்துக்கல்லூரி (ஆண்கள்)
3. இறைவணக்கம்: (சர்வமதப் பிரார்த்தனை)
4. வரவேற்புரை: க.நிமலகாந்தன் (உதவி சிரேஷ்ட மாணவர் முதல்வர்)
5. தலைமையுரை
6. அதிபர் உரை
7. பிரதம விருந்தினர் உரை
8. பரிசில்கள் வழங்கல்
9. நன்றியுரை: எஸ்.சர்வானந்தன்
10. கல்லூரிக் கீதம்

★ அனுசரணையாளர்கள்: எஸ்.எம்.பெர்னாண்டோ, சர்வதேச மாணவர் பேரவை, தமிழீழ விளையாட்டுத்துறை மாணவ முதல்வர் சபை,

(C-38560)(38-46-19)

யாழ்.மத்திய கல்லூரி.


## புத்தகக் கண்காட்சியும் விற்பனையும்

சாவகச்சேரி, ஒக்.30

நூலக வாரத்தையொட்டி - தென்மராட்சி வலயக்கல்விப்பணிமனையும் ஆல்சிலோன் டிஸ்ரிபியூட்டேர்ஸ் நிறுவனமும் இணைந்து நடத்தும் மாபெரும் புத்தகக் கண்காட்சியும் புத்தக விற்பனையும் சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியில் இன்றும், நாளையும் காலை 9.30 மணி தொடக்கம் பிற்பகல் 4.30 மணிவரையும் நடைபெறவுள்ளது.

பாலர் பிரிவு மாணவர் தொடக்கம் பல்கலைக்கழக மாணவர்கள் வரைக்கும் தேவையான புத்தகங்கள் கண்காட்சியில் காட்சிப்படுத்தப்படவுள்ளன என்றும் - சகல வகுப்பு மாணவர்களையும் கலந்து பயன் பெறுமாறும் தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா தெரிவித்துள்ளார். (4-31-117)

## தென்மராட்சி வலய மாணவர்களுக்கான தையல் போட்டி

சாவகச்சேரி,ஒக்.30

தென்மராட்சி வலயக் கல்விப் பணிமனைக்குட்பட்ட ஆரம்பப் பிரிவு தரம் 1, 2, 3, 4, 5 ஐச் சேர்ந்த மாணவர்களுக்கான தையல் போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளதாக தென்மராட்சி ஆரம்பப் பிரிவு உதவிக் கல்விப் பணிப்பாளர் த.ஸ்ரீஸ்கந்தராசா தெரிவித்தார்.

தென்மராட்சி வலயக் கல்விப்பணிமனைக்குட்பட்ட பாடசாலைகளில், பாடசாலை மட்டத்தில் தெரிவான மாணவர்களே இப்போட்டிகளில் பங்குபற்றவுள்ளனர்.

நாளை இப்போட்டியில் தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வு இந்துக் கல்லூரி பிரதான மண்டபத்தில் ஆரம்பப் பிரிவு உதவிக கல்விப்பணிப்பாளர் த.ஸ்ரீஸ்கந்தராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்விப்பணிப்பாளர் வ.செல்வராசா கலந்துகொள்வார்.

# நான்காவது ஆண்டு நினைவஞ்சலி



## அமரர் கந்தையா மயில்வாகனம்

(முன்னாள் நகரபிதா, சாவகச்சேரி நகரசபை, சமாதான நீதிவான்)

ஆண்டுகள் நான்கு அகன்று போய்விட்டாலும்
ஆறாது உங்கள் நினைவும் எங்கள் கவலையும்
உங்கள் வழி நடத்தலில் நாங்கள் வாழ்ந்து
ஆத்மாசாந்தி அடையப் பிரார்த்திக்கின்றோம்.



(38103)(38-46-19)

தோற்றம் 04 - 05 - 1925
மறைவு 14 - 11 - 2000

கண்டுவில் லேன்,
சாவகச்சேரி.


ம.துஷிகரன்
(மகன்)




(C/38581)(22)

# யாழ்.மண்ணில் முதன்முறையாக
## 12x 36 அளவுகளில்
## Lazer Digital Colour Lab
## அறிமுகமாகின்றது.

இன்று முதல் எமது சேவையினை தரமாகவும், விரைவாகவும் பெற்றுக் கொள்ளலாமென மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.




MOORTHY

MOORTHY LAZER DIGITAL COLOUR LAB
JAFFNA ROAD, MANIPAY. T.P.:021 - 222 2884
e - mail moorthy lazer@ yahoo.com.

(சி-38580)(43-11-16)

# கண்ணீர் அஞ்சலி

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்து மெய்யியல் சிறப்புக் கலை 2 ஆம் வருட மாணவன்

**செல்வன்**
**சீவரெத்தினம் விவேகானந்தமூர்த்தி**
**(றாயு- மட்டக்களப்பு)**



அவர்களின் திடீர் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தவருக்கும் நண்பர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

கவின்கலை மன்றம் R.A.F.A
கலைப்பீடம்,
யாழ்.பல்கலைக்கழகம்.

(38119)(43-11-16)

# கண்ணீர் அஞ்சலி

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக 2 ஆம் வருட கலைப்பீட மாணவன்

**செல்வன்**
**சீவ்ரெத்தினம் விவேகானந்தமூர்த்தி**
**(றாயு)**



அவர்கள் நேற்று (29.10.2004) வெள்ளிக்கிழமை அகால மரணமடைந்ததையிட்டு அதிர்ச்சியும் வேதனையும் ஆறாத்துயரமும் அடைகின்றோம். அவரை இழந்து தவிக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

முகாமைக் கற்கைகள்
வணிகபீடம் (M.C.S.U)

(38127)(43-11-16)

# கண்ணீர் அஞ்சலி

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக 2 ஆம் வருட கலைப்பீட மாணவன்

**செல்வன்**
**சீவரெத்தினம் விவேகானந்தமூர்த்தி**
**(றாயு - மட்டக்களப்பு - காரைதீவு இந்து மெய்யியல் சிறப்புக் கலை மாணவன்)**



அவர்கள் நேற்று (29.10.2004) வெள்ளிக்கிழமை அகாலமரண முற்றதையிட்டு அதிர்ச்சியும் வேதனையும், தாளாத்துயரமும் அடைகின்றோம்.
அவரது இழப்பு ஈடுசெய்ய முடியாது அவரை இழந்து தவிக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து, ஆத்ம சாந்திக்காக இறைவனை இறைஞ்சுகின்றோம்.

யாழ்ப்பாணம்,
பல்கலைக்கழகம்.

பல்கலைக்கழக மாணவர்
ஒன்றியம் (U.S.U)

(38136)(43-11-16)

# கண்ணீர் அஞ்சலி

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக 2 ஆம் வருட கலைப்பீட மாணவன்

**செல்வன்**
**சீவரெத்தினம் விவேகானந்தமூர்த்தி**
**(றாயு - இந்து மெய்யியல் சிறப்புக் கலை மாணவன்)**



அவர்கள் நேற்று (29.10.2004) வெள்ளிக்கிழமை அகால மரணமுற்றதையிட்டு அதிர்ச்சியும் வேதனையும், தாளாத்துயரமும் அடைகின்றோம்.
அவரது இழப்பு ஈடுசெய்ய முடியாது, அவரை இழந்து தவிக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து, ஆத்ம சாந்திக்காக இறைவனை இறைஞ்சுகின்றோம்.

யாழ்.ப்ல்கலைக்கழக கலைப்பீட
மாணவர் ஒன்றியம் (A.S.U)

(38137)(43-11-16)

## நூல்கள் அன்பளிப்பு

கனடாத் திருமறைக்கலாமன்றத்தின் நிதியுதவியுடன் யாழ்.திருமறைக்கலாமன்றம் ஒரு தொகுதி நூல்களை யாழ்.பொதுசன நூலகத்திற்குக் கையளிக்கவுள்ளது. ஒரு லட்சம் ரூபா பெறுமதியான இந்த நூல்களை திருமறைக் கலாமன்றத்தின் பிரதி இயக்குநர் ஜோன்சன் ராஜ்குமார் யாழ்மாநகர ஆணையாளர் க.குணராசாவிடம் இன்று பிற்பகல் 4.30 மணிக்கு நூலகத்தில் வைத்துக் கையளிக்கவுள்ளார்.

(4-202)

## விற்பனைக்கு

1. புத்தம் புதிய 12V 200 Amp லொறி பற்றி,
2. Telephone 3 Booth என்பன விற்பனைக்குண்டு.

தொடர்பு:
315A, பரமேஸ்வராச் சந்தி (மேல்மாடி)
திருநெல்வேலி. T.P.:6637, 4591298

(38128)

## விற்பனைக்கு

VIDEO Hi 8 CASSETTE RECODER
VIDEO EDITING CONTROLLER /TITLER (FLOPPY)
VIDEO TITLER
VIDEO DIGITAL SEG
AUDIO MIXER

**ரவி வீடியோ சென்ரர்**
அன் தொலைத்தொடர்பு சேவை,
169, கச்சேரி நல்லூரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P. 021 222 5082

(38109)

## லக்சுமி சினிமா இணுவில்

விஜய் - சோனியா.
ரஞ்சிதா வடிவேல் இன்னும் பலர் நடிப்பில்
**மதுர** (ரீலஸ்)
தினசரி 11.00, 3.00, 7.00 (பு.நே)



(37967)

## ராஜா யாழ்ப்பாணம்

இப்பொழுது இந்தியாவிலும், இலங்கையிலும் ஒரே தின வெளியீடாக
ரவிகிருஷ்ணா, சோனியா அகர்வால் நடிப்பில்
**7/G ரெயின்போ காலனி** (ரீலஸ்)
காட்சிகள்: 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)
ரிக்கெட் முற்பதிவு செய்துகொள்ளலாம். (சி-38041)

## நாகம்ஸ் சினிமா சுன்னாகம்

இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின வெளியீடாக ஸ்ரீகாந்த், ஸ்நேகா மற்றும் பலர் நடிப்பில்
**போஸ்** (ரீலஸ்)
3ஆம் திகதி வரையும்
காட்சி நேரம் : 11.00 3.00 7.00. (பு.நே)



(C-37740)

## நிரஞ்சனாஸ் சங்கானை

விக்ரம், ப்டிதா, விவேக் நடித்த
**தில்** (ரீலஸ்)
காட்சி நேரம்:
11.00, 2.45, 6.00
(புதியநேரம்)
TYCUS வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 பு.நே.

## சிற்றி சினிமா பண்டத்தரிப்பு

M.G.R., ராதா சலூஜா. வீரப்பா நடித்த
**இதயக் கனி** (ரீலஸ்)
காட்சிகள் தினசரி 3.00, 7.00 (பு.நே)
சனி, ஞாயிறு 11.00, 3.00, 7.00 (பு.நே)
1ஆம் திகதி முதல் ஒற்றன்

(சி-37902)

# கண்ணீர் அஞ்சலி

யா/மட்டுவில் கமலாசனி வித்தியாலய உபஅதிபர் **திரு.கந்தையா தேவநேசன்** அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி சின்னத்தங்கம் கந்தையா**

அவர்களின் மறைவையொட்டி அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

*யா/மட்டுவில்*
*கமலாசனி வித்தியாலயம்,*
*சாவகச்சேரி.*

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்,
கல்விசாரா ஊழியர்கள்.

(38132)(43-11-16)

# துயர் பகிர்கின்றோம்

சாவகச்சேரி இந்துக்கல்லூரி ஆசிரியர்களான
**திருமதி மதிவதனி செல்வசுந்தரம்,**
**செல்வி சுதாமதி மயில்வாகனம்** ஆகியோரின்
பாசமிகு தந்தையார்

**கந்தையா மயில்வாகனம்**
**(மீசாலை மேற்கு)**

அவர்கள் காலமானதைக் கேள்வியுற்று அதிர்ச்சி அடைகின்றோம். அன்னாரது இழப்பினால் துயருறும் குடும்பத்தினரின் துயரில் பங்குகொள்வதோடு, எமது கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்குகின்றோம்.

*யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரி.* - ஆசிரிய சகோதரத்துவம்.

(சி. 38575) (43-11-16)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



| மடியில் | மண்ணில் |
|---|---|
| 1928 | 2004 |
| 11 | 10 |
| 10 | 01 |

அமரர் **பாவிலு யேக்கப் பிரான்சீஸ்**
**(சீவரெத்தினம் - ஜீவா)**
**(ஓய்வுபெற்ற உத்தியோகத்தர், காட்டு இலாகா)**

எங்கே மறைந்தாயோ எமை விட்டு
மறக்க முடியுமா உமதாற்றல்
எப்போ காண்போம் உன் எழில் வதனம்
தாங்குமா நெஞ்சம் தவிக்கின்றோம் டடி.

*32/12, ஆன்ஸ் ஹவுஸ்,*
*இரண்டாம் குறுக்குத் தெரு, பாஷையூர்.*

தகவல்:
மனைவி,மகள்.

(சி. 38577) (43-11-16)

# மரண அறிவித்தல்

**கந்தையா மயில்வாகனம்**

**(இளைப்பாறிய அதிபர், யா/அமிர்தாம்பிகை வித்தியாசாலை - சாவகச்சேரி)**

சரசாலை வடக்கு இளைப்பாறிய அதிபர் கந்தையா மயில்வாகனம் நேற்று (2004.10.29) வெள்ளிக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் சரசாலை வடக்கு காலஞ்சென்ற கந்தையா - தெய்வானைப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும் மீசாலை தெற்கு செல்வரத்தினத்தின் அன்புக் கணவரும் சாவகச்சேரி இந்துக் கல்லூரி ஆசிரியர்கள் மதிவதனி, சுதமதி ஆகியோரின் அன்புத் தந்தையும் செல்வசுந்தரத்தின் (இலங்கை மின்சாரசபை) அன்பு மாமனாரும் இளங்கதிர், பூங்கவி ஆகியோரின் அன்புப் பேரனும் ஞானப்பிரகாசத்தின் (இளைப்பாறிய தபால் நிலைய அதிபர்) அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற மீசாலை வேலுப்பிள்ளை விதானையார் தம்பதிகளின் அன்பு மருமகனும் காலஞ்சென்றவர்களான குணரத்தினம், விஜயரத்தினம், நவரத்தினம், இரத்தினம் ஆகியோரதும் தங்கரத்தினம், யோகரத்தினம், இராசரத்தினம் (குட்டி விதானை) ஆகியோரதும் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (2004.10.30) சனிக்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் அவரது மீசாலை இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கண்டி வீதி,*
*மீசாலை தெற்கு,*
*மீசாலை.*

தகவல்:
சோ.செல்வசுந்தரம்
(மருமகன்).

(38133)(43-11-16)

# தமிழ்ச்செல்வன் வன்னிக்கு திங்களன்றே திரும்புகிறார்

## அன்றே அங்கு அகாஷியுடன் சந்திப்பு

கொழும்பு.ஒக்.30

மேற்கு நாடுகளுக்கு விஜயம் செய்திருக்கும் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் திங்களன்று காலையே வன்னி திரும்புகின்றார்.

அன்றைய தினமே கிளிநொச்சியில் ஜப்பானின் விசேட தூதுவர் யசூசி அகாஷியை அவர் சந்திப்பார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

தமிழ்ச்செல்வன், விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகப் பணிப்பாளர் புலித்தேவன் மற்றும் அவர்களின் உதவியாளர்கள் அடங்கிய குழுவினர் நேற்றும் அயர்லாந்தின் டப்ளின் நகரில் தங்கியிருந்தனர்.

நோபல் பரிசுபெற்றவரான ஜோன் ஹியூமை நேற்றுப் பிற்பகல் தமிழ்ச்செல்வன் சந்திக்க விருந்தார். புலிகளின் இந்தப் பிரதிநிதிகள் குழுவினர் இன்று சுவிஸின் தலைநகர் சூரிச் செல்கின்றார்கள்.

நாளை அங்கிருந்து இலங்கைக்குப் புறப்படும் அவர்கள் நாளைமறுதினம் விடிகாலை கொழும்பை வந்தடைவர். அன்று காலை விசேட ஹெலிக்கொப்டரில் அவர்கள் வன்னி போய்ச்சேர்வார்கள்.

தற்போது இலங்கைக்கு வந்திருக்கும் ஜப்பானின் விசேட தூதுவர் யசூஷி அகாஷியும் அன்றைய தினமே (நாளை மறுதினமே) விசேட ஹெலிக்கொப்டரில் கிளிநொச்சி செல்வார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அடுத்தநாள் செவ்வாயன்று இலங்கையிலிருந்து புறப்படும் அகாஷி, அதற்கு அடுத்தநாள் புதன்கிழமை முதல் புதுடில்லியில் தமது அரசியல் சுற்றுப்பயண நடவடிக்கையில் ஈடுபடுவார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

(ஐ-க-ரி)

## விபத்தில் மூவர் காயம்!

கிளிநொச்சி,ஒக்.30

முல்லைத்தீவு - மாங்குளம் வீதியில் சென்றுகொண்டிருந்த மோட்டார்சைக்கிள் ஒன்று நேற்றுப் பகல் விபத்துக்குள்ளானதில் மூவர் காயமடைந்துள்ளனர்.

ஒட்டிசுட்டானைச் சேர்ந்தவர்களான வெள்ளியம்பலம் பிரதீபன் (வயது 25), வெள்ளியம்பலம் திலீபன் (வயது 17), தணபாலசிங்கம் கஜீபன் (வயது 18) ஆகியோரே காயமடைந்தவர்களாவர்.

இவர்களில் வெள்ளியம்பலம் பிரதீபன் படுகாயமடைந்த நிலையில் புதுக்குடியிருப்பு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

(ஐ-ரி)

## மோ. சைக்கிளிலிருந்து...

(முதலாம் பக்கத்தொடர்ச்சி)

அருகே வீதியோரம் பற்றைக்குள் வீழ்ந்த அவரது தலையில் பலமான காயம் ஏற்பட்டது என்றும் -

அவர் அவ்விடத்திலேயே உயிரிழந்தார் என்றும் கூறப்படுகின்றது.

இவர் செலுத்திச்சென்ற மோட்டார் சைக்கிளின் பின்னே வேறு இரு மாணவர்களும் கூட இருந்தனர். அவர்களில் நடுவில் இருந்து பயணித்த பாலசுப்பிரமணியம் கபிலன் (வயது 22) என்பவரும் சைக்கிளிலிருந்து வீழ்ந்து காயமடைந்தார். இவர் கொடிகாமத்தைச் சேர்ந்தவர். மூன்றாவது நபர் காயம் எதுவும் இன்றித் தப்பிவிட்டார்.

உயிரிழந்த மாணவனின் சடலம் யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டது. சடலத்தைப் பார்ப்பதற்காக பெரும் எண்ணிக்கையான பல்கலைக்கழக மாணவர்கள் ஆஸ்பத்திரியில் திரண்டிருந்தனர்.

பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸும், பீடாதிபதிகள் சிலரும் ஆஸ்பத்திரியில் சடலத்தைப் பார்வையிட்டனர்.

மரண விசாரணை நேற்றிரவு யாழ். நீதிவான் இ.த.விக்னராஜாவின் இல்லத்தில் நடைபெற்றது. நீதிவான் முன்னிலையில் சாட்சியங்கள் பதிவுசெய்யப்பட்டன.

பிரேத பரிசோதனையின் பின்னர் சடலத்தை - பல்கலைக்கழக அதிகாரி ஒருவரிடம் ஒப்படைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

மட்டக்களப்பு, காரைதீவைச் சேர்ந்த பிரஸ்தாப மாணவனின் சடலம் நேற்றிரவே இங்கிருந்து மட்டக்களப்புக்கு எடுத்துச்செல்லப்பட இருந்தது.

சடலத்தை ஏ-9 வீதிவழியே தரைமார்க்கமாக மட்டக்களப்புக்கு எடுத்துச்செல்ல அனுமதி பெறப்பட்டிருந்தது என்று தெரிவிக்கப்பட்டது. குடாநாட்டில் வீதி விபத்துக்கள் நாளாந்தம் அதிகரித்துவருகின்றன. தினமும் ஒன்று என்ற வீதத்தில் விபத்துக்களால் அவலச்சாவுகள் ஏற்பட்டுவருகின்றன.

நேற்றைய மோட்டார் சைக்கிள் விபத்து கட்டுப்பாடற்ற வேகம் காரணமாக ஏற்பட்டிருக்கிறது என்று விபத்தை நேரில் கண்டவர்கள் கூறுகின்றனர்.

மோட்டார் சைக்கிளைச் செலுத்திச்சென்ற மாணவன் தலைக்கவசம் அணியாமல் சென்றதே அவரது மரணத்துக்குக் காரணம் என்று பொலீஸ் வட்டாரங்கள் தெரிவித்தனர்.

(ஐ-6-15-86-13-189)

## இலங்கையர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஈராக் யுத்தம் காரணமாக அந்த நாட்டில் இலங்கைத் தூதரகம் செயற்படுவதில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

அதேவேளை, கடந்த நான்கு மாதங்களாக இலங்கையில் இருந்து யாரும் ஈராக்கிற்குப் பணியாளர்களாகச் செல்லவில்லை என்று வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது. அப்படிச் சென்றிருப்பின் வேறு ஒரு நாட்டில் பணியாற்றிவந்த இலங்கையர்களே அங்கிருந்து ஈராக்கிற்குச் சென்றிருக்க முடியும் என்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியக பணிப்பாளர் தெரிவித்தார்.

கடத்தப்பட்ட இரு சாரதிகளும் குவைத் நிறுவனம் ஒன்றின் ஊடாக ஈராக்கில் பணிக்கு அமர்த்தப்பட்டவர்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

(ஐ-க-ரி)

## புலிகளுக்கு...

(முதலாம் பக்கத்தொடர்ச்சி)

பேரதீவு பிரதேச சபைத் தலைவருமான துரைரட்ணம், ஜாதிக ஹெல உறுமயவின் செயலாளர் உடுவே தம்மாலோக தேரர், ஜாதிக ஹித்தே... அமைப்பின் உறுப்பினர், பல்கலைக்கழக ஆசிரியர் அமைப்பைச் சேர்ந்த ஆர்.ஜயவர்த்தன மற்றும் தேசிய பிக்கு முன்னணி, மக்கள் கலைஞர்கள் அமைப்பு ஆகியவற்றின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்தக் கூட்டத்தில் முழுக்க முழுக்க தமிழீழ விடுதலைப் புலிகளைக் கண்டித்து கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன. புலிகளின் செயற்பாடுகளைத் தடுத்து நிறுத்துவதற்கு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கை குறித்து தேசியரீதியில் திட்டங்களை முன்னெடுப்பதற்கு இந்தக் கூட்டத்தில் இணைந்திருக்கும் கட்சிகள் திடசங்கற்பம் பூண்டிருக்கின்றன எனவும் தெரிவிக்கப்பட்டது. விடுதலைப் புலிகள் மேற்கொள்ளும் படுகொலைகளையும், ஆள்கடத்தல்களையும் சர்வதேசரீதியில் பிரசாரப்படுத்துவது எனவும் அங்கு கருத்துத் தெரிவிக்கப்பட்டது.

போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் விடுதலைப் புலிகள் மேற்கொள்ளும் கொலைகளுக்குத் துணைபோகின்றனர் எனவும் கூட்டத்தில் குற்றஞ்சாட்டப்பட்டது.

விடுதலைப் புலிகளின் செயற்பாடுகளைத் தடுத்து நிறுத்துவதற்காக தென்னிலங்கையில் உள்ள ஏனைய அரசியற் கட்சிகளையும், பொது அமைப்புக்களையும் ஒருங்கிணைத்துப் பரவலாக எதிர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வது எனவும் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

(ஐ-க-ரி)

## ஆளும் தரப்பைப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாற்ற முயல்கிறது என ரணில் விக்கிரமசிங்க தமது உரையில் குற்றஞ்சாட்டினார்.

அரசமைப்பை மாற்றுவதற்கு அதிலேயே வழிமுறைகள் உள்ளன. அப்படிச் செய்வதற்குத் தேவையான மக்கள் ஆதரவைப் பெற்றுக்கொள்ள முடியாத அரசு, அரசமைப்புக்கு முரணான வகையில் அதைச்செய்ய முயலுகின்றது.

தன்னுடைய குறுகிய அரசியல் இலாபங்களுக்காக அரசு செய்யும் இந்த எத்தனம் நாட்டின் ஸ்திரத்தன்மையைப் பாதிக்கும் என்று எச்சரித்தார் ரணில்.

அரசமைப்பை மாற்றுவதற்குத் தேவையான மக்கள் ஆதரவைப் பெற்றுக்கொள்ள முடியாத இக்கட்டில் அரசு உள்ளநிலையில், அரசில் அங்கம் வகிக்கும் சிலர் புதிய அரசமைப்பை உருவாக்குவதற்கான 'அரசமைப்பு நிர்ணய சபை' ஒன்றைத் தோற்றுவிப்பதற்கு முயற்சிக்கின்றனர்.

தற்போதைய அரசமைப்புக்குப் புறம்பாக அத்தகைய அரசமைப்பு நிர்ணயசபை ஒன்றைக் கொழும்பில் கூட்டலாம் என்றால், விடுதலைப் புலிகளும் வடக்கு - கிழக்கிற்கென அத்தகைய ஒன்றைக் கூட்டமுடியும் என்று சுட்டிக்காட்டினார் ரணில்.

இந்த விடயத்தில் -

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வடக்கு - கிழக்குக்கென இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை ஒன்றை அமைக்க வேண்டும் என்ற மக்கள் ஆணையுடன் தேர்ந்தெடுக்கப்பட்ட 22 உறுப்பினர்கள் நாடாளுமன்றத்தில் இருக்கின்றார்கள் என்பதையும் நாம் மறந்துவிடக்கூடாது என நினைவுபடுத்தினார் அவர்.

அரசின் இந்த முயற்சி அமைதி நடவடிக்கைகளில் இரண்டு விதத்தில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும்.

முதலாவது - அமைதி நடவடிக்கைகளில் அரசுத் தரப்பும், எதிரணித் தரப்பும் ஒன்றுசேர்ந்து - இணைந்து - ஈடுபடுவதை அது குழப்பிவிடும்.

மற்றது - அரசுத்தரப்புப் போன்று புலிகளும் விரும்பினால் தங்களுக்கெனத் தாங்களே ஓர் அரசமைப்பு நிர்ணயசபையை உருவாக்க அது வழிவகுத்ததாகிவிடும் - என்றார் ரணில்.

சபாநாயகரைப் பதவிநீக்கும் முயற்சியிலும் அரசுத் தரப்பினர் 'ஓவர்டைம்' வேலை செய்கிறார்கள் என்றார் அவர்.

"நாங்கள் இப்போது மிக முக்கியமான நெருக்கடியான கட்டத்துக்கு வந்துள்ளோம். வருகின்ற நாள்களில் விடயங்கள் எப்படி நடக்கின்றன என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம்" - என்றும் அவர் கூறினார்.

(ஐ-க)

## அகாஷி - ஜனாதிபதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறித்து ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அகாஷிக்கு எடுத்துக்கூறினார் என்றும் -

ஜனாதிபதி செயலக செய்திக் குறிப்பு தெரிவித்துள்ளது.

அதேவேளை, நேற்றுமுன்தினம் வியாழன் ஈ.பி.டி.பியினரும் அதன் செயலாளரும், அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தலைமையில் யசூஷியை கொழும்புக்கான ஜப்பானியத் தூதுவர் இல்லத்தில் சந்தித்தனர்.

நிரந்தரத் தீர்வு ஒன்றைக் காணும் முயற்சிக்கே முன்னுரிமை வழங்கவேண்டும் என்றும்-

இடைக்கால நிர்வாகசபை புலிகளின் கைகளுக்கு வழங்கப்படுவது, தமிழ் மக்களை மேலும் அடக்கு முறைக்கே இட்டுச் செல்லும் என்றும்-

இச்சந்திப்பின்போது ஈ.பி.டி.பியினர் தெரிவித்தனர். அத்தோடு ஜப்பானின் நிதியுதவிகள், இலங்கை அரசின் ஊடாகவே வடக்கு - கிழக்கிற்கு வழங்கப்பட வேண்டும் என்றும் அவர்கள் வலியுறுத்தியுள்ளனர் என அக்கட்சியின ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.


# NORTH LANKA

**Institute of Information Technology**

பிரதான வீதி, சங்கானை. கண்டி வீதி, நுணாவில், சாவகச்சேரி.

**புதிய பிரிவுகள் ஆரம்பம்**

★ Diploma in Ms Office
★ Diploma in DTP
2 Months

**Dip. in Hardware Eng.** (1 Month)
உங்கள் கணனிகளை நீங்களே அமைத்துக் கொள்வதற்கான 100% செய்முறைப் பயிற்சி நெறி பயிற்சியின் போது ஒவ்வொரு மாணவனுக்கும் ஒவ்வொரு கணனி வழங்கப்படும். முடிவில் அக் Instalation செய்யவேண்டும்.

(38055)(30)

**Diploma in Internet & E-Mail-1 Month**
ஆரம்பம் : 01-11-2004



## மாபெரும் புலமைப்பரிசில் திட்டம் - 2005

எமது நிறுவனத்தால் ஆண்டுதோறும் கணனித்துறையிலே ஆர்வமுள்ள மாணவர்களுக்கு புலமைப்பரிசில்கள் வழங்கப்பட்டுவருகின்றன. இத்திட்டத்தின் பிரகாரம் எதிர்வரும் கல்வியாண்டு 2005/2006 இற்கான புலமைப்பரிசில் திட்டத்திற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. எதிர்வரும் கல்வியாண்டு எமது நிறுவனத்தின் 10ஆவது சிறப்பு வெற்றியாண்டு என்பதால் மாணவர்களுக்குப் பல்வேறு சலுகைகளை வழங்குவதற்கு நிர்வாகம் தீர்மானித்துள்ளது.

*விண்ணப்பிக்கத் தவறாதீர்கள்...*
*சந்தர்ப்பத்தைத் தவறவிடாதீர்கள்...*

**விண்ணப்ப முடிவு திகதி 30-11-2004**


இயக்குநர்.
IIS, யாழ்ப்பாணம்.

(சி-38571)(30-11-45)



# தீபாவளி வாழ்த்துக்கள்

ஈழ மண்ணில் வாழும் எம்மின மக்களுக்குத் தீபாவளி நல்வாழ்த்துக்களை மன மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.



தென்னிந்தியாவில் இருந்து
ஐந்தாவது முறையாக யாழ்ப்பாணம் என்னும் புண்ணிய பூமிக்கு வருகை தந்துள்ள பரம்பரை சோதிடக் கலையில் புகழ்பெற்ற சிவபால சோதிடர்

**ராஜகுருசாமி** அவர்கள்

தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு புதுப்பலன்களை அறிவதற்கு மீண்டும் யாழ். மக்களின் வேண்டுகோளுக்கிணங்கி வருகைதந்துள்ளார்.

பார்க்கும் நேரம்: காலை 9.00 மணி - மாலை 6.00 மணி
கைரேகை மட்டும் காலை 9.00மணி முதல் 1.00 மணிவரை

★ ஜாதகம் ★ கைரேகை ★ எண் கணிதம் ★ பெயர் ராசி ★ திருமணப் பொருத்தம் இவற்றில் பல வருட அனுபவம்பெற்றவர்.

(38112)(30-11-45)

**ராஜகுருசாமி**
மிலன்ஸ் மல்ரி கொம்பிளக்ஸ்
**60/1 (112), TEMPLE ROAD (Near ICRC), JAFFNA. ☎ 5867**



# நாவலர் கல்வி நிலையம்

ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

## 14ஆவது ஆண்டு விழாவும் பரிசளிப்பு விழாவும் -2004

*காலம்: இன்று (30.10.2004) சனி பிற்பகல் 2.30 மணி*
*இடம் : கல்வி நிலைய பிரதான மண்டபம்*

பிரதம விருந்தினர்: திரு. க.தேவராஜா
(தலைவர் - வணிகத்துறை, யாழ். பல்கலைக்கழகம்)
சிறப்பு விருந்தினர்: திரு. சி.இராமலிங்கம் J.P.
(கோட்டக் கல்வி அதிகாரி - பளை)
திரு. செழியன் (யாழ்., நல்லூர் கோட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர்)
தலைமையுரை: திரு. T.S. குணாளன்
(நிர்வாக இயக்குநர், நாவலர் கல்வி நிலையம்)
பரிசு வழங்கல்: திருமதி லக்ஷ்மிதேவி தேவராஜா

இறுதி நிகழ்வாக மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள் இடம்பெறும்.

பெற்றோர்கள், பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**இயக்குநர், ஆசிரியர்கள், மாணவர்கள்.**

(சி-38578)(30)

விளம்பர அனுசரணை: [illegible]
200G, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். T.P.: 021-222-2700


# மரண அறிவித்தல்கள்

## கிட்டிணர் பாலசிங்கம்

கல்வியங்காடு புதிய செம்மணி வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கிட்டிணர் பாலசிங்கம் நேற்று (29.10.2004) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் சகுந்தலையின் அன்புக் கணவரும் பத்மாவதி, தவகுமார், பிரேமாவதி, காலஞ்சென்ற நந்தகுமார் ஆகியோரின் அன்புத் தந்தையும் இராஜேஸ்வரன் (துரை), பகவதி, நேமிநாதன் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.10.2004) சனிக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*புதிய செம்மணி வீதி,*
*நல்லூர் வடக்கு.* (38138)(30-11-45)

தகவல்:
மனைவி.

## திருமதி கண்மணி சுப்பிரமணியம்

இணுவில் கிழக்கு, மஞ்சத்தடியைப் பிறப்பிடமாகவும், கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கண்மணி சுப்பிரணியம் நேற்று (29.10.2004) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியத்தின் (முன்னாள் புகையிலை வர்த்தகர், வவுனியா) அன்பு மனைவியும் காலஞ்சென்ற செல்வரட்ணம், லோகநாதன் (கொழும்பு), ராஜேஸ்வரி (கனடா), சிவலிங்கம் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், சகுந்தலாதேவி (கோண்டாவில்), புவனேஸ்வரி (கொழும்பு), லோகநாதன் (கனடா), சுசிலா (கனடா) ஆகியோரின் மாமியாரும், வத்சலா, சர்மிளா, ரஜீகரன். பிரபாளினி, கிரிதரன், சாமினி, ரதீஸ்குமார், கிரிசாந்தி, துஷாந்தி, நிசாந்தன், பிரசாந், ஆனந்த் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் அஞ்சலிக்காக இன்று சனிக்கிழமை பொரளை ஜெயரட்ண மலர்சாலையில் வைக்கப்பட்டு, நாளை (31.10.2004) ஞாயிற்றுக்கிழமை தகனக்கிரியைக்காக பொரளை பொதுமயானத்திற்கு மாலை 5 மணிக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*12, ரோகினி வீதி,*
*கொழும்பு - 06.* (சி-38582)(30-11-45)
T.P.: 0777-789624, 2594927.

தகவல்:
சு.லோகநாதன்
(Luxman Traders, Colombo).

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 30.10.2004இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.